
# பெரியபுராணக் கதைகள்



கே. வி. குணசேகரம்

# பெரிய புராணக் கதைகள்

கே.வி. குணசேகரம்

ஸ்ரீலங்கா புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

## நூல் விபரம்


நூலின் பெயர் : **பெரிய புராணக் கதைகள்**

நூலாசிரியர் : கே.வி. குணசேகரம்

முதற் பதிப்பு : நவம்பர் 2007

பதிப்புரிமை : ஸ்ரீலங்கா புத்தகசாலை

விலை : 150/-

விநியோகம் : லங்கா புத்தகசாலை
F.L. 1/14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர,
கொழும்பு - 12.
Tel : 011-2341942
Fax : 011-2459431


## என்னுரை

ஆத்தி சூடிக் கதைகள், திருக்குறள் கதைகள் ஆகியவற்றைத் தொடர்ந்து பெரிய புராணக் கதைகள் என்னும் நூல் வெளி வருகிறது. மாணவர்கள் தரம் ஒன்றிலிருந்து தரம் பதினொன்று வரை சைவ சமய பாடத்திற்காகப் பல நாயன்மார்களினது வரலாற்றைக் கற்கிறார்கள். ஆனால் முழு நாயன்மார்களினதும் வரலாற்றை அவர்கள் அறிந்து கொள்வதில்லை. அந்தக் குறையைப் போக்குவதற்காக இந்நூல் வெளி வருகிறது. சிறுவர் முதல் பெரியவர்கள் வரை இலகுவில் புரிந்து கொள்ளக் கூடிய எளிய தமிழில் இக் கதைகளை எழுதியுள்ளேன். அத்துடன் திருக்குறளுக்கு உரை எழுதுவோர் எளிதில் மாணவர்கள் விளங்கிக் கொள்ள முடியாதபடி எழுதுகின்றனர். அந்தக் குறையையும் போக்குவதற்காக மிகவும் எளிய தமிழில் மாணவர்களுக்காக திருக்குறளுக்கு உரையை எழுதி முடித்துள்ளேன். அடுத்து அது வெளி வரும். அத்துடன் பகவத்கீதைக்கு உரையும் கதையும் எழுதியுள்ளேன்.


இந்நூலின் பிரதியை ஒப்பு நோக்கி பிழைகள் திருத்திப் புதிதான சொற்களைச் சேர்த்து அழகு பொலிய அமைத்துத் தந்த தீவக கல்வி வலய கல்விப் பணிப்பாளர் திரு.ஆ.ராஜேந்திரன் அவர்களுக்கும் பிரதியைச் சரிபார்த்துத் தந்த செல்வி. ப. இறைமகளுக்கும் நல்ல தொரு வாழ்த்துரையைத் தந்துதவிய கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சமாதான நீதிபதி, தலைவர் ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் அவர்களுக்கும், இந் நூலை அச்சிட்டு வெளியிடும் கொழும்பு லங்கா பதிப்பகத்திற்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.



கே.வி. குணசேகரம்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
கோப்பாய் / நல்லூர்
20.09.2007

## வாழ்த்துரை

## சேக்கிழார் தந்த திருத்தொண்டர் சரிதை

சிவநெறிச் சிறப்பும் செந்தமிழ்ச் சுவையும் கலந்து பக்திச் சுவை சொட்டச் சொட்ட பாடப்பட்ட நூல் "பெரியபுராணம்" இதனை "திருத்தொண்டர் புராணம்" என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார். ஏழாம் நூற்றாண்டிலே சுந்தரமூர்த்தி நாயனாருடைய திருத்தொண்டர் தொகை இதற்கு முதல் நூலாக அமைந்தது. பத்தாவது நூற்றாண்டில் பாடப்பட்ட நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி இதற்கு வழி நூலாக அமைந்தது. பன்னிரண்டாவது நூற்றாண்டிலே சேக்கிழார் சுவாமிகளினால் பாடப்பட்ட பெரியபுராணம் எமக்கு விரி நூலாக எமக்குக் கிடைத்துள்ளது. "எடுக்கும் மாக்கதை" என்று குறிப்பிடுகிறார் சேக்கிழார் சுவாமிகள். செய்யுள் வடிவில் காவிய அமைப்போடு வெளி வந்த இந்நூலை, வசனரூபமாக எமக்குத் தந்தார் யாழ்ப்பாணத்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள். சொற்சுவையும், பொருட்சுவையும், காவியச்சுவையும் அமைந்த பெரிய புராணத்தை இன்று சுருக்கமாகவும், விளக்கமாகவும் சிறியோர் முதல் பெரியோர் வரை படித்துப் பயன் பெறக் கூடியதாகத் தந்திருக்கிறார்,கோப்பாய் கே.வி.குணசேகரம் அவர்கள் இவர் கோப்பாய் நல்லூர் கோட்டங்களின் கல்விப் பணிப்பாளராகப் பணிபுரிபவர். தனது கற்றல் அனுபவத்தையும், கற்பித்தல் அனுபவத்தையும் வைத்துக் கொண்டு இத்தகைய வசன நடை நூல்களைத் தமிழ் உலகத்துக்குத் தந்து வருகிறார். முன்னரே வெளியிட்ட "திருக்குறள் கதைகள்" இதற்கொரு எடுத்துக் காட்டு ஆகும்.

குணசேகரம் அவர்கள் ஆழ்ந்த சைவப் பற்றுடையவர். நாயன்மார்களையும், சிவனடியார்களையும் நன்கு போற்றுபவர். தனது கல்விக் கடமையோடு சைவ சமய வரலாறுகளை மதித்துப் பேணுபவர். இப் பெரியாருடைய பெரியபுராணக் கதைகளுக்கு வாழ்த்துரை வழங்குவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். அர்த்தமற்ற போலிக் கதைகளைப் படித்துப் படித்து மூளையைக் குழப்பும் ஒரு சாராரை இன்று கண்டு வேதனை அடைகிறோம். மானிடப் பிறவியின் புனித நோக்கத்தையும், நாயன்மார்கள் வாழ்ந்து காட்டிய தொண்டு வாழ்க்கையையும் எமது பிள்ளைகள் கற்றுத் தெளிந்து பின்பற்ற வேண்டும். அதற்கு உபகாரமாக இத்தகைய நூல்கள் வெளி வருகின்றன. இதனை வாங்கிப் படித்துப் பயன் பெற வேண்டியது கற்றோரினதும், மற்றோரினதும் பெருங்கடனாகும் என்பதைக் கூறி குணசேகரத்தை வாழ்த்தி அமைகின்றேன்.

**"மேன்மை கொள் சைவநீதி விளங்குகஉலகமெல்லாம்"**

**கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி,**
**J.P தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**



**திருச்சிற்றம்பலம்**

## சுந்தரமூர்த்தி நாயனார்

திருக்கைலாய மலையில் வீற்றிருந்து தேவர்களுக்கு அருள்பாலிக்கின்ற சிவபெருமானின் அடியவர்களுள் ஒருவர் ஆலால சுந்தரர். அவர் ஒரு நாள் சிவபெருமானுக்குப் பூசை செய்வதற்காகத் திருக்கைலாய மலையிலுள்ள நந்தவனத்திற்குச் சென்றார். அங்கே உமாதேவியாருக்கு மாலை கட்டிச் சூடுவதற்காக அனந்திகையும் கமலினியும் பூப்பறித்துக் கொண்டிருந்தனர். அவர்களின் அழகில் மயங்கிய ஆலால சுந்தரர் அவர்களின் மீது காதல் கொண்டார். அதே போல் ஆலால சுந்தரரின் அழகில் மயங்கிய அனந்திகையும் கமலினியும் ஆலால சுந்தரர் மீது காதல் கொண்டனர். இதை அறிந்த சிவபெருமான் ஆலால சுந்தரரை அழைத்துச் சொன்னார்; "சுந்தரா நீ நந்தவனத்தில் பூப்பறித்துக் கொண்டிருந்த தேவகன்னிகளான அனந்திகைமீதும் கமலினிமீதும் ஆசை கொண்டமையால் பூவுலகில் பிறந்து உனது ஆசைகளைத் தீர்த்த பின்பு இவ்வுலகம் வா"

அதைக்கேட்டுப் பயந்து நடுங்கிய ஆலால சுந்தரர்; "தேவரீர், நான் அறியாமையால் தவறு செய்து விட்டேன். என்னை மன்னித்தருளல் வேண்டும். அத்துடன் அறியாமையால் பூவுலகில் நான் தவறு செய்யும் போதெல்லாம் என்னைத் தடுத்தாட் கொள்ளல் வேண்டும்" என்றார்.

"அப்படியே ஆகட்டும்" என்றார் சிவபெருமான். ஆலால சுந்தரர் பாரத கண்டத்திலே உள்ள திருமுனைப்பாடி என்னும் நாட்டிலே சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் புத்திரனாக அவதாரம் செய்தார். பெற்றோர் அவருக்கு நம்பியாரூரர் என்று பெயர் வைத்தனர். நம்பியாரூரர் ஆதிசைவ குலத்திற்குரிய வேத,ஆகமக் கல்வியை நன்கு கற்றுத் தேறினார்.

வாலிபப் பருவத்தை அடைந்த நம்பியாரூரருக்கு அவ்வூரில் வாழ்ந்து வந்த சடங்கவி சிவாச்சாரியாரின் மகளைத் திருமணம் செய்து வைக்கச் சடையனார் விரும்பினார். அதற்குச் சடங்கவி சிவாச்சாரியார் சம்மதம் தெரிவித்தார். ஒரு சுப தினத்தில் நம்பியாரூரர் திருமணக்கோலம் கொண்டு சடங்கவி சிவாச்சாரியாரின் வீட்டில் அழகாக அமைக்கப்பட்ட திருமணப் பந்தலில் இருந்த மணவறையில் அமர்ந்திருந்தார்.

அப்பொழுது ஒரு கிழப்பிராமணர் அங்கு வந்து சபையோரைப் பார்த்துச் சொன்னார். "எனக்கும் மணக்கோலத்தில் அமர்ந்திருக்கும் நம்பியாரூரனுக்கும் ஒரு வழக்கு உள்ளது. அதைத் தீர்த்து வைத்த பின்பே திருமணம் நடைபெறுதல் வேண்டும்".

"எமக்கு உம்மைத் தெரியாது. அப்படி இருப்பினும் நீர் வழக்கு என்னவென்று சொன்னால் அது உண்மையானதாகவிருந்தால் அதைத் தீர்த்து வைத்த பின்பே எனது மகளை நான் மணவறைக்கு அழைத்து வருவேன்" என்றார் சடங்கவி சிவாச்சாரியார்.

திருமண மண்டபத்தில் அமர்ந்திருந்த அந்தணர்கள் அதற்குச் சம்மதம் தெரிவித்தனர்.

"மணக்கோலத்தில் இருக்கின்ற நம்பியாரூரன் எனக்கு அடியவன்" என்றார் கிழப்பிராமணர்.

அதைக்கேட்ட நம்பியாரூரருக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது. "ஏய் கிழப்பிராமணரே, பிராமணர்களுக்குப் பிராமணர்கள் அடிமையாக இருப்பதாக நர்ன் கேள்விப்பட்டதே இல்லை" என்றார்.

"அக்காலத்திலே உன்னுடைய பாட்டனார் எழுதித் தந்த அடிமை ஓலை இது" என்று ஓர் ஓலையை எடுத்துக் காட்டினார் கிழப்பிராமணர்.

"பித்தரே, ..... பிராமணர்களை அடிமை கொள்ளும் வழக்கம் உலகெங்கினும் இல்லை" என்று கோபமாகக் கூறிய படி முதியவரின் கையில் இருந்த ஓலையைப் பறித்துக் கிழித்தார் நம்பியாரூரர்.

"கற்றோர் அவையில் நான் கொண்டு வந்த ஓலையை நம்பியாரூரன் பறித்துக் கிழித்தது நியாயம் அல்ல. அப்படிக் கிழித்ததன் மூலம் தான் எனக்கு அடிமை என்பதை நம்பியாரூரன் ஒத்துக் கொண்டான். என்னிடம் இதற்கான மூல ஓலை உள்ளது. வாருங்கள் காட்டுகிறேன்" என்று கூறிவிட்டு நடந்தார் கிழப்பிராமணர்.

திருமணப்பந்தலில் இருந்த பெரியவர்களுடன் நம்பியாரூரன் கிழப்பிராமணரைப் பின் தொடர்ந்து சென்றார். கிழப்பிராமணர் திருவெண்ணெய் நல்லூரில் அமைந்துள்ள பிராமணரின் சபையிலே போய் நடந்தவற்றை முறையிட்டார். அதைக் கேட்ட அங்குள்ள பிராமணர் ஒருவர்; "பிராமணர்களை அடிமை கொள்ளும் வழக்கம் இவ்வுலகத்திலே இதுவரையிலும் இல்லை" என்றார்.

"அதைக் கேட்ட கிழப்பிராமணர் நம்பியாரூரன் என்னிடம் இருந்து பறித்துக் கிழித்த ஓலை, மூல ஓலையைப் பார்த்து எழுதிய பிரதி ஓலை, மூல ஓலை என்னிடம் உள்ளது. அதை ஆரூரன் பறித்துக் கிழிக்காதபடி நீங்கள் பாத்துக் கொள்ளுங்கள்." என்று கூறித் தனது இடுப்பில் சொருகி வைத்திருந்த மூல ஓலையை எடுத்துக் கொடுத்தார்.

அதை வாங்கிய பிராமணர் ஒருவர் சபையோர் கேட்கும்படியாக வாசித்தார்; "திருநாவலூரில் இருக்கின்ற ஆதிசைவனான ஆரூரன் என்கின்ற நான், திருவெண்ணெய் நல்லூரில் இருக்கின்ற பித்தனுக்கு, நானும் எனது சந்ததியாரும் தொண்டு செய்வதற்குச் சம்மதித்து இவ்வோலையை எழுதிக் கொடுக்கிறேன். இப்படிக்கு ஆரூரன்".

பிராமணர்கள் அவ்ஓலையை வாங்கிப் பார்த்து விட்டு நம்பியாரூரன் கிழப்பிராமணருக்கு அடிமை என்பதை ஒப்புக் கொண்டனர்.

"இவ் ஓலையில் எழுதப்பட்டதை நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்ற நம்பியாரூரன்; "வாருங்கள் செல்வோம்" என்று அக்கிழப்பிராமணரைப் பார்த்துச் சொன்னார்.

கிழப்பிராமணர் முன்னே நடக்க நம்பியாரூரரும் ஏனைய பிராமணர்களும் அவரைப் பின் தொடர்ந்து சென்றனர். கிழப்பிராமணர் திருவருட்துறை என்னும் அவ்வூரில் உள்ள சிவாலயத்தினுள் சென்று மறைந்தார்.

நம்பியாரூரரும் கூட வந்த பிராமணர்களும் திகைத்து நிற்க, சிவபெருமான் இடப வாகனத்தின் மேல் பார்வதி சமேதரராய்த் தோன்றினார்; "சுந்தரா, நீ முன்பு நமக்குத் தொண்டனாக இருந்து எனக்குத் தொண்டுகள் செய்தாய். நீ கைலாய மலையில் இருந்த போது நந்தவனத்தில் பூப்பறித்த எனது அடியவர்களான அனந்திகை, கமலினி என்ற இருபெண்களின் மேல் இச்சை கொண்டமையால் எனது கட்டளைப்படி பூமியில் அவதரித்தாய். அதனால் தான் உன்னைத் தடுத்தாட் கொண்டேன். நீ என்னுடன் வன்சொற்களைப் பேசியமையால் "வன்றொண்டன்" என்னும் பெயரைப் பெறுவாய் அத்துடன் "இனிய தமிழில் என்னைப் பாடு" என்றார்.

நம்பியாரூரர் தடுமாறினார்; "என்னால் பாட முடியவில்லை" என்று அழுதார்.

"நீ என்னைப் பித்தன் என்று ஏசியமையால் பித்தன் என்றே பாடு" என்றார் சிவபெருமான். உடனே சுந்தரமூர்த்தி நாயனார் "பித்தா பிறை சூடி" என்னும் தேவாரத்தைப் பாடினார்.

அதன் பின் சுந்தரமூர்த்தி நாயனார் சிதம்பரத்திற்குச் சென்று அங்கு திருநடனம் செய்கின்ற சிவனைத் தரிசிக்க விரும்பி நடந்து சென்றார். வழியிலே திருவதிகை என்னும் சிவத்தலத்திற்கு அருகில் அமைந்திருந்த மடத்தில் இரவு தங்கினார். அன்றிரவு திருவதிகை வீரட்டானேஸ்வரர் ஒரு பிராமண வடிவம் கொண்டு வந்து நித்திரை செய்து கொண்டிருந்த சுந்தரமூர்த்தி நாயனாரின் தலையின் மேல் தனது பாதங்களை வைத்துப் படுத்தார். அதனால் நித்திரை கலைந்த சுந்தரமூர்த்தி நாயனார் இன்னோர் இடத்தில் சென்று படுத்தார். வீரட்டானேஸ்வரர் சுந்தரர்க்கருகில் சென்று தனது பாதங்களை மீண்டும் தலையின் மேல் வைத்துப் படுத்தார். அதனால் நித்திரை விட்டெழுந்த சுந்தரமூர்த்தி நாயனார் "நீ யார்? என்னை ஏன் உமது காலால் மிதிக்கிறீர்?"என்று கேட்டார்.





"என்னை உனக்குத் தெரியவில்லையா....?" என்று வீரட்டானேஸ்வரர் கேட்டு விட்டு மறைந்தார்.

தன்னைக் காலால் மிதித்தவர் சிவபெருமான் என அறிந்து மகிழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனார் "தம்மானையறியாத சாதியாருளரே" என்னும் திருப்பதிகத்தைப் பாடினார்.

அதன் பின்பு சிதம்பரத்திற்குச் சென்ற சுந்தரமூர்த்தி நாயனார் கனக சபையிலே நடனம் செய்கின்ற சபாநாயகரைத் தரிசித்து விட்டு திருவாரூருக்குச் சென்றார். திருக்கைலாய மலையிலே இருந்த உமாதேவியாரின் தோழியர்களில் ஒருத்தியான கமலினி என்பவள் திருவாரூரிலே உருத்திரகணிகையர் குலத்திலே பரவையார் என்னும் பெயரில் பிறந்திருந்தாள். மங்கைப்பருவம் அடைந்திருந்த அவள் அன்று சுவாமி தரிசனம் செய்வதற்காகக் கோயிலுக்குத் தனது தோழிகளுடன் வந்தாள்.

சுவாமி தரிசனம் செய்து கொண்டிருந்த பரவையாரைக் கண்டு காதல் கொண்ட சுந்தரமூர்த்தி நாயனார் அவரைத் தனக்குத் திருமணம் செய்து தரும்படி சிவபெருமானை வேண்டினார். அதே போல் சுந்தரமூர்த்தி நாயனாரைக் கண்டு காதல் கொண்ட பரவையாரும் தனக்கு அவரைத் திருமணம் செய்து தரும்படி சிவபெருமானை வேண்டினார்.

அன்றிரவு சிவபெருமான் தனது அடியார்களின் கனவில் தோன்றி பரவையாருக்குச் சுந்தரமூர்த்தி நாயனாரைத் திருமணம் செய்து வைக்குமாறு கூறினார். மறு நாள் உதய காலத்திலே சிவபக்தர்கள் எல்லோரும் கூடிவந்து சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் பரவையாருக்கும் ஆகம விதிப்படி விவாகம் செய்து வைத்தனர்.

பரவையாரோடு சுந்தரமூர்த்தி நாயனார் இன்புற்று வாழ்ந்து வரும் நாளில் ஒரு நாள் அவர் கோயிலுக்குச் சென்றபோது அங்கே ஏராளமான சிவனடியார்கள் கூடியிருந்தனர். அவர்களின் பாதங்களில் வீழ்ந்து வணங்கிய சுந்தரமூர்த்தி நாயனார் சிவனின் அடியார்களைச் சிவன் என நினைத்து "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்னும் திருப்பதிகத்தைப் பாடினார்.

சுந்தரமூர்த்தி நாயனார் பரவையாரோடு திருவாரூரிலே வாழ்ந்து வரும் காலத்தில் குண்டையூர்க் கிழார் என்பவர் சுந்தரமூர்த்தி நாயனாரின் பெருமைகளைக் கேள்விப்பட்டு தினமும் வந்து அவரைத் தரிசித்துச் செல்வார். அத்துடன் சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் திருவாரூரிலே இருக்கின்ற சிவனடியார்களுக்கும் தினந்தோறும் உணவுக்காக நெல் அனுப்பி வந்தார். அந்த வருடம் பருவ மழை பெய்யாததால் குண்டையூர்க் கிழாரின் வயல்கள் அழிந்து விட்டன. அதனால் திருவாரூரில் கோயில் கொண்டிருக்கும் வீரட்டானேஸ்வரருக்கும் சுந்தரமூர்த்திநாயனாருக்கும் நெல் அனுப்ப முடியவில்லையே என்று குண்டையூர்க்கிழார் கவலைப்பட்டார்.

அன்றிரவு குண்டையூர்க்கிழாரின் கனவில் தோன்றிய வீரட்டானேஸ்வரர்; "உமக்கு, சுந்தரனுக்கு அனுப்புவதற்கு நெல்லுத் தந்தோம்" என்று கூறி மறைந்தார். மறு நாள் காலை குண்டையூர் முழுவதும் நெல் மலையாகக் குவிந்து காணப்பட்டது. குண்டையூர்க் கிழார் அச்செய்தியை சுந்தரமூர்த்தி நாயனாருக்குச் சொல்லி அவரைக் குண்டையூருக்கு அழைத்து வந்தார்.

நெற்குவியலைக் கண்டு அதிசயித்த சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானை நினைத்து; "நீள நினைந்தடியேன்" என்னும் திருப்பதிகத்தைப் பாடி; "சுவாமி, இந் நெல்லைக் கொண்டு செல்ல என்னிடம் ஆளில்லை. அதனால் இதைக் கொண்டு வந்து வீட்டில் தரல் வேண்டும்" என்றார். அன்றிரவு பூதங்கள் குண்டையூரில் இருந்த நெல்லைக் கொண்டு சென்று சுந்தரமூர்த்தி நாயனாரின் வீட்டில் சேர்த்தன.

சில நாட்கள் சென்ற பின்பு கோட்புலி நாயனாரின் வேண்டுகோளுக் கிணங்கச் சுந்தரமூர்த்தி நாயனார் அவரது ஊரான திருநாட்டியத்தான் குடிக்குச் சென்றார். சுந்தரரைக் கண்டு மகிழ்ந்த கோட்புலி நாயனார் அவரை வரவேற்று ஆசனத்தில் அமர்த்தி விதிப்படி அருச்சனை செய்து அறு சுவை உணவுகளைக் கொடுத்தார். சுந்தரர் உண்ட பின் தனது புத்திரிகளான சிங்கடியார், வனப்பகையர் என்போரை அழைத்து வந்து சுந்தரரை நமஸ்கரித்து: "தேவரீர் எனது இரு புத்திரிகளையும் அடிமைகளாக ஏற்றருளல் வேண்டும்" என்றார்.

"இப் பெண்கள் இருவரும் எனக்குப் புத்திரிகள்" என்று கூறி அவர்களை ஆசீர்வதித்த சுந்தரர் பின் பரமசிவன் வீற்றிருக்கும் ஆலயத்தை அடைந்து திருப்பதிகம் பாடினார். அதனால் சுந்தரருக்குச் "சிங்கடியார்" என்ற பெயர் ஏற்பட்டது.

பங்குனி மாத உத்தரத் திருவிழாவைச் சிறப்பாகச் செய்வதற்கு பொன்தேவை என்று பரவையார் சுந்தரமூர்த்தி நாயனாருக்குச் சொன்னார். சுந்தரமூர்த்தி நாயனார் திருப்புகலூரை அடைந்து சுவாமியைத் தரிசனம் செய்து திருப்பதிகம் பாடி விட்டு மடத்திற்குச் சென்றார். மடத்தில் இருந்த செங்கற்களைத் தலைக்கு அணையாக வைத்து உறங்கினார். நித்திரைவிட்டெழுந்து பார்த்தபோது தலைக்கு அணையாக வைத்த செங்கற்கள் யாவும் பொன் கற்களாக மாறி இருந்தன. அதைக் கண்டு மகிழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனார் கோயிலுக்குச் சென்று சிவபெருமானைத் தரிசித்து " தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்" என்னும் பதிகத்தைப் பாடினார்.

அதன்பின், பல சிவத்தலங்களிற்குச் சென்று திருப்பதிகங்கள் பலவும் பாடிய சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கூடலை ஆற்றுக்கு அருகில் இருந்த சிவத்தலத்திற்குச் செல்லாமல் திருமுதுகுன்றை நோக்கிச் சென்றார். செல்லும் வழியில் சிவபெருமான் ஒரு பிராமண வடிவம் கொண்டு வழியில் நின்றார். அந்தப் பிராமணரிடம் சுந்தரமூர்த்தி நாயனார் திருமுதுகுன்றுக்குப் போகும் வழியைக் கேட்க, "இது கூடலை ஆற்றுக்குப் போகும் வழி" என்று கூறி அவருக்கு முன்நடந்து சென்று மறைந்தார். சுந்தரர் அத்தலத்தை தரிசித்து "வடிவுடை மழுவேந்தி" என்னும் திருப்பதிகத்தைப் பாடி விட்டு திருமுதுகுன்றுக்குப் போனார். அச் சிவத்தலத்தில் திருப்பதிகம் பாடியபோது அவருக்கு சுவாமி பன்னீராயிரம் பொன் கொடுத்தார். அதற்குச் சுந்தரர் "சுவாமி, இப் பொன்னைத் தேவரீர் திருவாரூரிலே கொண்டு வந்து தந்தருளல் வேண்டும்" என்று வேண்டினார்.

"சுந்தரனே, நீ இப் பொன்முழுவதையும் மணிமுத்து நதியிலே போட்டுவிட்டு, திருவாரூர்க் குளத்திலே போய் எடு" என்றார்.

திருவாரூர் திரும்பிய சுந்தரமூர்த்தி நாயனார் பரவையாரை அழைத்துக் கொண்டு வான்மீக நாதரின் கோயிலுக்குச் சென்று அவரை வணங்கிவிட்டு, அருகில் இருந்த குளத்தில் இறங்கிப் பொன்னைத் தேடினார்.

சுந்தரமூர்த்தி நாயனாரைக் கொண்டு திருப்பதிகம் பாடிவிக்க வேண்டும் என்று விரும்பிய வான்மீக நாதர் பொன்னை அக்குளத்திற்கு வருவிக்காது இருந்தார். நெடுநேரமாகப் பொன்னைத் தேடிய சுந்தரரைக்கண்ட பரவையார்; "ஆற்றில் இட்ட பொன்னைக் குளத்தில் தேடினால் கிடைக்குமா.....?" என்று கேலியாகக் கேட்டார்.

அதனால் மனம்வருந்திய சுந்தரர் " பொன் செய்த மேனியினீர்....." என்னுந் திருப்பதிகத்தைப் பாடினார். உடனே ஆற்றிலிட்ட பொன் முழுவதும் குளத்திற்கு வந்து சேர்ந்தது. பொன்னை எடுத்த சுந்தரரும் பரவையாரும் கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து விட்டு வீட்டுக்குச் சென்றனர்.

சிவத்தலங்கள் பலவற்றை அடியவர்களுடன் சுந்தரமூர்த்தி நாயனார் தரிசித்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் திருக்குருகாவூருக்குச் செல்லும் போது சுந்தரமூர்த்தி நாயனாரும் அடியவர்களும் தாகத்தினாலும் பசியினாலும் வருந்தினார்கள். இதை உணர்ந்த சிவபெருமான் அவர் செல்லும் வழியில் ஒரு பந்தல் அமைத்து தண்ணீரும் பொதி சோறும் வைத்திருந்து சுந்தரமூர்த்தி நாயனாருக்குக் கொடுத்துவிட்டு மறைந்தார்.

பின் தொண்டை மண்டலத்தில் இருக்கும் சிவத்தலங்களைத் தரிசிக்க விரும்பிய சுந்தரர், அடியார்களுடன் தொண்டை மண்டலத்திற்குச் சென்றார். ஒரு நாள் திருக்கச்சூரிலே ஆலய தரிசனம் செய்து விட்டுப் பகல் உணவு உண்பதற்காக மடத்திற்குச் சென்று உணவு வரும் எனக் காத்திருந்தார். நேரம் சென்றதே தவிர உணவு வரவில்லை. பசியால் வருந்திய சுந்தரர் மடத்துச் சுவருடன் சாய்ந்திருந்தார். சுந்தரரின் பசியை உணர்ந்த சிவபெருமான் பிராமண வேடம் தாங்கி சுந்தரரிடம் வந்து சொன்னார்; "சுந்தரா, நீ பசியால் வருந்திக் களைத்துப் போய் இருக்கிறாய். நான் உணவு கொண்டு வரும்வரையும் இங்கேயே தங்கி இரு" என்று கூறிய சிவபெருமான் திருவோடு ஒன்றை எடுத்துச் சென்று பிராமணர்கள் வாழும் வீடுகளில் உணவை இரந்து பெற்றுக் கொண்டு வந்து சுந்தரருக்குக் கொடுத்து விட்டுச் மறைந்தருளினார். சுந்தரர் சிவனின் அருளை





வியந்து " முதுவாயோரி கதற" என்னும் திருப்பதிகத்தைப் பாடி விட்டுச் சிவபெருமான் கொண்டுவந்து கொடுத்த உணவைச் சிவனடியார்களுக்குக் கொடுத்துத் தானும் உண்டார்.

திருக்கைலாய மலையிலே சுந்தரமூர்த்தி நாயனார் மேல் காதல் கொண்ட அனிந்திகையார் ஞாயிறு என்ற ஊரிலே இருக்கும் ஞாயிறு கிழவர் என்பவருக்குப் புத்திரியாகப் பிறந்தார். ஞாயிறுகிழவர் அவருக்கு சங்கிலியார் எனப் பெயரிட்டு அன்புடன் வளர்த்து வந்தார்.

மங்கைப் பருவத்தை அடைந்த சங்கிலியாருக்குப் பெற்றோர் வரன் தேடினார்கள். இதை அறிந்த சங்கிலியார் தகப்பனாரிடம் சொன்னார் "தந்தையே, நான் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானின் திருவருளைப் பெற்ற ஒருவருக்கே மனைவியாவதற்கு உரித்துடையேன். அதற்காக நான் திருவொற்றியூரை அடைந்து அங்கு கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானின் கோயிலிலேயே இருப்பேன்" என்றாள்.

அவளது சொற்களைக்கேட்டு மனம் வருந்திய ஞாயிறு கிழவர், அவளை அழைத்துச் சென்று திருவொற்றியூரில் ஒரு வீடு அமைத்து அங்கே இருக்கும்படி விட்டுவிட்டு வந்தார். சங்கிலியார் தினந்தோறும் கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து பூமாலை கட்டிச் சிவனுக்குச் சூடக் கொடுப்பாள். ஒரு நாள் திருவொற்றியூரில் குடிகொண்டிருக்கும் சிவபெருமானை வணங்கவந்த சுந்தரர், சங்கிலியாரைக் கண்டு காதல் கொண்டார். அதனால் அவர் தனக்குச் சங்கிலியாரைத் திருமணம் செய்து தரும்படி சிவபெருமானை வேண்டினார். அன்றிரவு சங்கிலியாரின் கனவில் தோன்றிய சிவபெருமான்; "சங்கிலியே, எனது பக்தனான சுந்தரன் உன்னை விரும்பியுள்ளான் அவனைத் திருமணம் செய்து நீ வாழ்வாயாக. அத்துடன் சுந்தரன் உன்னைவிட்டுப் பிரியேன் என்று சத்தியம் செய்து தருவான்" என்று கூறிவிட்டுச் சுந்தரரிடம் சென்ற சிவபெருமான்; "சுந்தரா, சங்கிலியாரை நீ திருமணம் செய்யலாம். ஆனால், அவளை விட்டுப் பிரிய மாட்டேன் என்று அவளுக்குச் சத்தியம் செய்து கொடு" என்றார்.

"சுவாமி நான் சங்கிலிக்கு 'உன்னைவிட்டுப் பிரியேன்' என்று சத்தியம் செய்யும்போது தாங்கள் கோயிலை விட்டு வெளியே சென்று மகிழ மரத்தின் கீழ் இருந்தருள வேண்டும்" என்றார் சுந்தரர்.

"சரி" என்று கூறிய சிவபெருமான் சங்கிலியாரிடம் சென்று; "பெண்ணே சுந்தரன் உன்னைத் திருமணம் செய்யச் சம்மதித்துள்ளான். அவன் சத்தியம் செய்ய வரும்போது மகிழ மரத்தின் கீழ்ச் சத்தியம் செய்யச் சொல்லிக் கேள்" என்று சொல்லி மறைந்தருளினார்.

மறு நாள் கோயிலுக்கு வந்த சுந்தரர் அங்கு தோழியர்களுடன் நின்ற சங்கிலியாரைச் சந்தித்து சிவபெருமான் கூறியதைச் சொல்லிச் சத்தியம் செய்யக் கோயிலினுள் வருமாறு அழைத்தார்.

சங்கிலியார் மகிழமரத்தின் கீழ்ச் சத்தியம் செய்து தரும்படி கேட்டார். சுந்தரர் மனக்கிலேசத்துடன் மகிழ மரத்தின் கீழ்ச் சென்று; "உன்னை ஒரு பொழுதும் விட்டுப் பிரியேன்" என்று சத்தியம் செய்து கொடுத்தார். நல்லதொரு சுபமுகூர்த்தத்தில் சிவனடியார்கள் சுந்தரருக்கும் சங்கிலியாருக்கும் திருமணஞ் செய்து வைத்தனர்.

விவாகம் செய்த சுந்தரமூர்த்தி நாயனார் சங்கிலியாரோடு அவ்வூரிலே வாழ்ந்து வந்தார். ஒரு நாள் திருவாரூரில் கோயில் கொண்டிருக்கும் வான்மீக நாதரை வணங்குவதற்காகத் திருவாரூருக்குப் புறப்பட்டார். அவர் திருவொற்றியூரை விட்டு நீங்கியபோது அவரின் இரண்டு கண்களும் குருடாகின. சத்தியம் தவறியதால் தனது கண்கள் குருடாகி விட்டன என்று தெரிந்து கொண்ட சுந்தரர் அடியார்கூட்டத்துடன் திருவாரூரை அடைந்து வான்மீக நாதரைத் தொழுது பதிகங்கள் பாடினார். அவர் பதிகங்கள் பாடிய போதும் குருடு நீங்கவில்லை. அதனால் கவலை கொண்ட சுந்தரர் சிவபெருமானை அழுதழுது தொழுதார். அதனால் இரங்கிய சிவபெருமான் இடக்கண்ணை மாத்திரம் தெரியும் படி செய்தார். அதன் பின் சுந்தரர் சோழ நாட்டிற்குச் சென்றார்.

சுந்தரர் திருவாவடுதுறைக்குச் சென்றபோது அவரைப் பெரு நோய் வாட்டியது. அதனால் சிவபெருமானைத் தொழுதார். சிவபெருமானின் சொற்படி சுந்தரர் திருவாவடுதுறையில் உள்ள குளத்தில் குளிர்த்தார். குளித்ததும் அவரைப் பீடித்திருந்த நோய் நீங்கியது. பின் சுந்தரர் திருவாவடுதுறையில் வீற்றிருக்கின்ற வான்மீக நாதரைப் பிரார்த்தித்து " மீளாஅடிமை உமக்கே ஆளாய்" என்னுந் திருப்பதிகத்தைப் பாடினார். வான்மீக நாதரின் அருளால் சுந்தரரின் வலக்கண்ணும் பார்வை பெற்றது.

சுந்தரருடன் கூடவந்த சிவனடியார்கள் பரவையாரின் வீட்டுக்குச் செல்லப் புறப்பட்டுச் சென்று இடைவழியில் பயத்தால் திரும்பி வந்தனர். சங்கிலியாரைத் திருமணம் செய்ததை அறிந்த பரவையார்கோபம் கொண்டிருந்தார். சுந்தரர் பரவையாரிடம் செல்ல அஞ்சிப் பெரியோர் சிலரை அவரிடம் அனுப்பிச் சமாதானம் செய்ய முயன்றார். அதற்குப் பரவையார் ஒத்துக் கொள்ளாமையால் சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானைப் பரவையாரிடம் தூது அனுப்பினார்.

தன்னிடம் சமாதானம் செய்ய வந்தவர் சிவன் என அறியாத பரவையார் அவரை ஏசி அனுப்பி விட்டார். நடந்தவற்றைச் சுந்தரரிடம் சிவபெருமான் கூறியபோது சுந்தரர் மனம் வருந்தித் தன்னைப் பரவையாருடன் சேர்த்து வைக்கும்படி பிரார்த்தித்தார்.அதனால் மனம் இரங்கிய சிவபெருமான் மீண்டும் பரவையாரிடத்திற் சென்றார். சுந்தரரின் தூதுவராக வந்தவர் சிவபெருமான் என்பதை அறிந்த பரவையார் மகிழ்ந்து வணங்கித் தான் முன்பு மறுப்புச் சொன்னதற்காக மன்னிப்புக் கேட்டார். அதன்பின் சுந்தரர் சிவனடியார்கூட்டத்துடன் பரவையாரின் வீட்டுக்குச் சென்று அவரோடு மகிழ்வுடன் வாழ்ந்தார்.

சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானைப் பரவையாரிடம் தூது அனுப்பியதை அறிந்த ஏயர்கோன் கலிக்காம நாயனார் சுந்தரரின் மீது அளவில்லாத கோபம் கொண்டார். அதனால் சிவபெருமான் ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்குச் சூலை நோயை உண்டாக்கினார். பின் அவரின் கனவிலே தோன்றி, "சுந்தரனால் அன்றி உன்நோய் தீராது" என்று கூறிவிட்டுச் சுந்தரரிடம் சென்று, "ஏயர்கோன் கலிக்காமரது சூலை நோயைச் சென்று தீர்த்து வைப்பாயாக" என்றார்.

சுந்தரர் தனது வீட்டுக்கு வருவதை அறிந்த ஏயர்கோன் கலிக்காம நாயனார் தனது உடைவாளினால் தனது வயிற்றைக் கிழித்துக் கொண்டு இறந்து போனார். அதைக்கண்டு வருந்திய சுந்தரமூர்த்தி நாயனார் அவ்வாளை எடுத்துத் தனது வயிற்றைக் கிழிக்க ஆயத்தமானார். அப்பொழுது சிவபெருமானின் அருளால் உயிர் பெற்றெழுந்த ஏயர்கோன் கலிக்காம நாயனார் சுந்தரமூர்த்தி நாயனாரின் கையைப் பிடித்தார். அதன்பின்பு இருவரும் நண்பர்கள் ஆயினர்.

திருவாரூரில் சுந்தரமூர்த்தி நாயனார் இருப்பதையும் அவரின் பெருமைகளையும் சிவபெருமானால் அறிந்த சேரமான் பெருமான் நாயனார் சுந்தரரைத் தரிசிப்பதற்காகத் திருவாரூருக்கு வந்தார். சுந்தரரைத் தரிசித்து வணங்கிய சேரமான்பெருமான் நாயனார் அதன் பின் அவருடனே இருந்தார். இருவரும் சிவனடியார்களுடன் சேர்ந்து தமிழ் நாட்டில் உள்ள சிவத்தலங்களைச் சென்று தரிசித்தனர். அப்படித்தரிசித்து வரும் நாளில் ஒரு நாள் இருவரும் இராமேஸ்வரத்திற்கு வந்தனர். சுந்தரர் அங்கிருந்து கொண்டே ஈழநாட்டில் மாதோட்டம் என்னும் நகரில் அமைந்துள்ள கேதீச்சரத்தானை வணங்கி "நத்தார்படை ஞானன்பசு" என்னும் திருக்கேதீச்சரப்பதிகத்தைப் பாடினார்.

அதன் பின் சுந்தரர் சேரமான்பெருமான் நாயனாரின் வேண்டுகோளுக்கிணங்க அவரின் ஊரான கொடுங்கோலூருக்குப் புறப்பட்டார். அப்பொழுது வடகரையில் இருக்கின்ற காவேரியாறு பொங்கிப் பெருகியது. அதனால் அவ்வாற்றைக் கடக்கமுடியாது சுந்தரரும் சேரமான் பெருமான் நாயனாரும் சிவனடியார்களும் ஆற்றங்கரையில் நின்றனர். சுந்தரர், சிவனை வணங்கிப் பதிகம் ஒன்றைப் பாடினார் உடனே காவேரியாறு இரண்டாகப் பிரிந்து வழிவிட்டது. அடியார்கள் எல்லோரும் நதியின் மத்தியில் இருந்த மணல்வழியே சென்று திருவையாற்றை அடைந்து சுவாமி தரிசனம் செய்து விட்டு கொடுங்கோல் ஊரைச் சென்றடைந்தனர். சிலகாலம் சேரமான்பெருமான் நாயனாரோடு தங்கிய சுந்தரமூர்த்தி நாயனார் தனது ஊருக்குப் புறப்பட்டார். சேரமான்பெருமான் நாயனார் அவரை வணங்கி ஏராளமான பொன்களையும் முத்தையும் திரவியங்களையும் கொடுத்தார்.





சிவனடியார்கள் அப்பொருட்களைச் சுமந்து கொண்டு காட்டினூடகச் சென்றனர். அப்பொழுது சிவபெருமான் தனது பூத கணங்களை வேடுவருபத்தில் அனுப்பி அத்திரவியங்களைக் கவர்ந்தார். சுந்தரர் அக்காட்டுக்குள் இருந்த திருக்கோயிலினுட் சென்று பதிகம் பாடினார். சிவனின் அருளால் பூதகணங்கள் தாம் கவர்ந்து சென்ற பொருட்களைக் கொண்டு வந்து கோயில் வாசலிற் குவித்தன.

சில நாட்கள் திருவாரூரில் தங்கியிருந்த சுந்தரமூர்த்தி நாயனார் சேரமான் பெருமான் நாயனாரைச் சந்திப்பதற்காக கொடுங்கோல் என்னும் ஊருக்குச் சென்றார். வழியிலே இருந்த ஒரு வீட்டில் மங்கல ஒலியும் இன்னொருவீட்டில் அழுகை ஒலியும் கேட்டது. அங்கு சென்ற சுந்தரர் நடந்தது என்னவென விசாரித்தார்.

அங்கிருந்த பிராமணர்கள் அவரை வணங்கி; "ஐந்து வயதுடைய இரு பிராமணச் சிறுவர்கள் குளத்திற்குக் குளிக்கச் சென்றார்கள். அதில் ஒரு பிள்ளையை முதலை விழுங்கிவிட்டது. மற்றய பிள்ளை தப்பி விட்டது. தப்பிய பிள்ளைக்கு உபநயனஞ் செய்கிறார்கள். அவ்வீட்டில் மங்கல ஒலிச் சத்தம் கேட்கிறது. இறந்த வீட்டில் புதல்வனை நினைத்து அழும் ஒலி கேட்கிறது"என்றார்கள்.

அதைக்கேட்டு மனம் இரங்கிய சுந்தரமூர்த்தி நாயனார், சிறுவனை முதலை விழுங்கிய குளக்கரைக்குச் சென்று பதிகம் பாடினார். சிவபெருமானின் கிருபையால் முதலை தான் விழுங்கிய சிறுவனைக் கரையில் வந்து உமிழ்ந்தது. சிறுவனும் பெற்றோரும் அவ்வூரவர்களும் பெரு மகிழ்வுடன் சுந்தரரை வணங்கினார்கள்.

அச் செய்தியைக் கேள்விப்பட்ட சேரமான் பெருமான் நாயனார் சுந்தரரைக் காணும் ஆவலால் அவ்விடத்திற்கு விரைந்து வந்தார். இருவரும் கட்டித்தழுவி உரையாடி மகிழ்ந்தனர். பின்னர் இருவரும் சேர்ந்து பல சிவத்தலங்களைத் தரிசித்தனர்.

இப்படிப் பல நாட்கள் சென்றன. ஒரு நாள் சேரமான் பெருமான் நாயனார் குளித்துக் கொண்டிருக்கும்போது சுந்தரமூர்த்தி நாயனார் திருவாஞ்சைக் களத்திற்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தார். அப்பொழுது சிவபெருமானின் கட்டளையின் பெயரில் பிரமாவும் விட்டுணுவும் வெள்ளை யானையில் வந்து சுந்தரரைத் திருக்கைலாய மலைக்கு அழைத்துச் சென்றனர். இதைக் கேள்விப்பட்ட சேரமான் பெருமான் நாயனார் தனது வெள்ளைக் குதிரையின்மீது ஏறி அதன் காதில் பஞ்சாட்சர மந்திரத்தை ஓதினார். உடனே குதிரை ஆகாயத்தில் பறந்து சென்று வெள்ளை யானையை வலம் வந்தது. சுந்தரர் சேரமான்பெருமான் நாயனாரை முன்னே செல்ல விட்டு தான் பின்னே சென்றார்.

வானத்தில் பறந்து சென்ற சுந்தரரையும் சேரமான்பெருமான் நாயனாரையும் காணாத சிவனடியார்கள் அவர்கள் இன்றி வாழ முடியாமையினால் உடைவாளினால் தங்களது தலைகளைத் துண்டித்தனர். திருக்கைலாய மலை வாசலை அடைந்த சேரமான் பெருமான் நாயனாரை அங்கு காவலுக்கு நின்ற பூத கணங்கள் உள்ளே செல்ல விடாது தடுத்தன.

சுந்தரமூர்த்தி நாயனார் அன்பு மிகுதியால் ஓடிச் சென்று சிவபெருமானின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். அவரைச் சிவபெருமான் அன்புடன் அணைத்தெடுத்தார்.; "சுவாமி எனது நண்பரான சேரமான்பெருமான் நாயனார் என்னுடன் வந்து வாசலில் நிற்கிறார். அவரையும் அழைத்தருளல் வேண்டும்" என்றார். உடனே சிவபெருமான் அவரை அழைத்து; " நீயும் ஆலால சுந்தரனும் கணங்களுக்குத் தலைவர்களாக இருங்கள்" என்றார். சுந்தரரினதும் சேரமான் பெருமான் நாயனாரதும் பிரிவைப் பொறுத்துக் கொள்ள முடியாது சிரச்சேதம் செய்து கொண்ட அடியார்களும் திருக்கைலாய மலையைச் சென்றடைந்து சுந்தரருடனும் சேரமான்பெருமான் நாயனாருடனும் சேர்ந்து கொண்டனர்.

பரவையாரும் சங்கிலியாரும் திருக்கைலாய மலைக்கு வந்து உமாதேவியாருக்குத் தொண்டு செய்தனர்.

## திருச்சிற்றம்பலம்

## திருநீல கண்ட நாயனார்

சிதம்பரத்திலே திருநீலகண்டர் என்னும் ஒரு சிவனடியார் இருந்தார். அவர் மட்கலங்களை வனைந்து விற்று வந்தார். சிவனடியார்களுக்குத் திருவோடுகளை வழங்குவதைத் தனது தொண்டாக நினைத்துத் தன்னை நாடி வரும் சிவனடியார்கள் அனைவருக்கும் திருவோடுகளை வழங்கி வந்தார். தேவர்கள் திருப்பாற்கடலில் அமிர்தத்தை கடையும்போது உண்டான நஞ்சை அள்ளி உண்டதால் சிவபெருமானின் கண்டம் நீல நிறமானதைப் போற்றிச் சிறப்பித்து அடியார்களுக்குத் தினமும் சொல்வதால் அவருக்குத் திருநீலகண்ட நாயனார் என்னும் பெயர் உண்டாயிற்று.

ஒரு நாள் அவருக்கும் அவரது மனைவியாருக்கும் விலைமாது காரணமாக பிரச்சினை வந்ததனால் இருவரும் தமது வீட்டினிலேயே பிரிந்து வாழ்ந்தனர். அவரது மனைவியார் அவருக்கு வேண்டிய அத்தனை பணிவிடைகளையும் செய்து வந்தார். அத்துடன் தன்னைத் தீண்டக்கூடாது என்று திருநீலகண்டத்தின் மீது சத்தியம் செய்தார். அதனால் திருநீல கண்டர் தனக்கு மனைவி தரும் உணவுவகைகளை வாங்கியுண்டு வாழ்ந்து வந்தார். இப்படி அவர்கள் பல காலம் வாழ்ந்தமையால் முதுமை அடைந்தனர்.

திருநீல கண்ட நாயனாரையும் அவரது மனைவியையும் ஒற்றுமைப்படுத்த விரும்பிய சிவபெருமான், ஒரு சிவயோகி வடிவம் கொண்டு திருநீலகண்ட நாயனாரின் வீட்டுக்குச் சென்றார். சிவயோகியை மகிழ்வுடன் வரவேற்ற நீலகண்ட நாயனார் அறுசுவை உணவு வகைகளை அவருக்குக் கொடுத்தார். உண்டு களைப்பாறிய சிவயோகியார் தான் கொண்டு வந்த திருவோட்டை எடுத்துத் திருநீல கண்டரிடம் கொடுத்து விட்டுச் சொன்னார்.; "திருநீல கண்டர், இத்திருவோடு சிறப்புக்கள் பலவற்றைக் கொண்டது. இதில் இட்டு வைக்கப்படும் உணவுகள் பழுது படா. இது பொன்னையும் இரத்தினத்தையும் விட பெறுமதியானது. எனவே இதைப் பாது காத்து வைப்பாயாக. சில காலம் சென்றதும் நான் வந்து இதைப்பெற்றுக் கொள்வேன்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

சில காலம் செல்லத் திருநீல கண்டரின் வீட்டுக்கு வந்த சிவயோகியார், திருநீலகண்டர் வைத்த திருவோட்டைத் தனது சக்தியால் மறைத்து விட்டு தான் தந்த திருவோட்டைத் தரும்படி கேட்டார்.

திருநீல கண்டர் தான் அந்தத் திருவோட்டை வைத்த இடத்திற்குச் சென்று பார்த்தார். அத்திருவோட்டைக் காணவில்லை. அதனால் கவலை கொண்ட திருநீலகண்டர் சிவயோகியிடம் வந்து சொன்னார்.; "சுவாமி தாங்கள் என்னிடம் தந்துவிட்டுச் சென்ற திருவோட்டைக் காணவில்லை. அதற்குப் பதிலாக தாங்கள் எதைக்கேட்டாலும் தருவேன்" என்றார்.

சிவயோகியாருக்குக் கோபம் வந்தது; "திருநீலகண்டா, பொன்னையும் இரத்தினங்களையும் விடப் பெருமை வாய்ந்தது நான் தந்த திருவோடு. எனக்கு வேறுஎதுவும் வேண்டாம். நான் தந்த திருவோட்டைத் தா. நீ வேண்டுமென்றே எனது திருவோட்டை மறைத்துவிட்டுப் பொய்பேசுகிறாய். நீ உண்மை பேசுபவனானால் உனது மகனை அழைத்து அவனது கையைப் பிடித்துக் கொண்டு எம்பெருமான் சந்நிதியில் உள்ள திருக்குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்து தா" என்றார்.

அதற்குத் திருநீலகண்டர்; "சுவாமி, எனக்குப் பிள்ளைகள் இல்லை. அதனால் வேறுஏதாவது செய்ய முடியுமானாற் சொல்லுங்கள்" என்று இரந்தார்.

"அப்படியாயின் உனது மனைவியின் கையைப்பிடித்துக் கொண்டு குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்துதா" என்றார் சிவயோகியார்.

"சுவாமி, எனக்கும் மனைவிக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாகத் தன்னைத் தொடக்கூடாதென்று திருநீலகண்டத்தின் மீது அவள் சத்தியம் செய்துள்ளாள். எனவே நான் மட்டும் குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்கிறேன்" என்றார்.





"நீ, எனது திருவோட்டைத் திருடியது மல்லாமல் சத்தியம் செய்யவும் அஞ்சுகிறாய். அதனால் நான் தில்லை வாழ்அந்தணர்கள் கூடிஇருக்கும் சபையிலே முறையிடுகிறேன்" என்ற சிவயோகியார் தில்லைவாழ் அந்தணர்களிடஞ் சென்றார்.

தில்லைவாழ் அந்தணர்கள் திருநீலகண்டரை அழைத்து; "சிவயோகியார் கூறுவதைப்போல மனைவியின் கையைப்பிடித்துக் கொண்டு குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்யும். இல்லாவிட்டால் நீர் கூறுவதை எம்மால் ஏற்கமுடியாது" என்றனர்.

திருநீலகண்டர் ஒரு மூங்கில் தடியை எடுத்து ஒருமுனையில் தனது மனைவியைப் பிடிக்கச் சொல்லி, மறுமுனையைத் தான் பிடித்துக் கொண்டு குளத்தில் மூழ்கி எழுந்தார். மூழ்கி எழுந்ததும் அவர்கள் இருவரும் முதுமைப் பருவமும் மறைந்து இளமைப் பருவம் உடையவர்களானார்கள். சிவபெருமான் ஆகாயத்தில் இடப வாகனத்தில் உமாதேவியாருடன் தோன்றினார். திருநீலகண்டரும் மனைவியாரும் தில்லை வாழ்அந்தணர்களும் அவர்களை மெய்மறந்து வணங்கினார்கள்.

சிவபெருமான் அவர்களை நோக்கி; "ஐம்புலன்களையும் வென்றமையால் மேன்மையடைந்த நீங்கள் என்றும் இளமையோடு எம்மோடு இருங்கள்." என்று கூறி மறைந்தார். திருநீல கண்ட நாயனாரும் அவரது மனைவியாரும் சிவலோகத்தை அடைந்து பேரின்பத்தில் திளைத்திருந்தனர்.

திருச்சிற்றம்பலம்

## இயற்பகை நாயனார்

காவிரிப்பூம் பட்டினத்திலே இயற்பகையார் என்றொரு சிவனடியார் வாழ்ந்து வந்தார். அவர் வீபூதி உருத்திராக்கம் தரித்த சிவனடியார்களுக்கு அவர்கள் விரும்பும் பொருட்கள் யாவற்றையும் கொடுத்து வந்தார்.அவரது பெருமையை உலகிற்குத் தெரியப்படுத்த விரும்பிய சிவபெருமான் பிராமண வேடம் கொண்டு இயற்பகை நாயனாரின் வீட்டுக்கு வந்தார். சிவனடியாரைக் கண்டு மகிழ்ந்த நாயனார் அவரை மகிழ்வுடன் அழைத்துச் சென்று உணவு கொடுத்தார்.

"இயற்பகையாரே, நீர் சிவனடியார்கள் கேட்பவை அனைத்தையும் கொடுப்பதாகக் கேள்விப்பட்டு உம்மிடம் ஒரு பொருளை வேண்டிச் செல்ல வந்தேன். நீர் மறுக்காமல் தருவதாக ஒப்புக்கொண்டால், நான் அப்பொருளை உம்மிடம் யாசிப்பேன்" என்றார்.

இயற்பகை நாயனார் பதைபதைத்தார்; "அடியாரே, என்னிடம் உள்ள பொருட்கள் எல்லாம் சிவனடியார்களுக்கு உரியவை. நீர் பயம்மின்றிக் கேளும்" என்றார்.

அதற்குப் பிராமணர் "நான் உமது மனைவியை விரும்பி வந்தேன்" என்றார்.

"என்னிடம் இல்லாத ஒன்றைக் கேட்பீரோ என்று கலங்கியிருந்தேன். என்னிடம் உள்ளதையே கேட்டீர். அதனால் மகிழ்ந்தேன். எனது மனைவியாரை அழைத்துச் செல்லும்" என்றார். இயற்பகை நாயனார்.

அதைக்கேட்டு மகிழ்ந்த பிராமணர்; "நான் உமது மனைவியை அழைத்துக் கொண்டு இவ்வூர் எல்லையை விட்டு நீங்கிச் செல்லும் வரை எனக்கு நீர் பாதுகாப்புத்தரல் வேண்டும்" என்று கேட்டார்.

உடனே இயற்பகை நாயனார் ஆயுதசாலைக்குச் சென்று உடைவாளை எடுத்து வந்து பிராமணரை வணங்கி, அவரையும் மனைவியாரையும் முன்னே செல்லவிட்டுத் தான்பின்னே சென்றார்.

இதையறிந்த ஊர்மக்களும் இயற்பகை நாயனாரது இனத்தவர்களும் ஆயுதங்களுடன் திரண்டு வந்து பிராமணரையும் இயற்பகை நாயனாரது மனைவியையும் ஊரைவிட்டுச் செல்லவிடாது தடுத்தனர்.

அவர்களை எதிர்த்து போரிட்ட இயற்பகை நாயனார் அவர்கள் அனைவரையும் கொன்று குவித்தார். எல்லோரையும் கொன்ற பின்பு இயற்பகை நாயனார் பிராமணரையும் மனைவியையும் அழைத்துக் கொண்டு ஊரின் எல்லையில் இருந்த திருச்சாய்க் காடு என்ற சிவத்தலத்திற்குச் சென்றார்.

அப்பொழுது பிராமணர் இயற்பகை நாயனாரை நோக்கி; "இனி எனக்குப் பயம் இல்லை. நீர் சென்று வாரும்" என்றார். இயற்பகை நாயனார் அவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கிவிட்டுத் திரும்பி நடந்தார். அப்பொழுது அந்தப் பிராமணர்; "இயற்பகையே இங்கே வாரும்" என்று அழைத்தார்.

இயற்பகை நாயனார், பிராமணருக்கு ஏதோ ஆபத்து வந்து விட்டதென நினைத்து உடை வாளை உருவிக்கொண்டு ஆவேசத்துடன் ஓடிவந்தார். அப்பொழுது பிராமணர் மறைய சிவபெருமான் இடப வாகனத்தில் உமாதேவியாருடன் தோன்றினார்; "இயற்பகையே, நீர் எம்மீதும் எம்அடியார்மீதும் வைத்த பேரன்பை உலகத்தினருக்குப் புலப்படுத்தவே இவ்வாறு செய்தோம், நீர் மனைவியோடு எம்முடன் வருக" என்றார்.

இயற்பகை நாயனாரும் அவரது மனைவியாரும் சிவபெருமானுடன் சிவலோகத்தைச் சென்றடைந்து பேரின்பத்துடன் வாழ்ந்தனர். யுத்தத்திலே இறந்த நாயனாரது இனத்தவர்களும் அயலவர்களும் திருக்கைலாய மலையை அடைந்து இன்புற்றனர்.

## திருச்சிற்றம்பலம்

## இளையான் குடிமாற நாயனார்

இளையான் குடி என்னும் ஊரில் வேளாண்மை செய்து அதன்மூலம் கிடைக்கும் வருமானம் முழுவதையும் சிவனடியார்களின் தேவைகளுக்காகச் செலவு செய்யும் மாறன் என்றொரு சிவனடியார் இருந்தார். அவர் தனது வீட்டிற்கு வரும் சிவனடியார்களைச் சாதிபேதம் பாராது மெய்யன்போடு அழைத்துச் சென்று ஆசனத்தில் அமர்த்தி அவர்களது பாதங்களை நன்னீரால் கழுவித் துடைத்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்து, அறு சுவை உணவுகளைக் கொடுத்து உபசரிப்பார். இப்படித் தினமும் சிவனடியார்கள் பலரை அழைத்து வந்து உணவு கொடுத்தபோதும் அவரது செல்வம் குறையவில்லை.

இளையான் குடிமாற நாயனார் வறுமை வந்தபோதும் சிவனடியார்களுக்கு உணவு கொடுத்தலைக் கைவிட மாட்டார் என்பதையும், நல்லவர்களுக்குத் துன்பத்தைக் கொடுத்தல் அவர்களின் நலத்தின் பொருட்டே என்பதையும் உலகோர்க்கு உணர்த்த விரும்பிய சிவபெருமான், இளையான்குடிமாற நாயனாருக்கு வறுமையை உண்டாக்கினார்.

தாங்க முடியாத வறுமை வந்தபோதும் இளையான்குடி மாற நாயனார் மனம்தளரவில்லை. தன்னிடம் இருந்த எல்லாப் பொருட்களையும் விற்றுச் சிவனடியார்களுக்கு உதவி செய்து வந்தார். அன்று பெருமழை பெய்து கொண்டிருந்தது. சமைக்க எதுவும் இல்லாமையால் மாறன் நாயனாரும் அவரது மனைவியும் பசியால் சோர்ந்து படுத்திருந்தனர்.

இரவு நேரம் சிவபெருமான் ஒரு சிவனடியார் வேடம் தாங்கி இளையான் குடிமாற நாயனாரின் வீட்டுக் கதவைத்தட்டினார். நாயனார் எழுந்து வெளியே வந்தார். ஒரு சிவனடியார் மழையில் நனைந்தபடி நின்றார். அவரை உள்ளே அழைத்து வந்த நாயனார் அவரின் உடலில் இருந்த ஈரத்தைத் துடைத்தார். பின் அவர் உடுப்பதற்காக ஒரு வேட்டியைக் கொடுத்து விட்டு தனது மனைவியிடம் சென்றார்; "பசியால் வருந்திய சிவனடியார் ஒருவர் உணவுக்காக வெளியே வந்து காத்திருக்கிறார். அவர் உண்பதற்கு ஏதாவது கொடுத்தல் வேண்டும்" என்றார்.





"இன்று சமைப்பதற்குரிய பொருட்கள் எதுவும் இல்லாமையால் சமைக்கவில்லை. பகலானால் யாரிடமாவது சென்று இரந்து கேட்கலாம். நள்ளிரவில் நான் எங்கு செல்வேன்?" என்ற மனைவியார் சிறிது நேரம் யோசித்துவிட்டுச் சொன்னார்.; "இன்று காலையில் தான் எமது வயலில் நெல் விதைத்தோம். மழை பெய்வதால் விதைத்த நெல் வெள்ளத்தில் மிதந்திருக்கும். அதை வாரி எடுத்துவாருங்கள்" என்றார்.

இளையான்குடி மாறன் நாயனார் பலத்த மழையில் நனைந்தவாறு வயலுக்குத் தட்டுத் தடுமாறிச் சென்று மிதந்த நெல் மணிகளை வாரி எடுத்து வந்து மனைவியாரிடம் கொடுத்தார்; "மழையாக இருப்பதால் விறகு இல்லை" என்று அவரது மனைவியார் சொன்னார். மாறன் நாயனார் வீட்டுக் கூரைவேயப்பட்டிருந்த மரங்களைக் கழற்றி அவற்றைக் கொத்திக் கொடுத்தார். அவரது மனைவி சுவையாகச் சமையல் செய்து விட்டு நித்திரையாக இருந்த சிவனடியாரை உணவு கொடுப்பதற்காக எழுப்பினார். அப்போது அவர் சோதிவடிவாகத் தோன்றினார். இளையான் குடி மாறன் நாயனாரும் மனைவியாரும் திகைத்துத் திகிலடைந்து செய்வதறியாது நின்றனர். பரமசிவன் பார்வதிதேவியாரோடு இடப வாகனத்தில் தோன்றி; "அன்பனே எனது அடியவர்களுக்கு உணவளித்துப் பேணிக் காத்த நீயும் உனது மனைவியும் எனது இருப்பிடமாகிய திருக்கைலாய மலையை அடைந்து இன்புற்றிருங்கள்" என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார். இளையான் குடிமாற நாயனாரும் அவரது மனைவியாரும் சிவபெருமானை வணங்கினர்.

## திருச்சிற்றம்பலம்

## மெய்ப் பொருள் நாயனார்

சேதி நாட்டிலே உள்ள திருக்கோவலூரின் அரசர் மெய்பொருள் நாயனார். இவர் சிவனடியார்களின் திருவேடத்தை மெய்ப்பொருள் என்று நினைத்து வணங்கிப் போற்றுபவர். அத்துடன் சிவாலயங்களுக்கு எல்லாவிதமான உதவிகளையும் செய்வதோடு சைவ நெறி தவறாது நாட்டை ஆண்டு வந்தார்.

முத்தன் என்பவன் ஒரு சிற்றரசன். பல முறை மெய்பொருள் நாயனாருக்கு எதிராகப் படையைத் திரட்டி வந்து போர் செய்து படு தோல்வி அடைந்தான். போர் செய்து அவரை வெற்றி கொள்ள முடியாதென உணர்ந்த முத்தன், சிவவேடம் தாங்கி உடை வாளை இடையிலே மறைத்து வைத்துக் கொண்டு மெய்பொருள் நாயனாரின் அரண்மனைக்கு வந்தான்.

போலிவேடதாரி என உணராத வாயிற் காவலர்கள் அவனது பாதங்களைப் பற்றி வீழ்ந்து வணங்கிய பின் அரசமாளிகைக்குள் அழைத்துச் சென்றனர். அரசர் சிவனடியார்களைக் கண்டால் அவர்களது பாதங்களைப் பணிய வேண்டும் என்று எல்லோருக்கும் கட்டளையிட்டு இருந்ததால் சேவகர்கள் போலிவேடதாரியான முத்தனை விழுந்து வணங்கினர்.

தலைமை அமைச்சர் ஓடோடி வந்து முத்தனை வணங்கி ஆசனத்தில் இருத்தி, அவன் வந்த செய்தியைச் சொல்ல அந்தப்புறம் சென்றார்.

அரசர் நித்திரையாக இருப்பதாகச் சொன்ன அரசியார், அரசரை எழுப்புவதற்காக உள்ளே சென்றார்.

தலைமை அமைச்சருடன் வந்த போலிவேடதாரியான முத்தனின் சிவவேடத்தைக் கண்டு மெய்ப்பொருள் நாயனார் மெய் மறந்தார். பேரன்புடன் ஓடிச் சென்று அவனது பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். சரீரம் முழுவதும் வீபூதி தரித்துச் சடையை விரித்து உருத்திராக்க மாலைகள் பலவற்றை அணிந்து வந்த முத்தனை சிவனே தனக்கு நேரில் தரிசனம் தர வந்திருப்பதாக நினைத்து அவனைக் கட்டித்தழுவிக் கண்ணீர் சிந்தினார்.

"நாயனாரே, உமக்கு மெய்பொருளை உரைக்கவந்தேன். அதற்குத் தனியான தொரு மாளிகையை ஏற்பாடு செய்யுங்கள். அதற்குள் நாம் இருவரும் தான் இருத்தல் வேண்டும்" என்றான் முத்தன்.

தனியான மாளிகையில் ஆசனத்தில் இருந்த முத்தனை நிலத்தில் அமர்ந்திருந்து வணங்கினார் மெய்பொருள் நாயனார்.

தனது கபட நோக்கத்தை நிறைவேற்றத்துணிந்த முத்தன் ஆசனத்தால் எழுந்து மெய்பொருள் நாயனாருக்கு அருகே சென்று, தான் மறைத்து வைத்திருந்த உடைவாளை எடுத்து அவரை பல முறை வெட்டினான். அரசரின் பலத்த அலறலைக் கேட்ட சேவகர்கள் உள்ளே ஓடி வந்தனர். முத்தன் இரத்தம் தோய்ந்த வாளுடன் நிற்பதையும், அரசர் இரத்த வெள்ளத்தில் மிதப்பதையும் கண்டு அளவில்லாத கோபம் கொண்டு ஆயுதங்களை உருவி அவனை வெட்டப் பாய்ந்தனர். அரசர் தலைமைச்சேவகனான தத்தனை அழைத்தார்.; "தத்தா, இவர் சிவனடியார் இவருக்குத் தீங்கு ஏற்படாதபடி பார்த்துக் கொள்வது உனது கடமை. இவருக்கு எந்த இடையூறும் செய்யாது அழைத்துச் சென்று ஊரின் எல்லையில் விட்டு விட்டுவா'' என்றார்.

மெய்ப்பொருள் நாயனாருக்கு ஆபத்தென அறிந்த மக்கள் வீதியோரங்களில் ஆயுதங்களுடன் கூடி நின்றனர். தத்தன், முத்தனை அழைத்து வரும்போது அவனைக் கொல்ல வந்தனர்.; ''இவனைப் பாதுகாப்பாக அழைத்தச் சென்று விடும்படி அரசர் கட்டளை இட்டிருக்கிறார். எல்லோரும் விலகிச் செல்லுங்கள். யாராவது இவனைத் தாக்கினீர்களானால் அவர்களைக் கொல்வேன்'' என்றான் தத்தன்.

முத்தனை, ஊரின் எல்லையில் விட்டுவிட்டு அரசமாளிகைக்குத் திரும்பிய தத்தன், விரைந்து சென்று அரசரைச் சந்தித்தான். அரசனுக்கு அரண்மனை வைத்தியர்கள் சிகிச்சை அளித்துக் கொண்டிருந்தனர். தத்தனைக் கண்ட அரசர் அவசரமாக எழுந்து கேட்டார்; ''சிவனடியாரைப் பாதுகாப்பாகக் கொண்டு சென்று விட்டு விட்டாயா...?''

''ஆம் அரசே'' என்றான் தத்தன்.

''இன்று நீ எனக்குச் செய்த பேருதவிக்குக் கைமாறாக நான் உனக்கு எதைத் தந்தாலும் ஈடாகாது. தலைமை அமைச்சரே, தத்தனுக்குத் தேவையான பொன்னும் பொருளும் நிலமும் கொடுங்கள்'' என்ற அரசன் தனது மகனை அழைத்து; ''மைந்தா என்னைப் போல நீயும் சிவனடியார்களைச் சிவன் எனப் போற்றி வாழ்'' என்று கூறிவிட்டு உயிர்நீத்தார்.

## திருச்சிற்றம்பலம்

### விறன்மிண்ட நாயனார்

மலை நாட்டிலே செங்குன்றூரிலே பரமசிவனது திருவடிகளை எவ்வேளையிலும் மனதில் இருத்தி வணங்கி வாழும் விறன்மிண்ட நாயனார் என்னும் ஒரு சிவனடியார் வாழ்ந்து வந்தார். அவர் தான் வேளாண்மை செய்து பெறும் வருமானம் அனைத்தையும் சிவனடியார்களுக்கு உணவும் உடையும் அளித்துப் பேணுவதிலே செலவு செய்து வந்தார். அவர் எந்தவொரு சிவத்தலத்திற்குச் சென்றாலும், முதலிற் சென்று சிவனடியார்களை வணங்கி அவர்களுக்கான தேவைகளைப் பூர்த்திசெய்த பின்பே சிவனை வணங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் விறன்மிண்ட நாயனார் திருவாரூரைச் சென்றடைந்து தேவாசிரய மண்டபத்தில் அமர்ந்திருந்த சிவனடியார்களைத் தொழுது வணங்கிவிட்டுப் பின் வீரட்டானேஸ்வரரை வணங்கினார். அப்பொழுது அங்கே வந்த சுந்தரமூர்த்தி நாயனார் அங்கிருந்த சிவனடியார்களைக் கண்டு கொள்ளாமல் நேரே சென்று வீரட்டானேஸ்வரரை வணங்கினார். இதைக்கண்ட விறன்மிண்ட நாயனார் கோபம் கொண்டு; "அடியார்களை வணங்கிச் செல்லாத சுந்தரன் அடியார்க்குப் பிறப்பட்டவனே. அத்துடன் சுந்தரனை தடுத்தாட் கொண்ட சிவனும் அடியார்க்கு பிற்பட்டவன்" என்றார்.





சுந்தரமூர்த்தி நாயனார், விறன்மிண்ட நாயனார் அடியவர்கள் மீது கொண்டுள்ள பக்தியின் வலிமையைக் கண்டு திகைத்துப் போனார். அதன்பின் அவ்வடியார்களைச் சிறப்பித்து; "தில்லைவாழந்தணர் தமடியார்க்கு மடியேன்'' என்ற திருத் தொண்டத் தொகை என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். அதைக்கேட்டு மகிழ்ந்த விறன்மிண்ட நாயனார் சுந்தரமூர்த்தி நாயனார் அடியார்கள் மீது வைத்திருந்த பக்தியின் வலிமையை உணர்ந்து தான்கூறிய கொடிய வார்த்தைகளுக்காகச் சுந்தரமூர்த்தி நாயனாரின் பாதங்களில் விழுந்து வணங்கி மன்னிப்புக் கேட்டார். இந்தச் சங்கம பக்தியின் வலிமையைக் கண்ட சிவபெருமான் விறன்மிண்ட நாயனாரைக் கணங்களுக்குத் தலைவராக்கினார்.

## திருச்சிற்றம்பலம்

### அமர் நீதி நாயனார்

சோழ நாட்டிலே பழையாறை என்னும் ஊரிலே பெருஞ் செல்வமுடைய அமர்நீதி நாயனார் என்ற ஒரு சிவனடியார் இருந்தார். சிவனடியார் மீது பேரன்பு பூண்ட அமர்நீதி நாயனார், திருநல்லூர் என்னும் சிவத்தலத்திலே அன்னதான மடம் ஒன்று அமைத்துச் சிவனை வணங்க வரும் அடியவர்களுக்கு உணவு கொடுத்து வந்தார். அத்துடன் அவர் சிவனடியார்க்கு உடுபிடைவைகளையும் கோவணத்தையும் கொடுத்து வந்தார்.

ஒரு நாள் சிவபெருமான் பிராமண இளைஞராக உருக்கொண்டு இரண்டு கோவணங்களையும் விபூதிப்பையையும் ஒரு தடியில் கட்டிக் கொண்டு அமர்நீதி நாயனாரின் மடத்திற்கு வந்தார்.

அமர்நீதி நாயனார் அவரை அழைத்து வந்து ஆசனத்தில் இருத்தி வணங்கினார்.

''நீர், அடியவர்களுக்கு உண்ண உணவும் அணிய உடைகளும் கோவணமும் வழங்குவதாக அறிந்து மனம் மகிழ்ந்தேன். அதனால் உம்மைக் கண்டு களிக்கும் நோக்குடன் வந்தேன். நான் காவிரியாற்றில் சென்று நீராடி விட்டு வரும்வரை இக்கோவணத்தைக் கவனமாக வைத்திரும். இக்கோவணம் பல சிறப்புக்களை உடையது. அதனால் நான் வரும்வரை பாதுகாப்பாக வைத்திருக்கவே உமது உதவியை நாடினேன்'' என்று கூறித் தனது தடியில் கட்டப்பட்டிருந்த ஒரு கோவணத்தை அவிழ்த்துக் கொடுத்தார்.

நீராடச் சென்ற பிராமணர் தாம் நீராடும் போது அமர்நீதி நாயனார் வைத்திருந்த கோவணத்தை மறையச் செய்ததோடு மழையையும் வருவித்தார்.

மழையில் நனைந்து கொண்டு வந்த பிராமண இளைஞர் ஈரத்தைத் துவட்டிவிட்டு அமர்நீதி நாயனாரிடம் சென்று தான் கொடுத்த கோவணத்தைக் கேட்டார். அமர்நீதி நாயனார் தாம் வைத்த இடத்தில் சென்று பார்த்தார். கோவணத்தைக் காணவில்லை. அதனால் கலக்கமுற்ற அவர் எல்லா இடங்களிலும் தேடிப்பார்த்தார். எங்கும் அதைக் காணவில்லை. பிராமண இளைஞர் முன் துக்கத்துடன் வந்த அமர்நீதி நாயனார் கண்களால் கண்ணீர் பெருக கோவணம் காணாமற் போன விடையத்தைச் சொன்னார்.

பிராமண உருவம் கொண்டு வந்த சிவபெருமான் அமர்நீதி நாயனாரின் மேற் கோபம் கொண்டு; ''சிவனடியார்களுக்கு உணவும் உடையும் கோவணமும் கொடுப்பதாகக் கேள்விப்பட்டு நான் உம்மை நாடி வந்தேன். நீர் இப்படி ஏமாற்றுவீர் என்று நான் எண்ணவில்லை'' என்றார்.

''சுவாமி என்னை அறியாமல் இப் பெருந்தவறு நடந்து விட்டது. தயவு செய்து பொறுத்தருளும். தாங்கள் தந்த கோவணத்திற்குப் பதிலாகத் தாங்கள் கேட்கும் பொருட்கள் அனைத்தும் தருவேன்'' என்றார்.

''அப்படியா, மிகவும் நல்லது. இக்கோவணமும் உமக்கு நான் தந்த கோவணத்தை ஒத்தது. இக்கோவணத்தின் நிறைக்குச் சமமான கோவணத்தைத் தந்தால் சரி'' என்றார்.

தராசு ஒன்றைக் கொண்டு வந்து நட்ட அமர்நீதி நாயனார், ஒரு தட்டில் பிராமண இளைஞர் கொடுத்த கோவணத்தை வைத்துவிட்டு மறு தட்டில் தன்னிடமிருந்த கோவணங்கள் யாவற்றையும் மூட்டையாகக் கட்டி வைத்தார். பிராமண இளைஞரின் கோவணத்தை இட்ட தட்டு தாழ்ந்தது. அதனால் அமாநீதி நாயனார் தம்மிடம் இருந்த வஸ்திரங்கள் அனைத்தையும் கொண்டு வந்து தராசில் வைத்தார். அப்படி இருந்தும் பிராமண இளைஞரின் கோவணம் வைத்த தட்டுத் தாழ்ந்தே இருந்தது. அதனால் பெருஞ் செல்வரான அமர்நீதி நாயனார் தன்னிடம் இருந்த அனைத்துப் பொருட்களையும் கொண்டு வந்து வைத்தார். எனினும் நிறை சமப்படவில்லை. அதனால் தனது மனைவியையும் புத்திரனையும் தராசில் இட்டுவிட்டு தானும் ஏறிநின்றார். அப்பொழுது தான் நிறை சமப்பட்டது.

அப்பொழுது அப்பிராமண இளைஞர் தான் தாங்கிவந்த வடிவத்தை மறைத்துப் பார்வதிதேவியாரோடு இடபவாகனத்தில் காட்சியளித்தார்; "நீங்கள் மூவரும் எம்மையும் எமது அடியார்களையும் போற்றி அவர்களுக்கு உணவும் உடையும் கோவணமும் கொடுத்து உதவியதால் எமது சந்நிதானத்தில் நிரந்தரமாக வீற்றிருக்கக்கடவீர்" என்று அருளி மறைந்தார்.அக்கணம் அவர்கள் ஏறி நின்ற தராசு விமானமாக மாறி வானத்தில் பறந்தது. அக்காட்சியைக் கண்டு அடியவர்கள் மெய்மறந்து நிற்க, தேவர்கள் பூமாரி சொரிந்தனர்.

## திருச்சிற்றம்பலம்

## எறிபத்த நாயனார்

கொங்கு நாட்டின் தலைநகரான கருவூரிலே ஆனிலை என்னும் ஆலயத்தின் அருகே சிவனடியார்கள் மீது அளவற்ற பக்தி கொண்ட எறிபக்த நாயனார் என்றொரு சிவனடியார் வாழ்ந்தார். அவர் சிவனடியார்களுக்குத் திருத்தொண்டுகள் பலவும் செய்து வந்தார். சிவனடியார்களுக்கு யாராவது தீங்கு செய்தால் அவர்களை அவர் மழுவினால் வெட்டிக் கொன்று விடுவார்.

அவ்வூரிலே வாழ்ந்த சிவகாமி ஆண்டார் என்னும் சிவனடியார் தினமும் பூப்பறித்து மாலை கட்டி ஆனிலை என்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானுக்குச்சூட்டுவார். ஒரு நாள் அவர் நந்தவனத்தில் கூடை நிறையப் பூப்பறித்துக் கொண்டு வீதிவழியாக வந்தார். அப்பொழுது அந் நாட்டின் அரசரான புகழ்ச்சோழ நாயனாரின் பட்டத்து யானை வயோதிபரான சிவகாமியாண்டாரின் கையில் இருந்த கூடையைப் பறித்து தனது கால்களின் கீழே போட்டு மிதித்துச் சிதைத்தது. அதனால் கோபம் கொண்ட சிவகாமியாண்டார் பூப்பறிப்பதற்காக வைத்திருந்த வளைவுடைய கம்பைக் கொண்டு யானையைத் துரத்தினார். யானை விரைவாகச் சென்று விட்டது. வயோதிபரான சிவகாமியாண்டார் நிலத்தில் வீழ்ந்தார். அவரது கைகளில் இருந்தும் கால்களில்இருந்தும் இரத்தம் பெருகியது. இதைக்கண்ட எறிபக்த நாயனார் தனது மழுவை எடுத்து யானையின் தும்பிக்கையைத் துண்டித்ததோடு அதன் பாகர்கள் ஐவரையும் கொன்றார்.

இதையறிந்த அரசன் தனது சேனையுடன் யானையைக் கொன்ற இடத்திற்கு வந்தான்.எறிபக்த நாயனார் மழுவுடன் நிற்பதைப் பார்த்து, "சிவனடியாரான இவர் காரணம் இன்றிப் பட்டத்து யானையையும் கொன்று அதன்பாகர்களையும் கொன்றிருக்க மாட்டார்." என நினைத்துப் போர் வீரர்களை தூரத்தே நிறுத்தி விட்டுக் குதிரையிலிருந்து இறங்கி எறிபக்த நாயனார் நின்ற இடத்திற்கு நடந்து வந்தார்.

"சுவாமி, தாங்கள் எனது பட்டத்து யானையையும் பாகர்களையும் கொன்றதாக அறிந்தேன். அது செய்த பிழை யாதோ?" என்று பணிவுடன் கேட்டார்.

"இந்த யானை சிவகாமியாண்டார் சுவாமிக்குச் சாத்தவெனக் கொண்டு சென்ற பூக்கூடையைப் பறித்துச் சிதைத்து விட்டது. யானையின் அக் கொடிய செயலைப் பாகர்கள் தடுத்திருத்தல் வேண்டும். அவர்கள் தடுக்காமையால் தான் அவர்களைக் கொன்றேன்" என்றார் கோபமாக.





"சிவனடியாரை மதியாமல் துன்பஞ் செய்த யானையைக் கொன்றதும் அதை வழி நடத்தத் தவறிய பாகர்களைக் கொன்றதும் நியாயமானது. அத்துடன் அந்த யானைக்கு உரித்துடையவனான என்னையும் கொல்லுவது தான் நியாயம். அதனால், என்னைத் தங்கள்மழுவாயுதத்தால் கொன்றால் அவ்வாயுதத்திற்குக் களங்கம் ஏற்படும். எனவே இந்த உடைவாளால் என்னை வெட்டிக் கொல்லுங்கள்" என்று கூறித் தனது உடைவாளை எடுத்துக் கொடுத்தார் புகழ்ச்சோழ நாயனார்.

"சிவனடியார்கள் மீது பற்றும் பாசமும் பெரு மதிப்பும் வைத்திருக்கும் புகழ்ச்சோழ நாயனாரைத் தப்பாக நினைத்து விட்டேனே" என்று மனம் வருந்திய எறிபக்த நாயனார் அரசர் கொடுத்த வாளால் தனது கழுத்தை அரிந்தார். அதைக் கண்ட புகழ்ச்சோழ நாயனார் விரைந்து சென்று கழுத்தை அறுக்கும் எறிபக்த நாயனாரின் கரத்தைப் பிடித்தார்.

அப்பொழுது; "எறிபக்த நாயனாரினதும் புகழ்ச்சோழ நாயனாரினதும் மகிமையை உலகோர்க்கு வெளிப்படுத்த நானே பூக்கூடையை யானையைக் கொண்டு சிதைப்பித்தேன்" என்று ஓர் அசரீதி வாக்கு வானத்தில் ஒலித்தது.

எறிபக்த நாயனார் சிவனைத் தொழுதார். இறந்த யானையும் பாகர்களும் உயிர் பெற்று எழுந்தனர். புகழ்ச்சோழ நாயனார் பட்டத்து யானையின் மீது ஏறி அரண்மனைக்குச் சென்றார். சிவகாமியாண்டார் பூநிறைந்த கூடையை எடுத்துக் கொண்டு மாலை கட்டுவதற்காகக் கோயிலுக்குச் சென்றார்.

சிவனடியார்கள் மேல் அளவற்ற பாசம் கொண்ட எறிபக்த நாயனார், அடியவர்களுக்கு வரும் இடையூறுகளை நீக்கிச் சிவத்தொண்டு செய்து பின்பு திருக்கைலாய மலைக்குச் சென்று சிவகணங்களுக்குத் தலைவர்ஆனார்.

## திருச்சிற்றம்பலம்

## ஏனாதிநாத நாயனார்

சோழ நாட்டிலே எயினனூரிலே அரச குமாரர்களுக்கு வாள்வித்தை கற்பிக்கும் ஏனாதி நாதர் என்றொரு சிவனடியார் இருந்தார். அவர் வீபூதியில் மகா பக்தியுடையவர். வாள்வித்தையைக் கற்பிப்பதன் மூலம் அரசர்களிடம் இருந்து கிடைக்கும் பெருந் தொகையான பொருட்களை சிவனடியார்களுக்கு நாள் தோறும் கொடுத்து வந்தார்.

அதி சூரன் என்பவனும் அரச குமாரர்களுக்கு வாள்வித்தையைக் கற்பிப்பவன். எனினும், ஏனாதிநாத நாயனாருக்கு வருமானம் அதிகமாகக் கிடைத்து வந்தது. அதனால் பொறாமைப் பட்ட அதி சூரன் ஏனாதிநாத நாயனாரின் வீட்டிற்கு வீரர் கூட்டத்துடன் சென்று போருக்கு அழைத்தான். ஏனாதிநாதர் அவனையும் அவனது வீரர்களையும் தோற்கடித்தார். ஏனாதிநாதரோடு போர் செய்யமுடியாத அதிசூரன் சேனைகளோடு புறம் காட்டி ஓடினான்.

போரிட்டு ஏனாதிநாதரைக் கொல்ல முடியாது என்று தெரிந்து கொண்ட அதிசூரன், அவரை வஞ்சனையால் கொல்ல நினைத்து, ஏவலாளனை அனுப்பி இருவரும் தனியே போர் செய்வோம் எனச் சொல்லி அனுப்பினான்.

ஏனாதிநாதர் அதற்குச் சம்மதம் தெரிவித்து உடைவாளையும் கேடயத்தையும் எடுத்துக் கொண்டு போர் செய்ய வந்தார். அதிசூரன் தனது நெற்றியில் வீபூதி தரித்து அதைக் கேடயத்தால் மறைத்துக் கொண்டு வந்தான். ஏனாதிநாதருக் கருகில் வந்தவுடன் கேடயத்தை விலக்கினான். வீபூதி மேல் அளவுக்கதிகமான பக்தியை வைத்திருந்த ஏனாதிநாத நாயனார் அதிசூரனது நெற்றியில் இருந்த வீபூதியைக் கண்டு பரவசமடைந்து சிவனடியாரைக் கொல்லக் கூடாதென நினைத்தார். அவரைத் தொழுவதற்காக வாளையும் கேடயத்தையும் கீழே போட நினைத்தார். பின்பு ஒரு சிவனடியார் நிராயுத பாணியைக் கொல்வது பாவமானது என்றெண்ணிப் பேசாமல் நின்றார். அதிசூரன் ஏனாதிநாத நாயனாரைத் தான் மறைத்து வைத்திருந்த உடை வாளால் வெட்டிக் கொன்றான். அப்பொழுது பரமசிவன் அவ்விடத்தில் தோன்றி ஏனாதிநாத நாயனாரைத் தம்முடன் சேர்த்துக் கொண்டார்.

# திருச்சிற்றம்பலம்

## கண்ணப்ப நாயனார்

பொத்தப்பி நாட்டிலே உள்ள உடுப்பூர் என்னும் காட்டில் வாழும் வேடர்களின் அரசன் நாகன். அவனது மனைவி தத்தை. இருவரும் நெடுங்காலம் புத்திர பாக்கியம் இல்லாமையால் குறிஞ்சி நிலக்கடவுளான முருகனைத் தொழுதனர். அதன் பயனாக ஓர் ஆண் மகவு பிறந்தது. மகிழ்வுடன் தனது மகனைத் தூக்கிய நாகன், அவன் திண்ணென இருந்ததால் திண்ணன் எனப் பெயரிட்டான். திண்ணன் வளர்ந்து உரிய பருவத்தை அடைந்ததும், அவனுக்கு வில்வித்தையை நாகன் கற்பித்தான். வில்வித்தையில் திண்ணன் சாமர்த்தன் ஆனான். வயோதிபப் பருவத்தை அடைந்த நாகன் வேட்டைக்குச் செல்ல முடியாததனால் திண்ணனை வேட்டுவ வீரர்களோடு வேட்டை யாடுவதற்காகக் காட்டுக்கு அனுப்பினான்.

திண்ணன் வீரர்களுடன் வேட்டை யாடிக்கொண்டிருக்கும் போது ஒரு பன்றியைக் கண்டான். பன்றி இவர்களைக் கண்டதும் விரைவாக ஓடத் தொடங்கியது. திண்ணனும் நாணன், காடன் என்ற வேட்டுவ வீரர்கள் இருவரும் பன்றியைத் துரத்திச் சென்றனர். பன்றி மிகவும் வேகமாக ஓடியது. அவர்களும் பன்றியை விடாது துரத்திச் சென்றனர். நெடுந்தூரம் ஓடிய பன்றி களைப்பு மிகுதியினால் ஒரு மரத்தின் கீழ் நின்றது. அப்பொழுது அம்பை எடுத்த திண்ணன் நாணிற்பூட்டி பன்றிக்கு இலக்கு வைத்து எய்தான். அம்பு பட்ட பன்றி துடிதுடித்து இறந்தது.

வெகுநேரத்திற்குப் பின் அவ்விடத்திற்கு வந்த நாணனும் காடனும் பன்றி இறந்து கிடப்பதைக் கண்டு மகிழ்ந்தனர்.

"நெடுந்தூரம் ஓடி வந்தமையால் பசி என்னை வருத்துகிறது. அத்துடன் தாகமாகவும் இருக்கிறது. எங்கேயாவது தண்ணீர் கிடைத்தால் பன்றியை நெருப்பிலே வாட்டி உண்டு தண்ணீர் குடிக்கலாம்" என்று திண்ணனார் சொன்னார்.

"அருகே பொன்முதலி ஆறு ஓடுகிறது வாருங்கள் செல்வோம்" என்ற நாணன் பன்றியைத் தூக்கிக் கொண்டு பொன் முதலியாற்றை நோக்கி நடந்தான். வழியில் திருக்காளத்தி மலையைக் கண்ட திண்ணனார்; "மலைமேல் ஏறிப் பார்ப்போம்" என்றார்.

"இம்மலையில் குடுமித்தேவர் வீற்றிருக்கிறார். நாம் சென்றால் கும்பிடலாம்" என்றான் காடன்.

பொன்முதலியாற்றில் நீராடிய திண்ணனார் காடனைப் பார்த்து; "காடனே நீ இப்பொழுது பன்றியை உண்பதற்கு ஏற்ற வகையில் பதஞ் செய்து வை, நானும் நாணனும் குடுமித்தேவரை வணங்கிவிட்டு வருகிறோம்". என்று கூறித் திருக்காளத்தி மலையில் ஏறினார். ஏறஏறத் திண்ணனாருக்குப் பரவசம் ஏற்பட்டது. விரைவாக ஏறினார். கன்றைக் கண்ட பசுவைப்போலப் பாசத்துடன் குடுமித்தேவரின் அருகில் சென்று அவரைக் கட்டி அணைத்துப் பெரு மகிழ்வுற்றார். பின்; "தனியே காட்டில் இருக்கும் உமக்குத் துணையாக நான் எந்நாளும் இருப்பேன். தனித்திருக்கும் உமக்குச் சுவையான உணவு கொண்டு வருகிறேன்" என்று கூறிப் பொன் முதலியாற்றங்கரைக்குத் திண்ணனார் வந்தார்.

பொன்முதலியாற்றங்கரையில் காடன் தீயில் பன்றியை வாட்டிக் கொண்டிருந்தான். திண்ணனார் அப்பன்றியின் அருகே சென்று வாட்டிய இறைச்சியை அம்பால் கிழித்துத் தனது வாயிலிட்டுச் சுவைத்தார். நல்ல சுவையான இறைச்சியை உமிழ்ந்து தேக்கம் இலையில் வைத்தார். சுவையற்ற இறைச்சியை நிலத்தில் உமிழ்ந்தார். பின் காட்டுப்பூக்களைப் பறித்துத் தலையிலே செருகினார். பொன்முதலியாற்று நீரை வாயிலே முகர்ந்தெடுத்துக் கொண்டு குடுமித்தேவரின் கோயிலை அடைந்தார்.

சுவாமிக்குச் சூட்டப்பட்டிருந்த பூக்களைத் தனது கால்களால் அப்புறப்படுத்தி விட்டு வாய்க்குள் முகர்ந்து கொண்டு வந்த நீரைக் குடுமித் தேவரின் மேல் கொப்பளித்தார். பின்பு தான் கொண்டு வந்த பூக்களைச்





சுவாமிக்குச் சூடினார். அதன் பின் இறைச்சியை ஒவ்வொன்றாக எடுத்துத் தீத்தினார். சுவாமி விருப்புடன் அவற்றை உண்டார்.

திண்ணனாரின் செயல்களைக் கண்டு பயந்த நாணனும் காடனும் அதைப்பற்றி நாகனுக்குச் சொல்லி அவனை அழைத்து வரப்புறப்பட்டனர்.

இரவானதும் அம்பையும் வில்லையும் கையில்ஏந்திய திண்ணனார் விடியும் வரை கோயில் வாசலில் விழித்திருந்து காவல் காத்தார்.விடிந்ததும் சுவாமிக்கு உணவு தேடக் காட்டுக்குச் சென்றார்.

குடுமித்தேவரைத் தினமும் சிவாகம முறைப்படி அர்ச்சிப்பவரான சிவகோசரியார் என்னும் அந்தணர் ஆசாரசீலராகப் பூசைப் பொருட்களுடன் குடுமித்தேவரது கோயிலுக்குச் சென்றார். கோயிலுள் மாமிச வாடை வீசுவதைக் கண்டு தாங்கமுடியாத துயரம் கொண்டு அவற்றை நீக்கி விட்டு ஆகம முறைப்படி பிராயச்சித்தம் செய்து வணங்கிப் பூசை செய்து விட்டுத் தனது வீட்டுக்குத் திரும்பினார்.

சிவபெருமானின் மேல் அளவில்லாத பக்தி கொண்ட திண்ணனார் பகற்பொழுதில் தினமும் வேட்டை ஆடி முன்போல இறைச்சியை தீயிலிட்டு வாட்டி, சுவைத்துப் பார்த்து சிவபெருமானுக்குக் கொடுக்க, சிவபெருமான் அவற்றை அன்போடு வாங்கி உண்டு மகிழ்ந்திருந்தார்.

தினமும் ஆலயம் அசுத்தப்படுத்துவதைப் பொறுக்க முடியாத சிவகோசரியார்; "சுவாமி தினமும் வேடுவர்கள் இவ்வாலயத்தை அசுத்தப்படுத்துகின்றனர். இதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனவே, தயவு செய்து தேவரீர் என் மீது இரக்கம் கொண்டு இவ்விதம் நடைபெறாமல் காத்துக்கொள்ளும்" என்று முறையிட்டார்.

அன்றிரவு திருக்காளத்தி அப்பர் சிவகோசரியாரின் கனவிற் தோன்றி;"அன்பனே, கோயிலை வேடுவன் அசுத்தப்படுத்துவதாக எண்ணாதே. அவன் என் மேல் வைத்த அன்பினால் அப்படிச் செய்கிறான். அன்பால் அடியவர்கள் செய்யும் செயல்கள் எல்லாம் என்க்கு இன்பத்தையே தரும். அவனது கால்பதித்த இடங்கள் எல்லாம் எனக்கு இன்பத்தைத் தருகின்றன. வாயால் கொப்பளிக்கும் நீர் கங்கையாற்று நீரை விடப் புனிதமானதாக எனக்குத் தோன்றுகிறது. அவன் படைக்கும் எச்சில் உணவு தேவாமிர்த்தத்தை விடச் சுவையாக இருக்கிறது. நீ அவனது செய்கைகளை எனக்குப் பின்னால் மறைந்திருந்து பார்" என்று கூறி மறைந்தார்.

மறு நாள் சிவகோசரியார் பொன்முதலியாற்றில் நீராடி ஆகமமுறைப்படி பூசை செய்துவிட்டு சுவாமியின் பிற்பக்கத்தில் மறைத்திருந்தார். பக்திப் பரவசமாகத் தான் கொண்டு வரும் பூசைப்பொருட்களுடன் வந்த திண்ணனார், சுவாமியின் வலக் கண்ணில் இருந்து இரத்தம் வழிவதைக் கண்டு பதறித் துடித்தார். பூசைப் பொருட்களை வீசி எறிந்து விட்டுச் சுவாமியின் வலது கண்ணால் வழியும் இரத்தத்தைத் துடைத்தார். துடைக்கத் துடைக்க இரத்தம் பெருகியது; உடனே காட்டிற்குச் சென்று பச்சிலைகளைப் பறித்து வந்து அவற்றைப் பிழிந்து சாறு எடுத்து சுவாமியின் கண்ணுக்கிட்டார். அப்படி இருந்தும் சுவாமியின் கண்களில் இருந்து இரத்தம் கசிவது நிற்கவில்லை.

திண்ணனாருக்கு ஏற்பட்ட துயருக்கு அளவேயில்லை. பித்துப் பிடித்தவர்போல அங்கும் இங்கும் ஓடினார். தரையில் விழுந்து உருண்டார். பெருங்குரல் எடுத்து அழுதார். பின்; "ஊனுக்கு ஊனிடல் வேண்டும்" என்ற பழமொழிக்கிணங்கத் தனது கண்ணைத் தோண்டி சுவாமியுடைய கண்ணிலே அப்பினார். அப்பியவுடன் சுவாமியின் கண்ணிலிருந்து இரத்தம் வருவது நின்றது. அதனால் மகிழ்ந்த திண்ணனார் மகிழ்ச்சியால் ஆனந்தக் கூத்தாடினார்.

திண்ணனாரின் மாசில்லாத அன்பை உலகிற்குப் புலப்படுத்த விரும்பிய திருக்காளத்தியப்பர் தனது இடக்கண்ணில் இருந்து இரத்தம் கசியப் பண்ணினார். அதைக்கண்ட திண்ணனார் கவலை கொண்ட போதும்; "இன்னொரு கண் இருக்க நான் ஏன் துயரப்படுதல் வேண்டும்" என்று நினைத்து அடையாளமாகத் தனது காலை சுவாமியின் இரத்தம் வழியும் கண்ணுக்கருகே வைத்துத் தனது மறு கண்ணை அம்பினால் தோண்டினார்.

உயிர்கள் மீது அளவற்ற அன்பை வைத்திருக்கும் சிவபெருமான் திண்ணனாரது செயலைப் பொறுக்க முடியாது; "நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப" என்று சொல்லியவாறு திண்ணனாரது கரத்தைப் பற்றினார். பின்; "யாரும் செய்யமுடியாத இக்காரியத்தைச் செய்த உன்னை உலகோர் 'கண்ணப்பர்' என்று அழைப்பார்கள். உன் உயிரை விட என்னை மேலாக நினைத்த நீ என்றும் எனது வலப்பாகத்தில் நிற்கக் கடவாய்" எனக்கூறினார்.

தேவர்கள் பூமாரி சொரிந்தனர். சிவகோசரியார் கண்ணப்பரின் களங்கமில்லாத அன்பை வியந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.

திருச்சிற்றம்பலம்

## குங்குலியக் கலய நாயனார்

திருக்கடவூரிலே சிவபக்தி மிக்க கலயர் என்றொரு பிராமணர் இருந்தார். அவர் அவ்வூரில் உள்ள திருவீரட்டானம் என்னும் திருக்கோயிலில் வீற்றிருக்கின்ற பரமசிவனுக்குத் தினமும் குங்கிலியத் தூபம் இட்டு வழிபட்டு வந்தார். இவ்வாறு வாழ்ந்து வரும் காலத்திலே பரமசிவனின் அருளால் அவருக்கு வறுமை வந்தெய்தியது. வறுமையுற்றபோதும் கலய நாயனார் தமது வீட்டிலிருந்த பொருட்களை ஒவ்வொன்றாக விற்று பரமசிவனுக்குத் தினமும் குங்கிலியத் தூபம் இட்டு வந்தார்.

ஒரு நாள் அவரது மனைவியார் தனது தாலியைக் கழற்றிக் கொடுத்து "நாதா, இரண்டு தினங்களாக எமது பிள்ளைகள் உணவின்றி இருக்கிறார்கள். அவர்கள் படும் வேதனையை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இந்தத் தாலியைக் கொண்டு சென்று விற்று அரிசியும் சமையற் பொருட்களும் வாங்கி வாருங்கள்" என்று கவலையுடன் சொன்னாள்.

தாலியை வாங்கிக் கொண்டு கடைக்குப் புறப்பட்ட கலய நாயனார், வழியில் குங்கிலியப் பொதியோடு வணிகன் ஒருவன் வருவதைக் கண்டு, தான் வாங்க வேண்டிய பொருளை மறந்து அவ்வியாபாரி கொண்டு வந்த குங்கிலியத்தைத் தன்னிடம் இருந்த தாலியைக் கொடுத்து வாங்கிக் கொண்டு போய் திருவீரட்டானத்தில் இருக்கும் பரமசிவனுக்குத் தூபம் இட்டு வழிபட்டார்.

கணவன் சமையற் பொருட்களுடன் வருவார் எனக் காத்திருந்த கலயரின் மனைவி, இரவாகியும் அவர் வராமையால் துயருற்றார். பசியால் களைப்புற்ற பிள்ளைகள் அறிவிழந்து கிடந்தனர்.

இரவானதும் கலய நாயனாரது வீடெங்கும் நெல்லும் பொன்னும் பொருட்களும் பரமசிவனின் அருளால் குவிந்தன. பரமசிவனைக் குங்கிலியத் தூபம் இட்டு வணங்கிக் கொண்டிருந்த கலயரின் முன் பரமசிவன் தோன்றி; "குங்கிலியக் கலயரே,உமது அன்பை மெய்ச்சினோம். நீ வீடு சென்று அறு சுவை உணவுவகைகளை உண்டு களை தீரும்" என்றார்.

வீட்டுக்குச் வந்த குங்கிலியக் கலய நாயனார், வீட்டில் குவித்துக் கிடக்கும் பொருட்களைக் கண்டு அதிசயித்தார். சிவனடியார்களை அழைத்து வந்து தயிர் நெய் பாலுடன் அமுது கொடுத்தார்.

திருப்பனந்தாள் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்த சிவலிங்கம் சாய்ந்து விட்டது. அதனால் கவலை கொண்ட அரசன் அதை நிமிர்த்துவதற்குத் தன்னாலான செயல்கள் அனைத்தையும் செய்தான். எனினும் அது நிமிரவில்லை. இறுதியில் தனது யானைகளையும் குதிரைகளையும் கட்டி இழுத்தான். அப்படி இருந்தும் அச்சிவலிங்கம் நிமிரவில்லை. இதைக் கேள்விப்பட்ட குங்கிலியக் கலய நாயனார் அத்திருப்பதிக்கு வந்து இறைவனை வணங்கினார். பின் சிவலிங்கத்தைக் கயிற்றால் கட்டி அக் கயிற்றின் மறு முனையைத் தனது கழுத்தில் கட்டி இழுத்தார். குங்கிலியக் கலய நாயனாரின் பக்தியில் மெய் மறந்த பரமசிவன் தானாகவே நிமிர்ந்தார். மக்களும் அரசனும் குங்கிலியக் கலய நாயனாரின் பாதங்களில் விழுந்து வணங்கினர்.





அதன் பின் தனது வீட்டுக்குச் சென்ற குங்கிலிய கலய நாயனார், சிவனடியார்களுக்குத் தினமும் உணவளித்துப் போற்றி வந்தார். ஒரு நாள் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் திருநாவுக்கரச நாயனாரும் திருவீரட்டானேஸ்வரரின் சந்நிதிக்கு வந்தனர். அவர்களைத் தனது வீட்டுக்கு அழைத்துச் சென்ற குங்கிலிய கலய நாயனார் அவர்களை ஆசனத்தில் இருத்தி, அவர்களது பாதங்களைக் குளிர்ந்த நீரினால் கழுவி, அவற்றைத் துடைத்து வணங்கி உணவளித்தார்.

பின் பல காலம் பரமசிவனுக்குக் குங்கிலியத் தூபமிட்டு வணங்கினார். சிவனடியார்களை வீட்டிற்கு அழைத்துச் சென்று உணவளித்து உபசரித்து வாழ்ந்து சிவபதம் அடைந்தார்.

**திருச்சிற்றம்பலம்**

## மானக் கஞ்சாற நாயனார்

கஞ்சாறு என்னும் ஊரில், மானக் கஞ்சாற நாயனார் என்றொரு சிவபக்தர் இருந்தார். அவர் அந்நாட்டின் சேனாதிபதியாவர். திருமணமாகிப் பல்லாண்டுகள் சென்றும் அவருக்குப் பிள்ளைப்பாக்கியம் கிடைக்கவில்லை. பின் பரமசிவனின் அருளால் அவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அப் பெண் பிள்ளை வளர்ந்து மணப்பருவம் அடைந்ததும், ஏயர் கோன் கலிக்காம நாயனாருக்குத் திருமணம் செய்து வைக்க மானக்கஞ்சாற நாயனார் விரும்பினார்.

சோதிடர்களால் குறிக்கப்பட்ட சுப நேரத்தில் ஏயர் கோன் கலிக்காம நாயனார் மணக்கோலம் பூண்டு மங்கல வாத்தியங்கள் இசைக்க தமது சுற்றத்தவர்களுடன் மானக் கஞ்சாற நாயனாரின் வீட்டிற்குப் புறப்பட்டார்.

ஏயர் கோன் கலிக்காம நாயனார் மானக் கஞ்சாற நாயனாரின் வீட்டிற்கு வரு முன் சிவபெருமான் ஒரு சிவயோகி போல வேடம் பூண்டு மானக் கஞ்சாற நாயனாரின் வீட்டிற்குச் சென்றார். சிவயோகியாரை வரவேற்று ஆசனத்தில் இருத்திய கஞ்சாற நாயனார் அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினார்.

"இந்த வீடு மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டுள்ளது. மங்கல வாத்தியங்கள் பல முழங்குகின்றன. இங்கு என்ன நடைறெவுள்ளது?" என்று கேட்டார் சிவயோகியார்.

"சுவாமி என்னுடைய புத்திரிக்கு இன்று திருமணம் செய்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருக்கிறார்கள். தேவரீரும் தங்கியிருந்து எனது மகளையும் மருமகனையும் ஆசீர்வதித்தல் வேண்டும்." என்ற மானக் கஞ்சாற நாயனார் தனது மகளை அழைத்து வந்தார் .

சிவயோகியார் மணப் பெண்ணின் கூந்தலைப் பார்த்தார். அது நீண்டு வளர்ந்து முழங்காலுக்குக் கீழ் நின்றது; "மானக் கஞ்சாறா உனது மகளின் கூந்தலை அறுத்துப் பஞ்சவடி செய்து அணிய விரும்புகிறேன் அதை அறுத்துத் தா" என்றார் சிவயோகியார்.

அதைக் கேட்ட மானக் கஞ்சாற நாயனார் மனம் மகிழ்ந்து தனது உடைவாளை உருவி மகளின் கூந்தலை ஒட்ட அறுத்துக் கொடுத்தார்.

மனம்மகிழ்ந்த சிவயோகியார் தனது வேடத்தைக் களைந்து உமாதேவியாருடன் இடப வாகனத்தில் காட்சியளித்தார் . மானக் கஞ்சாற நாயனார் பரவசத்துடன் சிவபெருமானை வணங்கினார் .

மணப் பெண்ணின் வீட்டுக்கு வந்த ஏயர் கோன் கலிக்காம நாயனார், தனக்கு மனைவியாக வரும் பெண் முண்டிதஸ்திரியாக இருக்கக் கண்டு மனம் வருந்தினார்.அவரது மனக்கிலேசத்தை உணர்ந்த சிவபெருமான் அப் பெண்ணின் கூந்தலை முன் போல வளரச் செய்தார். கலிக்காம நாயனார் மனக்கிலேசம் நீங்கி அழகான கூந்தலைப் பெற்ற அப்பெண்ணைத் திருமணஞ் செய்து கொண்டு தனது ஊருக்குச் சென்றார்.

பஞ்சவடி :- மயிரினால் அழகாகப் பின்னப்பட்டு மார்பிலே பூநூலாகத் தரிக்கப்படுவது.

## திருச்சிற்றம்பலம்

## அரிவாட்டாய நாயனார்

சோழ நாட்டிலே உள்ள கணமங்களம் என்னும் ஊரில் தாயனார் என்னும் ஒரு சிவனடியார் வாழ்ந்து வந்தார். பெரும் செல்வந்தரான அவர் தனது வயலிலே செந் நெல் பயிரிட்டு அரிசியாக்கிஅமுது செய்து. செங்கீரைக்கறி சமைத்து அதைத் தினந் தோறும் பரமசிவனுக்குப் படைத்து வந்தார். அவரது பக்தியின் மேன்மையை உலகிற்கு உணர்த்த விரும்பிய பரமசிவன் அவருக்கு வறுமையை உண்டாக்கினார்.

பெரும் செல்வந்தரான தாயனார் வறுமையுற்ற பின்பும் மனந் தளராது கூலிக்குச் செந்நெல் அறுத்து அதில் இருந்து வரும் கூலியின் மூலம் செந்நெல் அரிசிப் பொங்கலும் செங்கீரையும் சமைத்துப் பரமசிவனுக்குப் படைத்து வரலானார்.

வீட்டில் சமைப்பதற்கு அரிசியில்லாத வேளைகளில் வீட்டிற்குப் பின்புறத்தே உள்ள இலைகளை அவரின் மனைவியார் கொய்து சமைத்து வைப்பார். அதைத் தாயனார் மிகவும் மகிழ்வுடன் உண்பார். காலப் போக்கில் அவ் இலைக்கறி வகைகள் அற்றுப் போகத் தண்ணீரை மட்டும் குடித்து வாழ்ந்து வந்தார். தான் நீரை மட்டும் குடித்தபோதும் பரமசிவனிற்குச் செந்நெல் அரிசியும் செங்கீரையையும் சமைத்துப்படைப்பார்.

ஒருநாள் சுவாமிக்குப் படைப்பதற்காகச் செந்நெல் அரிசிச் சாதமும் செங்கீரையும் கொண்டு சென்றார். அவரின் பின்னால் அவரது மனைவியார் சென்றார். முன் சென்ற தாயனார் பசியினாலே தள்ளாடி விழுந்தார். அப்பொழுது அவரின் பின்னால் சென்ற மனைவியார் அவரைத் தாங்கிப் பிடித்தபோது பரமசிவனுக்குப் படைக்கவென கொண்டு சென்ற அமுது நிலத்தில் சிந்தியது.

அன்று பரமசிவனுக்கு உணவு படைக்க முடியாமல் போய்விட்டதே என்ற கவலை மேலீட்டால் தாயனார் வாளை எடுத்துத் தனது கழுத்தை அறுத்தார்.வானத்தில் இடபவாகனத்தில் உமாதேவியாருடன் காட்சியளித்த பரமசிவன் வாளால் தனது கழுத்தை அறுக்கும் தாயனாரின் கையைப்பிடித்து; "தாயனாரே, வாளால் உமது கழுத்தை அறுத்ததால் இன்று முதல் நீர் அரிவாட்டாய நாயனார் என அழைக்கப்படுவீர். நீரும் உமது மனைவியும் வந்து சிவலோகத்தில் வாழுங்கள்" என்று கூறி மறைந்தார்.

அரிவாட்டாய நாயனார் மனம் நெகிழ்ந்து பரமசிவனின் பேரருளை வியந்து வணங்கினார். பின் அவரும் மனைவியும் சிவலோகம் சென்றனர்.

## திருச்சிற்றம்பலம்

## ஆனாய நாயனார்

மழ நாட்டிலே உள்ள மங்கலவூரிலே ஆயர் குலத்திலே ஆனாயர் என்றொரு சிவபக்தன் இருந்தார். அவர் தனது நண்பர்களுடன் பசு நிரையை ஓட்டிச் சென்று புற்றரையில் விட்டு விட்டுமரநிழலில் இருந்து பஞ்சாட்சர மந்திரத்தைப் புல்லாங்குழலினாலே வாசிப்பார்.

ஒரு நாள் அவர் பசுக்களை ஓட்டிச் சென்ற போது வழியிலே பெரியதொரு கொன்றை மரத்தைக் கண்டார். அம் மரம் பெரிய பூங்கொத்துக்களைத் தாங்கிக் கொண்டு புறத்திலே தாழ்கின்ற சடையினையுடைய பரமசிவனைப் போல் நின்றது. அதைக் கண்ட ஆனாயர் தான் கொண்டுவந்த புல்லாங்குழலை எடுத்துப் பஞ்சாட்சர மந்திரத்தை இனிமையாக வாசித்தார். அதைக் கேட்டு இரசித்த பசுக்கள் மெய் மறந்து அவரைச் சுற்றி நின்றன. பால் குடித்துக் கொண்டிருந்த கன்றுகள் எல்லாம் பாலைக் குடிப்பதை விட்டு விட்டு இசையைக் கேட்க ஓடி வந்தன. எருதுகளும் காட்டு மிருகங்களும் மயிரைச் சிலிர்த்துக் கொண்டு ஓடி வந்தன.மயில்கள் ஆட மறந்தன. குயில்கள் பாட மறந்தன. தேவர்களும் அந்த இனிமையான இசையைக் கேட்டு மெய்மறந்து





நின்றனர். இனிமையான அந்த இசையைக் கேட்ட பரமசிவன், பார்வதி தேவியாரையும் அழைத்துக் கொண்டு இடப வாகனத்தில் அவ்விடத்திற்கு வந்தார்; "மெய்யடியாரே, நானும் என்னுடைய அடியார்களும் உன்னுடைய வேய்ங்குழல் இசையைக் கேட்டு மகிழ்ந்தோம். அதனால் நீ இப்பொழுது இவ்விடத்தில் நின்றபடியே என்னிடத்திற்கு வருவீராக" என்றார். ஆனாய நாயனார் புல்லாங்குழலை வாசித்துக் கொண்டு பரமசிவனின் அருகில் சென்றார். சிவபெருமான் ஆனாயரைத் தன்னுடன் அனைத்துக் கொண்டார்.

## திருச்சிற்றம்பலம்

## மூர்த்தி நாயனார்

மதுரை மா நகரிலே மூர்த்தி நாயனார் என்றோர் சிவபக்தர் வாழ்ந்து வந்தார். அவர் மதுரையிலே வீற்றிருக்கின்ற சோமசுந்தரக் கடவுளுக்குத் தரிப்பதற்காகத் தினமும் சந்தனக் காப்புக் கொடுத்து வந்தார். ஒருநாள் அயல் நாட்டுச் சமண அரசனான கருனாட தேசத் தாசன் தனது சேனைகளோடு மதுரைக்கு வந்து பாண்டியனோடு யுத்தம் செய்து அவனை வென்று மதுரையையும் தன்நாட்டோடு இணைத்துக் கொண்டான் சைவ சமயத்தைச் சேர்ந்த மக்களுக்குக் கொடும் துன்பங்களைச் அவன் செய்தமையால், மக்கள் அவனுக்கு அஞ்சி நாட்டை விட்டுச் சென்றனர். அவன் சிவாலயங்களை இடித்தும் தீ வைத்தும் அழித்தான். அவன், மூர்த்தி நாயனாருக்குப் பல கொடுமைகள் செய்தபோதும் அவர் சோமசுந்தரப் பெருமானுக்குத் தினமும் தரிப்பதற்குச் சந்தனக் காப்புக் கொடுத்து வந்தார். இதனால் நாட்டில் சந்தனக் கட்டையை யாரும் வைத்திருக்கக்கூடாது என்று அரசனான கருனாட தேசத்தரசன் முரசறிவித்தான்.

அதனால் சந்தனக் கட்டைகள் பெற முடியாது வருந்திய மூர்த்தி நாயனார், தனது முழங்கையை சந்தனக்கட்டையைத் தேய்க்கும் கல்லில் தேய்த்தார். அவரது தோலும் சதையும் எலும்பும் தேய்ந்து இரத்தம் பெருகியது. அப்பொழுது இடப வாகனத்தில் உமாதேவியாருடன் தோன்றிய சோமசுந்தரப் பெருமான்; "அன்பனே, என் மீது இருந்த பக்தியால் யாரும் செயற்கரிய காரியத்தைச் செய்தாய். உன்னையும் என் அடியவர்களையும் வருத்திய பாதகன் இன்றே இறப்பான். இந்நாட்டின் அரசுரிமை உன்வசமாகும் நல்ல முறையில் ஆட்சிசெய்த பின் நீ என்னை வந்தடைவாயாக" என்று அருளி மறைந்தார்.

மூர்த்தி நாயனார் செய்வதறியாது திகைத்து நிற்க, பட்டத்து யானை அங்கே வந்து மூர்த்தி நாயனாரைத் தூக்கி தன் மேல் இருத்தி, அரண்மனையை நோக்கிச் சென்றது. மூர்த்தி நாயனார் அரண்மனைக்கு சென்றபோது அக் கொடிய அரசன் திடீரென நிலத்தில் விழுந்து மரணமானான்.

பட்டத்து யானை மீது ஏறி வந்த மூர்த்தி நாயனாரை வணங்கிய மந்திரிமார் அவரை அழைத்துச் சென்று சிங்காசனத்தில் அமர்த்தினர்.

அவர்களைப் பாத்த மூர்த்தி நாயனார்; "நீங்கள் எலலோரும் புறச்சமயமாகிய சமணத்தில் இருந்து நீங்கி அகச் சமயமான சைவசமயத்தில் சேர்ந்தால் தான் நான் அரச பதவியை ஏற்பேன்" என்றார்.

அதற்கு எல்லோரும் உடன்பட்டனர்; "நீங்கள் சைவ சமயத்தவராக மாறியமையால் நான் இந்நாட்டின் அரச பொறுப்பை ஏற்கிறேன். விபூதியே எனது அபிசேகத் திரவியமாகும்.; உருத்திராட்சமே எனது ஆபரணம் ஆகும்; சடா முடியே எனது கிரீடம் ஆகும்" என்றார்.

நல்ல நாளில் அரசராக முடிசூடிய மூர்த்தி நாயனார் உடல் எங்கும் விபூதி தரித்து, உருத்திராட்ச மாலைகள் அணிந்து, சடாமுடியுடன் பல்லாண்டு காலம் மதுரையை அரசாண்டு பின் சிவபதம் அடைந்தார்.

## திருச்சிற்றம்பலம்

## முருக நாயனார்

சோழ நாட்டில் உள்ள திருப்புகலூரிலே சிவபக்தரான முருக நாயனார் என்றொரு பிராமணர் இருந்தார். அவர் தினமும் சூரியன் உதிக்கு முன் எழுந்து நீராடி விட்டு நந்தவனத்திற்குச் சென்று கோட்டுப்பூ ,கொடிப்பூ , நீர்ப்பூ , நிலப்பூ என்கின்ற நான்குவகையான பூக்களைக் கொய்து வந்து அழகான மாலை கட்டி அவ்வூரில் உள்ள வர்த்த மானீச்சரம் என்னும் ஆலயத்தில் வீற்றிருந்து மக்களுக்கு அருள்பாலித்து கொண்டிருக்கும் பரமசிவனுக்குச் சாத்திமகிழ்ந்து, பஞ்சாட்சர மந்திரத்தை ஓதுவார்.

தினமும் அவர் அப் பணியை மன நிறைவுடன் செய்து வரும் நாளில், ஒரு நாள் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அவ் ஆலயத்திற்கு வந்து, முருக நாயனாரைத் தழுவி இன்புற்று நண்பரானார். திருஞான சம்பந்தரின் திருமணச்சடங்கிலே கலந்து கொண்ட முருகநாயனார் அங்கெழுந்த சோதியில் கலந்து பரமசிவனுடைய திருவடி நிழலை அடைந்தார்.

## திருச்சிற்றம்பலம்

## உருத்திர பசுபதி நாயனார்

சோழ நாட்டிலே திருத்தணிகை என்னும் ஊரிலே பசுபதி என்றொரு சிவபக்தர் வாழ்ந்துவந்தார். அவர் தினமும் தாமரைத் தடாகத்திலே கழுத்தளவு தண்ணீரிலே நின்று கொண்டு தனது இரண்டு கைகளையும் சிரசின் மேல் குவித்துப் பரமசிவனின் திருவடிகளை நினைத்து ஸ்ரீருத்திர மந்திரத்தை ஓதுவார். இப்படிப் பல காலம் ஸ்ரீருத்திர மந்திரத்தை ஓதியமையால் அவரை மக்கள் உருத்திர பசுபதி நாயனார் என்று அழைத்தனர். ஒருநாள் அவர் கழுத்தளவு நீரிலே நின்று கைகளைச் சிரசின் மேற் குவித்து ஸ்ரீருத்திர மந்திரத்தை ஓதும் வேளை சிவபதம் அடைந்தார்.

## திருச்சிற்றம்பலம்

## திருநாளைப் போவார் நாயனார்

சோழ நாட்டில் உள்ள ஆதனூரிலே புலையர் குலத்திலே நந்தனார் என்றொரு சிவபக்தர் இருந்தார். அவரின் மனதில் எந்நேரமும் சிவனின் சிந்தனையே இருக்கும். நந்தனார் சிவாலயங்களில் முழங்கும் பேரிகைகளுக்கும் மத்தளங்களுக்கும் தோலும் நாரும் கொடுப்பர். வீணைக்கும் யாழுக்கும் நரம்பும், அர்ச்சனைக்குக் கோரோசனையும் கொடுத்து விட்டு, ஆலயத்தின் வெளிப்புற வாசலில் நின்று ஆனந்தக் கூத்தாடுவார்.

ஒரு முறை அவர் திருப்புன்கூரிலே உள்ள சிவாலயத்திற்குச் சென்று பரமேஸ்வரனை நேரில் தரிசித்து வணங்கவேண்டும் என்று விரும்பினார். அவரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய விரும்பிய பரமேஸ்வரன் இடப தேவரை விலகும் படி கூற இடப தேவர் விலகிச் சென்றார். நந்தனார் பரமேஸ்வரரைக் கண்குளிரக் கண்டு ஆனந்தக்கூத்தாடினார். பின்பு அச் சிவாலயத்திற்கு ஒரு குளம் வெட்டினார்.

ஊரில் உள்ள சிவாலயங்களுக்குச் சென்று வணங்கி ஆனந்தக்கூத்தாடும் நந்தனாருக்குச் சிதம்பரத்திற்குச் செல்ல வேண்டும் என்ற ஆசை நெடு நாட்களாக இருந்தது. எனினும் அவர் தாம் உள்ளே சென்று வணங்க முடியாது என்ற கவலை மேலீட்டால்; "நாளைக்குப் போவோம்; இனனொரு நாள் போவோம்" என்று அனேக நாட்களைப் போகாமல் கழித்தமையால் அவருக்குத் "திருநாளைப் போவார்" என்னும் பெயர் உண்டாயிற்று.

ஒரு நாள் அவர் சிதம்பர தரிசனம் பண்ணவேண்டும் என்று நினைத்து புறப்பட்டுச் சென்று சிதம்பரத்தை அடைந்தார். சிதம்பரத்தில் உள்ள பிராமணர்களின் வீடுகளில் பூசை செய்யப்படுவதைக் கண்டு உள்ளே சென்று பார்க்க விரும்பினார். எனினும், தான் சாதியில் தாழ்ந்தவன் என்று நினைத்து அவர் உள்ளே





செல்லாது கவலையுடன் படுத்துறங்கினார். அன்றிரவு சிதம்பரத்தில் வீற்றிருக்கும் சபாநாதப் பெருமான் அவரின் கனவில் தோன்றி; "நந்தனாரே, இப்பிறப்பை ஒழிப்பதற்கு நீ நெருப்பிலே மூழ்கி எழுந்து எனது சந்நிதிக்கு வா" என்று கூறிவிட்டு, தில்லை வாழ்அந்தணர்களின் கனவிலே தோன்றி, "திருநாளைப்போவார் நாயனார் தீயில் மூழ்கி என்னிடம் வர நெருப்பெரியுங்கள்" என்று அருளினார்.

தில்லை வாழ்அந்தணர்கள் சிதம்பரத்தின் மதிற்புறத்திலே கோபுர வாசலுக்கு முன்னே ஒரு குழிவெட்டி அதில் மரக்கட்டைகளைப்போட்டு தீமூட்டினார்கள். திருநாளைப் போவார்நாயனார் சபாநாதரை நினைத்துக் கொண்டு தீக்குழிக்குள் இறங்கினார். சிறிது நேரத்தில் நெருப்புக் குழியில் இருந்து பிராமண வடிவில் வெளி வந்த திருநாளைப் போவார் நாயனார், சிதம்பரத்தின் உள்ளே சென்று கனகசபையை அடைந்தார். அதன் பின் அங்கு நின்ற பிராமணர்கள் திருநாளைப் போவாரைக் காணாது ஆச்சரியம் அடைந்தனர். திருநாளைப் போவார் நாயனார் சபாநாதரின் பாதங்களை அடைந்து பெருமகிழ்வுற்றார்.

## திருச்சிற்றம்பலம்

## திருக்குறிப்புத் தொண்ட நாயனார்

தொண்டை நாட்டில் உள்ள காஞ்சிபுரம் என்னும் நகரில் சிவனடியார்களின் மன நிலையை அறிந்து அவர்களுக்குத் தொண்டு செய்யும் சிவனடியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். சிவனடியார்களின் குறிப்பறிந்து அவர்களுக்குத் தொண்டு செய்தமையால் அவருக்குத் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் என்னும் பெயர் வந்தது. அவர் சிவனடியார்களின் உடையை வாங்கி வெள்ளாவிவைத்துத் தோய்த்து அவற்றில்உள்ள கிழிந்த பகுதிகளைத் தைத்துக்கொடுப்பார். குளிர் காலத்தில் ஒருநாள் பரமசிவன் சிவனடியார் வேடம் தாங்கி மெலிந்த சரீரத்தையுடைய வறியவர்போலத் திருக்குறிப்பு தொண்ட நாயனாரிடம் வந்தார். அவர் ஒரு கந்தல் வேட்டியை அணிந்திருந்தார்.

சிவனடியாரைக் கண்டு வணங்கிய திருக்குறிப்புத் தொண்ட நாயனார் அவரை வணங்கி; "அடியவரே தங்களின் வஸ்திரத்தைத் தந்தால் நான் அதை துவைத்துத் தருவேன" என்றார்.

அதற்கு அவ்வடியார்; "இது கந்தல் வேட்டியானாலும் எனக்குக் குளிருக்குப் போர்த்துக் கொள்வதற்குத் தேவை. இரவாகு முன் தருவீரானால் தருகிறேன். நீ இரவாகுமுன் தராவிட்டால் குளிரைத்தாங்க முடியாது எனது உடல் வேதனைப்படும்" என்றார்.

"நான் இரவாகுமுன் தங்களுக்குத்தந்துவிடுவேன்" என்று கூறி அந்த அடியவரிடம் வேட்டியைப் பெற்றுச்சென்ற திருக்குறிப்புத் தொண்ட நாயனார், குளத்திற்குச் சென்று வேட்டியைத் துவைத்தார். அப்பொழுது சிவனின் சக்தியால் பெருமழை பொழிந்தது. இரவுவரை அம் மழை விடாது பெய்தது.

"எனது செயலால் அந்த முதிய அடியார் இரவில் குளிரால் துன்பப்படப்போகிறார். அதனால் நான் உயிர் வாழ்வது நல்லதல்ல" என்று நினைத்த திருக்குறிப்புத் தொண்ட நாயனார் குளக்கரையில் இருந்த துணிதுவைக்கும் கல்லில் தனது தலையை மோதினார். அப்பொழுது பரமசிவன் அவரது திருக்கரத்தால் அவரது தலையைப் பிடித்தார். ஆகாயத்தில் இருந்து விழுந்த மழைத்துளிகள் பூக்களாக மலர்ந்து பூமியில் சொரிந்தன. பரமசிவன் இடப வாகனத்தில் உமாதேவியாருடன் தோன்றி; "திருக்குறிப்புத் தொண்டரே, உமது பக்தியின் வலிமையை மூவுலகத்தவர்களும் தெரிந்து கொள்ளவே நாடகமாடினோம். இனி நீ கைலாயத்திற்கு வந்து பேரின்பம் பெற்று வாழ்வீராக" என்று அருளி மறைந்தார்.

# திருச்சிற்றம்பலம்

## சண்டேசுர நாயனார்

சோழ நாட்டிலே திருச்செய்ஞலூரிலே எச்சதத்தன் என்றொரு பிராமணன் வாழ்ந்து வந்தான். அவனின் மனைவி பவித்திரை. இருவருக்கும் விசார சருமன் என்றொரு மகன் இருந்தான். அவன் பிறக்கும் போதே சிவனருளால் வேத ஆகமங்களையும் உபநிடதங்களையும் கற்றிருந்தான். அவனுக்கு எச்சதத்தன் ஏழுவயதில் உபநயனம் செய்து வைத்தான்.

ஒரு நாள் அவ்வூரில் உள்ள இடையன் ஒருவன், பசுக்களை மேய்ப்பதற்க்காகப் புற்றரையை நோக்கிப் பசுக்களை ஓட்டிச் சென்றான். ஒரு பசு, மேய்ப்பாளனாகிய இடையனைத் தனது கொம்பால் குத்தப்போனது.அப்போது அவ்விடையன் பாவத்திற்கு அஞ்சாது தான் கொண்டு வந்த கோலினால் அப் பசுவைப் பல முறை அடித்தான். அதைக் கண்ட விசார சருமன் கோபம் கொண்டு அவன் அருகே சென்று அடியாதபடி தடுத்தான். பின் பசுக்கள் சிவலோகத்தில் இருந்து பூவுலகிற்கு மக்களின் ஆத்மா ஈடேற்றத்திற்காகச் சிவனால் அனுப்பப்பட்ட மாதாக்கள். அவை தரும் பாலை மனிதர்கள் குடிக்கிறார்கள்; பாலில் இருந்து எடுக்கப்படும் தயிரையும் மோரையும் சாப்பிடுகிறார்கள்; சாணத்தால் திருநீறு செய்து உடல் எங்கும் பூசி இறைவனைப் பூசை செய்து சிவப்பேறு அடைகிறார்கள்; இறைவனது அபிடேகத் திரவியங்களாகப் பாலும் தயிரும் நெய்யும் விளங்குகின்றன; பசுக்களில் இருந்து பெறும் கோரோசனை இறைவனை அர்ச்சிக்கப் பயன்படுகிறது; அத்துடன் பசுக்களின் உறுப்புக்களில் தேவர்களும் முனிவர்களும் வாழ்கிறார்கள்; அவற்றின் உடலிலே புனித கங்கைகள் ஊற்றெடுக்கின்றன; அதன் கொம்பில் பிரம விட்டுணுக்களும், சிரத்தில் சிவனும் பார்வதியும், மேல்நாசியில் முருகனும், இரு கண்களில் சூரியனும் சந்திரனும், உளங்காரத்தில் சரஸ்வதியும், நாவில் வருணனும், கழுத்தில் இந்திரனும், அபானத்தில் இலக்குமியும், உரோமத்தில் முனிவர்களும், உதரத்தில் பூமாதேவியும், முலையில் சமுத்தரராஜனும் குடியிருக்கிறார்கள்; மூவுலகங்களும் தங்கியிருக்கும் தாய்க்கு நீ எப்படி அடிக்கலாம்'' என்று கூறி அவன் மேய்த்த பசுக்களைத் தாமே மேய்த்தார்.

விசார சருமர் பசுக்களை மேய்க்கும் காலத்திலே பசுக்கள் எல்லாம் மிகவும் அழகோடு இருந்தன. பாலை அதிகமாகக் கறந்தன. அதனால் அவ்வூரில் வாழ்ந்த மக்கள் விசார சருமரைப் போற்றினார்கள். விசார சருமரைக் கண்டதும் பசுக்கள் பாசமிகுதியால் மடி சுரந்து கறக்காமலே பாலைப் பொழிந்தன. அப் பாலை வீணாக்கக்கூடாது என்று நினைத்த விசாரசருமர் பாலை மட்கலங்களில் ஏந்தி மணலால் சிவலிங்கம் செய்து தினமும் அபிஷேகம் செய்து வந்தார். இதைக்கண்டு வேதனைப்பட்ட பசுக்களின் சொந்தக்காரர்கள் கோபம் கொண்டு எச்சதத்தனிடம் முறையிட்டனர்.

அதனால் கோபம் கொண்ட எச்சதத்தன், விசார சருமர் பசுக்களை மேய்க்கும் இடத்திற்குச் சென்று, ஒரு மரத்தின் அருகே ஒளித்திருந்து நடப்பவற்றை அவதானித்தார். விசார சருமர் அருகே சல சலத்தோடிய மண்ணியாற்றில் நீராடிவிட்டு வந்து மண்ணினாலே சிவலிங்கம் செய்தார். பின் மலர்களைப் பறித்து வந்து சிவலிங்கத்தின் மேல் கொட்டினார். அதன் பின்மட்கலங்களைக் கொண்டு சென்று கறவைப் பசுக்களின் மடிகளின் கீழ் வைத்தார். அவை கறக்காமலே மடி சுரந்து பாலைப் பொழிந்தன. ஒவ்வொரு பாற்கலனையும் பக்தி சிரத்தையுடன் எடுத்துச் சென்று சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்தார்.

மறைந்திருந்தது பார்த்த எச்சதத்தன் அளவிலாத கோபம் கொண்டு விரைவாக வந்து விசார சருமனைக் கம்பால் அடித்தார். சிவபூசையில் முழுமனதுடன் ஈடுபட்டிருந்த விசார சருமருக்கு நடப்பதொன்றும் தெரியவில்லை. அதனால் கோபம் கொண்ட எச்சதத்தன் பாற்குடத்தைக் காலால் உதைத்தான். அதைக் கண்ட விசார சருமருக்கு அளவுக்கதிகமான ஆத்திரம் உண்டானது. பாற்குடத்தை உடைத்தவர் தனது தந்தை என்று தெரிந்தும் சிவ நிந்தனை செய்த அவரை தாக்குவதற்க்காகத் தனக்குமுன்பாக இருந்த ஒரு கோலை எடுத்தார். அது மழுவாயுதமாக மாறியது. அதனால் பாற்குடத்தை உடைத்த எச்சதத்தனின் காலை வெட்டினார்.





உடனே பேரதிசயம் ஒன்று நிகழ்ந்தது. சிவபெருமான் உமாதேவியாரோடு இடப வாகனத்தில் தோன்றி; ''விசார சர்மா, நீ என்மீது கொண்ட பேரன்பினால் சிவபூசையைத்தடுத்த உனது பிதாவை வெட்டினாய். இனி உமக்கு நாமே பிதா'' என்று கூறி விசார சருமரை அணைத்தெடுத்து முத்தமிட்டு தனது இடப வாகனத்தில் இருத்திக் கட்டித் தழுவினார்.; ''என்னுடைய தொண்டர்களுக்கு எல்லாம் இனி நீயே தலைவன்; எனக்குத் தரப்படும் அமுதும் பரிவட்டமும் புஸ்பமும் இனி உனக்கும் கிடைக்கும் படி சண்டேசுர பதத்தை உனக்குத் தந்தேன்''. என்று கூறித் தனது கழுத்தில் அணிந்திருந்த கொன்றை மாலையைக் கழற்றி விசார சருமருக்குச் சூடினார். தேவர்கள் பூமழை பொழிந்தனர் எச்சதத்தனின் கால் பொருந்தியது. விசார சருமர் சிவனது இடப வாகனத்தில் சென்று திருக்கைலாய மலையை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசு நாயனார்

திருமுனைப்பாடி என்னும் நாட்டில் உள்ள திருவாமூரிலே புகழனார் என்றொரு சிவபக்தர் இருந்தார். அவரின் மனைவியார் பெயர் மாதினியார். அவர்களுக்குத் திலகவதி என்றொரு புத்திரியும் மருணீக்கியார் என்றொரு புத்திரனும் இருந்தனர்.

திலகவியாருக்குப் பன்னிரண்டு வயது நடைபெறும் போது அந்நாட்டின் சேனாதிபதியாகக் கடமை புரிந்த கலிப்பகையார் என்பவர் திலகவதியாரின் மீது ஆசை கொண்டு, பெரியவர்களை அழைத்துப் புகழனாரிடம் தனது விருப்பத்தைத் தெரிவிக்கும் படி அனுப்பினார். புகழனார் கலிப்பகையாரைத் தனது மகளுக்குத் திருமணம் செய்யச் சம்மதித்தார். அந்நாளில் அரசன் வடதேசத்திற்குப் படை எடுத்துச் சென்று நெடு நாள் யுத்தம் செய்தான். யுத்தம் நடை பெற்றுக் கொண்டிருக்கையில் புகழனார் சிவபதம் அடைந்தார். கணவரின் இறப்பைப் பொறுக்கமுடியாத மாதினியாரும் உடன்இறந்து போனார். அதனால் திலகவதியாரும் மருணீக்கியாரும் அநாதைகளாகினர்.

நெடு நாட்களாக நடை பெற்ற போரில் சேனாதிபதியான கலிப்பகையார் வீரமரணம் அடைந்தார். அவரது மரணச் செய்தியைக்கேட்ட திலகவதியார் துயர மிகுதியால் உடன்கட்டை ஏற முயன்றார். அதனைக் கண்ட மருணீக்கியார்; ''அக்கா, சிறுவனாகிய என்னை விட்டு நீங்களும் இறந்து போனால் நான் யாருடன் வாழ்வது. அதனால் உங்களுக்கு முன்பே நான் உயிர்துறப்பேன்'' என்றார்.

அதைக் கேட்ட திலகவதியார் துயர மேலீட்டால் புலம்பி அழுதார். பின் தனது தம்பியாரின் எதிர்கால வாழ்வை நினைத்து மனம் மாறி வேறு எவரையும் விவாகம் செய்து கொள்ளாமல் வீட்டிலே தவவாழ்வு வாழ்ந்தார்.

சிவனுக்குத் தொண்டுகள் பலவும் புரிந்து வாழ்ந்த மருணீக்கியார் விதிவசத்தால் சமண சமயப் போதனைகளை உண்மை என நம்பி மதிமயங்கிச் சமண சமயத்தில் சேர்ந்தார். சமண சமய நூல்கள் யாவற்றையும் கற்றுத் தேர்ச்சிபெற்று மகாபாண்டித்தியம் உடையவரானார். சமணர்கள் அவருக்குத் தருமசேனர் என்று பெயரிட்டு அவரை தங்கள் மத குருவாகக் கொண்டு வழிபட்டனர். தருமசேனர் தனது வித்தியா சாமர்த்தியத்தினாலே பௌத்தர்களை வாதில் வென்று புகழோடு இருந்தார்.

திருவாமூரிலே இருந்த திலகவதியார் பக்தியுடன் திருவதிகை வீரட்டானம் என்னும் சிவத்தலத்திற்குச் சென்று; ''எம் பெருமானே பெற்றோரையும் கணவரையும் இழந்த நான் எனது சகோதரனுக்காகவே உயிர்வாழ்கின்றேன். இப்பொழுது அவன் அறிவிழந்து துர்ச் சமயமாகிய சமணத்தில் சேர்ந்து சிவ நிந்தனை செய்கிறான். இதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவனைப் பழையபடியும் சைவ சமயத்தவன் ஆக்கி என்னுடன் இருக்க அருள் புரிய வேண்டும்''. என்று அழுதழுது பலமுறை வேண்டிக் கொண்டார்.

அன்றிரவு திலகவதியாரின் கனவில் தோன்றிய பரமசிவன்; "அம்மையே, கவலை கொள்ளாதே; சிவதொண்டனான திருநாவுக்கரசர் மீண்டும் எம்மை வந்தடைந்து உன்னைமகிழ்விக்கும் பொருட்டு அவனுக்குச் சூலை நோயைக் கொடுத்து ஆட்கொள்வோம்". என்று அருளி மறைந்தார்.

பரமசிவன் திருவாய் மலர்ந்தருளியபடி மருணீக்கியாருக்குச் சூலை நோய் வந்தது. சமணர்கள் நெடுநாள் மந்திரித்து மருந்து கொடுத்த போதும் தருமசேனரின் நோய் அதிகரித்ததே தவிரக் குறையவில்லை. இனி தருமசேனரைக் காப்பாற்ற முடியாது எனக்கண்ட சமணர்கள், அவரை மடத்தில் விட்டுவிட்டுச்சென்றுவிட்டனர். உதவி இல்லாது வருந்திய தருமசேனர் தனது தமக்கையாரிடம் தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்து அவரது பாதங்களில் விழுந்து வணங்கி; "அக்கா, அறியாமையால் நான் உம்மை விட்டுச் சென்று சொல்லொணாத் துன்பங்களுக்குட்பட்டுவிட்டேன். தேவரீர் என்னை மன்னித்து ஏற்றருளும்" என்றார்.

திலகவதியார், பரமசிவன் தனது கனவில் வந்து சொன்னவற்றைச் சொல்லித் திருநீறு கொடுத்துத் தம்பியாரை வீரட்டானேசுவரத்திற்கு அழைத்துச் சென்றார். மருணீக்கியார் வீரட்டானேசுவரத்தில் அமர்ந்துள்ள பரமசிவனை வணங்கி; "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்னும் திருப்பதிகத்தைப் பாட அவரைப்பற்றிப் பிடித்து வேதனை செய்த சூலை நோய் அவரின் உடலை விட்டு நீங்கியது.; "எம்பெருமானே என்னை வாட்டிய கொடிய சூலை நோயை நீக்கியமைக்காக வாழ்நாள் பூராகவும் உனக்குத் தொண்டுகள் செய்வேன்." என மனமுருகிக் கண்ணீர் சொரிந்து சொன்னார்.

"நீ அற்புதமான திருப்பதிகத்தை எம்மீது பாடியதால் இன்று முதல் உன்னை நாவுக்கரசர் என்று மக்கள் அழைப்பர். மேன்மேலும் இனிமையான பதிகங்களை என்மீது பாடு" என்றொரு அசரீதி வானில் எழுந்தது.

இதை அறிந்த சமணர்கள் பல்லவராஜனிடம் சென்று; "அரசே தருமசேனன் சைவ சமயத்தில் சேர்ந்ததோடல்லாமல் உண்மைச் சமயமான சமணசமயத்தை நிந்தனை செய்கிறான். அதனால் அவனுக்குத் தகுந்த தண்டனை கொடுத்தல் வேண்டும்" என்றனர்.அரசன் திருநாவுக்கரசரைக் கைது செய்து வரும்படி படைவீரர்களுக்குக் கட்டளை இட்டான்.

போர் வீரர்கள் திருநாவுக்கரசரின் வீட்டைஅடைந்து அவரை கைது செய்ய முற்பட்டனர். திருநாவுக்கரசர் பயப்படாது; "நாம்யார்க்கும் குடியல்லோம்" எனும் திருத்தாண்டகத்தைப் பாடி விட்டு "வாருங்கள்" என அவர்களுடன் புறப்பட்டார்.

பல்லவராஜன் திருநாவுக்கரசரைக் கண்டு கோபம் கொண்டு அவரைச் சுண்ணாம்பு அறையுள் அடைக்குமாறு கட்டளையிட ஏவலாளர்கள் திருநாவுக்கரசரை நீற்றறையிலே அடைத்தனர். திருநாவுக்கரசர் இறைவனை வணங்கி; "மாசில் வீணையும் மாலை மதியமும்" எனும் திருக்குறுந் தொகையைப் பாடிச் சிவனைத் தொழுதார். வெப்பம் பொருந்திய நீற்றறை குளிரறையானது. ஏழு நாட்கள் சென்ற பின் நீற்றறையைத் திறந்து பார்த்த சமணர்கள் அங்கு திருநாவுக்கரசர் மகிழ்வுடன் இருப்பதைக் கண்டு திகைத்து அரசனிடம் சென்று; "அரசே நம்மிடம் கற்ற வித்தையைப் பயன்படுத்தித் தருமசேனர் நீற்றறைக்குள் வேகாமற் பிழைத்துக்கொண்டான். அவனுக்கு நஞ்சூட்டுவதே தகும்" என்றனர்.

அதன்படி திருநாவுக்கரசருக்கு நஞ்சு கலந்த பாற்சோறு கொடுக்கப்பட்டது. அதை மகிழ்வுடன் பெற்றுக் கொண்ட திருநாவுக்கரசர்; "அடியார்களுக்காக நஞ்சுண்ட எம்பெருமான் என்துயர் தீர்ப்பார்"என்று கூறி மகிழ்வுடன் நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்டார்.

பல நாட்கள் சென்றும் திருநாவுக்கரசர் இறவாதிருந்ததைக் கண்ட சமணர்கள் பயந்து நடுங்கிய படி அரசனிடம் சென்று முறையிட்டனர்.; "அரசே, எமது சமய நூல்கள் முழுவதையும் கற்றுத் தேர்ந்து மகாவித்துவானாக இருந்த தர்மசேனர் எமது சமய மந்திரங்களைச் சொல்லி நஞ்சில் இருந்து தப்பிவிட்டான் இனி அவனைக் கொல்வதாயின் பட்டத்து யானையை அவிழ்த்து விடல் வேண்டும்" என்றனர்.





துட்டர்களின் போதனையை நம்பிய அரசன் திருநாவுக்கரசருக்கெதிரே பட்டத்துயானையை அவிழ்த்து விடும்படி கட்டளையிட்டான். திருநாவுக்கரசர் சிவபெருமானை எண்ணிப் பக்தி சிரத்தையுடன், "சுண்ணவெண் சந்தனச்சாந்தும்" என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். யானை திருநாவுக்கரசரை வலம் வந்து வீழ்ந்து வணங்கியது. பாகர்கள் அங்குசத்தால் குத்தித் திருநாவுக்கரசரைக் கொல்லும் படி ஏவினர். பட்டத்து யானை கோபம் கொண்டு பாகர்களைத் தூக்கி நிலத்தில் மோதிக் கொன்று விட்டு அங்கு நின்ற சமணர்களைத் தேடிப்பிடித்து ஒவ்வொருவராகக் கொன்றது.

தப்பியோடிய சமணர்கள் அரசரிடம் சென்று நடுங்கிய படி; "அரசே, தருமசேனர் நம்மிடம் கற்ற வித்தைமூலம் தன்னைக் கொல்ல வந்த யானையை எம்மீது ஏவிவிட்டுப் பலரைக் கொன்றுவிட்டார். எனவே அவரைக் கல்லிலே கட்டி கடலிலே வீசவேண்டும்" என்றனர்.

அரசனின் கட்டளைப்படி போர்வீரர்கள் திருநாவுக்கரசரைக் கல்லிலே கட்டித் தோணியில் கொண்டு சென்று சமுத்திரத்திலே தள்ளிவிட்டனர். திருநாவுக்கரசர் சிவபெருமானை மனதில் நினைத்துச் "சொற்றுணை வேதியன்" என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடினார். கல்லு தெப்பமாக மிதந்து கரையை அடைந்தது.

அதை அறிந்த பல்லவராஜன் திருநாவுக்கரசரை வணங்கி, தான் செய்த பிழைகளைப் பொறுத்தருளுமாறு கேட்டுத் தானும் சைவ சமயத்தில் சேர்ந்தான். பின் அவ்வூரிலே குணதரவீச்சரம் என்னும் கோயிலைக் கட்டினான்.

ஒரு நாள் திருநாவுக்கரசர் திருத்தூங்கானை மாடம் என்னும் கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கி; "சுவாமி அடியேன் இழிவினை உடைய சமணசமயத்தில் சேர்ந்தமையால் மனம் சஞ்சலப் பட்டுக் கொண்டிருக்கிறது. நான் உண்மைச் சைவனாதல் வேண்டும். அதற்காகத் தேவரீர் தமது சூலத்தையும் இடபத்தையும் எனது தோளில் பதித்தருளல் வேண்டும்" எனக்கேட்டார்.

திருநாவுக்கரசரின் வேண்டுகோளை நிறைவேற்ற எண்ணிய பரமசிவன் தனது சிவகணங்களில் ஒன்றை அனுப்பி அவரின் தோளிலே சூலத்தையும் இடபத்தையும் பொறிப்பித்தார்.

சிவத்தலங்கள் தோறும் சென்று திருப்பதிகம் பாடுவதை வழக்கமாகக் கொண்ட திருநாவுக்கரசர், அவ்வாலயங்களில் உழவாரத்திருத்தொண்டும் செய்து வந்தார். ஒருநாள் அவர் சிதம்பரத்திற்குச் சென்று பதிகம் பாடி விட்டு உழவாரத் தொண்டு செய்தார். அப்பொழுது அங்கு வந்த அடியார்கள் உமாதேவியாரிடம் ஞானப்பால் உண்ட திருஞானசம்பந்தப் பெருமானின் மகிமையைச் சொன்னார்கள். அதைக் கேட்டு மகிழ்ந்த திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தரைத் தரிசிப்பதற்காகச் சீர்காழியை நோக்கிப் புறப்பட்டார்.

திருநாவுக்கரசர் தன்னைச் சந்திக்க வருவதைக் கேள்விப்பட்ட திருஞானசம்பந்தர், அடியார்களுடன் புறப்பட்டுச் சென்றார். திருஞானசம்பந்தரைக் கண்ட திருநாவுக்கரசர் அவரின் பாதங்களில் விழுந்து வணங்கினார். திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரின் பாதங்களில் விழுந்து வணங்கி; "அப்பரே" என்றழைத்தார். அதன் பின் இருவரும் பல சிவத்தலங்களுக்குச் சேர்ந்து சென்று பரமசிவனை வணங்கிப் பதிகங்களைப் பாடினர்.

ஒருநாள் திருநாவுக்கரசர் திங்களூருக்குச் சென்றார். அங்கே வாழ்ந்த அப்பூதியடிகள் என்னும் சிவத்தொண்டர் திருநாவுக்கரசரின் மீது கொண்ட அளவற்ற பக்தியால் தம்முடைய இரு புத்திரர்களுக்கும் மூத்த திருநாவுக்கரசு, இளையதிருநாவுக்கரசு என்று நாமம் சூட்டினார். அத்துடன் தன்னுடைய அன்னசத்திரம், கிணறு, குளம், தண்ணீர்ப்பந்தல், போன்றவற்றிற்கும் திருநாவுக்கரசரின் பெயரையே சூட்டியிருந்தார். அதைக் கண்டு வியப்படைந்த திருநாவுக்கரசர் அப்பூதி அடிகளாரைச் சந்திப்பதற்காக அவரின் வீட்டிற்குச் சென்றார்.

திருநாவுக்கரசரை அப்பூதியடிகளாரும் அவரது மனைவியும் பிள்ளைகளும் வணங்கினார்கள். அப்பூதியடிகளார் திருநாவுக்கரசரைத் தமது வீட்டில் பகற் போசனம் அருந்துமாறு அன்புடன் கேட்டார். திருநாவுக்கரசர் மகிழ்வுடன் சம்மதித்தார்.

சமையல் முடிந்ததும் மூத்ததிருநாவுக்கரசு வாழை இலை வெட்டுவதற்க்காக வாழைத் தோட்டத்திற்குச் சென்றபோது அங்கிருந்த நாகம் ஒன்று தீண்டியமையால் அவன் மரணமானான்.

இறந்த மூத்த திருநாவுக்கரசுவின் உடலை மறைத்துவைத்துவிட்டுத் திருநாவுக்கரசருக்கு அப்பூதியடிகளின் மனைவியார் அன்னம் படைத்தார். நடந்த சம்பவத்தை சிவனருளால் அறிந்து கொண்ட திருநாவுக்கரசர்; ''உமது புத்திரர்களையும் அழைத்து வாரும் ஒன்றாக அமர்ந்திருந்து உணவு உண்போம்'' என்றார். அதைக் கேட்டுச் செய்வதறியாது திகைத்து நின்ற அப்பூதியடிகள் வேறுவழியின்றி நடந்த சம்பவத்தைச் சொன்னார்.

உடனே திருநாவுக்கரசர் இறந்து கிடந்த அப்பூதியடிகளின் மகனின் சடலத்திற்கு அருகே சென்று சிவனை நினைத்து; 'ஒன்று கொலாமவர் சிந்தை' எனும் திருப்பதிகத்தைப் பாடினார். உடனே இறந்து கிடந்த மூத்ததிருநாவுக்கரசு உயிர்த்தெழுந்து திருநாவுக்கரசரை வணங்கினான்.

அதன் பின் திருநாவுக்கரசர் பல சிவத்தலங்களிற்கும் சென்று உழவாரத்திருப்பணி புரிந்தும், திருப்பதிகங்கள் பாடியும் வந்தார். அந்நாளில் நமிநந்தியடிகள் நீரினால் விளக்கேற்றி வந்தமையை அறிந்து, அவரைச் சந்தித்து அவரின் பாதாரவிந்தங்களைத் தொழுதார். அவரின் மகிமையை உலகினர் அறிந்து கொள்வதற்காக அவரைப் போற்றித் திருப்பதிகம் ஒன்றைப் பாடினார். பின் திருஞானசம்பந்தருடன் சேர்ந்து பல திருத்தலங்களைத் தரிசித்துத் திருப்பதிகங்கள் பாடி, உழவாரத்திருத்தொண்டு செய்தார். பின் திருநாவுக்கரசநாயனாரும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் திருவீழிமிழலையை அடைந்தனர். அங்கு பருவ மழை பெய்யாததால் மக்கள் உணவின்றிக் கஷ்டப்பட்டனர் அதனால் நாயன்மார்கள் இருவரும் இறைவனிடம் படிக்காசு பெற்று மக்களின் துயர் தீர்த்தனர். பின் இருவரும் இறைவனை வேண்ட வருணபகவான் மனம் இரங்கி பெருமழை பொழிந்தார். அதனால் மக்கள் மகிழ்ந்தனர்.

நாயன்மார் இருவரும் திருவீழிமிழலையில் இருந்து புறப்பட்டுச் சென்று வேதாரணியத்தை அடைந்தனர். வேதாரணியத்தின் கதவு பல வருடங்களாகப் பூட்டப்பட்டிருந்தது. அதனால அடியவர்கள் மனம் வருந்தி இன்னொரு வழியாகச் சென்று சுவாமி தரிசனம் செய்து வந்தனர். இதையறிந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருநாவுக்கரசரை அன்புடன் நோக்கி; "அப்பரே, இத் திருக்கதவு திறக்கப் பதிகம் பாடுவீர்."என்று சொன்னார். அதைக் கேட்டு மகிழ்ந்த அப்பர் சுவாமிகள் பதிகம் பாட பல வருடங்களாக மூடப்பட்டிருந்த கதவு திறந்தது. மக்கள் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி, திருக்கதவு வழியாக உள்ளே சென்று சுவாமி தரிசனஞ் செய்தனர்.

பின் திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தரைப் பார்த்து; " இத் திருக்கதவு திறக்க நாம் பதிகம் பாடினோம். நீர்மூடப்பாடும்'' என்றார்.

அதைக் கேட்டு மகிழ்ந்த திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் பரமசிவனை வணங்கித் திருப்பதிகம் பாட அக்கதவு மூடிக்கொண்டது அதன்பின் அக்கதவு காலையில் திறக்கப்பட்டு மாலையில் தானாகவே மூடிக் கொள்ளும்.

திருநாவுக்கரசர் வேதாரணியத்திலே சில நாட்கள் தங்கி பின் வடதளி என்ற ஆலயத்திற்குச் சென்றார். அவ்வாலயத்தில் வீற்றிருக்கின்ற சிவலிங்கப் பெருமானைச் சமணர்கள் மறைத்து வைத்திருந்தனர். அச்சிவலிங்கப் பெருமானை அப்பர் சுவாமிகள் வணங்கச் சென்றபோது சிவலிங்கப் பெருமான் அந் நாட்டு அரசரின் கனவில் தோன்றி; "நாம் சமணர்களால் மறைக்கப்பட்டிருக்கிறோம். அப்பர் சுவாமிகள் எம்மை வழிபட வழிசெய்'' என்று அருளினார். உடனே அரசன் தனது போர்வீரர்களுடன் அவ் ஆலயத்திற்குச் சென்று சமணர்களை அழித்து சிவலிங்கப் பெருமானை அப்பர் சுவாமிகள் வழிபட வைத்தார். அதன் பின் அப்பர் சுவாமிகள் திருப்பஞ்சீலியை நோக்கிச் சென்றார். செல்லும் வழியிலே அவர் தாகத்தினாலும் பசியாலும் வருந்த பரமசிவன் அவருக்கு நீரும் பொதிசோறும் கொடுத்தார். பின் அவருடன் திருப்பஞ்சீலிவரை சென்றார். பின் உத்தர கைலாயத்திற்குச் செல்ல விரும்பிக் கால்நடையாகச் சென்றார். நெடுந்தூரம் நடந்தமையால் கால்கள் புண்ணாகின அதனால் அவர் உருண்டுருண்டு சென்றார். அதனால் உடல் புண்ணானது. அப்பரது உடல் நிலையைக் கண்டு கவலை





கொண்ட சிவபிரான், பிராமணவேடம் தாங்கி வந்து; ''அப்பரே தேவர்களால் கூட அடையமுடியாத உத்தர கைலாயத்திற்கு உம்மாற் செல்லமுடியாது திரும்பிப் போம்'' என்று கூறினார்.

''நான் இவ்விடத்தில் இறந்தாலும் இறப்பேனே தவிரத் திரும்பிச் செல்ல மாட்டேன்'' என்றார் திருநாவுக்கரசர்.

சிவபிரான் மனம் மகிழ்ந்து; ''இக்குளத்தில் நீராடி உத்தரகைலாயங் கிரியை வந்தடை'' என்று கூறி மறைந்தார்.

திருநாவுக்கரசர் குளத்தில் இறங்கி நீராடினார். சிவபெருமான் அவரின் அருகே வந்து கைலாயங் கிரிக்கு அவரை அழைத்துச் சென்று காட்சி கொடுத்தார்.

பாண்டிய நாட்டிற்குச் சென்று கூன்பாண்டியனின் கூனைநிமிர்த்திய திருஞான சம்பந்த நாயனர், அப்பர் சுவாமிகள் திருப்பூந்துருத்தியில் இருத்தலைக் கேள்விப்பட்டு அவரைச் சந்திப்பதற்காக வந்தார். அடியார் குழாத்துடன் முத்துச்சிவிகையில் வந்த ஞானசம்பந்தரைக் கண்ட அப்பர் சுவாமிகள் யாரும் காணாதபடி சம்பந்தரின் அருகே சென்று அவர் ஏறிவந்த முத்துச் சிவிகையை தாங்கி வந்தார். திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பூந்துருத்திக்கு வந்து; ''அப்பர் சுவாமிகள் எங்கே'' என்று ஆவல் பொங்கக் கேட்டார்.

''அடியேன் தங்களின் முத்துச்சிவிகையைச் சுமந்து வருகிறேன்'' என்றார்அப்பர்.

பதைபதைத்து சிவிகையால் இறங்கியஞானசம்பந்தர் அப்பரின் காலிலே விழுந்து பணிந்தார். அப்பர் சம்பந்தரின் கால்களில் விழுந்து பணிந்தார். சில காலம் இருவரும் அங்கிருந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

பரமசிவன் அப்பரின் பெருமைகளை உலகறியச் செய்வதற்காக திருப்புகலூரிலேயுள்ள சிவாலயத்தில் திருநாவுக்கரசர் உழாவாரத் தொண்டு செய்யும்போது அங்குள்ள கற்களை யெல்லாம் பொற்கற்களாக மாற்றினார். எனினும் அப்பர் அவற்றைக் கற்களாக எண்ணிக் கடகத்தில் அள்ளிச் சென்று வெளியே கொட்டினார். அதன் பின் தேவ கன்னியர்கள் அவர் முன் இனிய கானம் பாடி அழகாக நடனமாடினர். அப்பர் சுவாமிகள் அவற்றைப் ப்ாராது சிவனையே நினைத்துக் கொண்டு தான் செய்த திருப்பணிகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார். அதனால் மனம் மகிழ்ந்த தேவ கன்னியர் அப்பரை வணங்கிவிட்டுத் தமதுலகம் சென்றார்.

சிவத்தலங்கள் தோறும் சென்று பதிகம் பாடி உழவாரத் தொண்டு புரிந்த திருநாவுக்கரச நாயனார், சித்திரை மாதத்திலே சதய நட்சத்திரத்திலே "உன்னடிக்கேபோதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்ற திருப் பதிகம் பாடி சிவனின் பாதங்களை அடைந்தார்.

## திருச்சிற்றம்பலம்

## குலச்சிறை நாயனார்

பாண்டிய மன்னனான நெடுமாறனின் முதல் மந்திரியான குலச்சிறை நாயனார் சிவபிரானின் மேல் பேரன்பு பூண்டவர். சிவனடியார் களைக் கண்டவுடன் அவர்களை அழைத்துச் சென்று வணங்கி உணவளிப்பார். வீபூதியணிந்து உருத்திராக்கம் தரித்திருப்பார். பாண்டிய மன்னன் சமணசமயத்தைத் தழுவியபோது அவனின் பட்டத்தரசியான மங்கையற்கரசியாருடன் சேர்ந்து சைவத்தை வளர்க்க அரும் பாடு பட்டவர். அத்துடன் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரை அழைத்து வந்து பாண்டிய மன்னனின் நோயை நீக்கி அவனது கூனை நிமிர்த்தி, அவன் சைவசமயத்தவனாக மாற வழி செய்தவர். திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரோடு வாதிட்டுக் தோற்ற சமணர்களைக் கழுவிலே ஏற்றுவித்தவர். சுந்தரமூர்த்தி நாயனாராலே " பெருநம்பி'' என்று சிறப்பிக்கப்பட்டவர்.

திருச்சிற்றம்பலம்

# பெருமிழலைக் குறும்ப நாயனார்

பெருமிழலை என்னும் ஊரில் குறும்ப நாயனார் என்றொரு சிவபக்தர் இருந்தார்.சிவனடியார்கள் மீது பேரன்பும் பெருமதிப்பும் வைத்திருந்த குறும்ப நாயனார், சிவனடியார்களின் அனைத்துத் தேவைகளையும் அவர்களது குறிப்பறிந்து செய்து மகிழ்வார். அவர்களுக்கு வேண்டிய திரவியங்களைக் கொடுத்துதவுவார். சிவனடியார்களுக்குச் செய்யும் தொண்டு சிவனுக்குச் செய்யும் தொண்டென நினைத்து மனம் வாக்குக் காயம் ஆகிய மூன்றாலும் அவர் சிவனடியார்களுக்குத் தொண்டு செய்து வந்தமையால் அட்ட மகா சித்திகளும் அவரைவந்தடைந்தன. சுந்தரமூர்த்தி நாயனாரைச் சிவன் என நினைத்து வணங்கிய பெருமிழலைக்குறும்ப நாயனார் அவர் திருக்கைலாயத்திற்குச் செல்லவுள்ளார் என்பதை முன்னே திருவருளால் அறிந்து அவரைப் பிரிந்து ஒரு கணமும் நான் உயிர் வாழமாட்டேன். என்று நினைத்து யோகத்தினாலே உடலினின்னும்பிரிந்து திருக்கைலாயத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானுடைய திருவடியை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்

# காரைக்கால் அம்மையார்

சோழ நாட்டிலே உள்ள காரைக்கால் என்னும் ஊரில் தனதத்தன் என்றொரு வணிகன் இருந்தான். அவனுக்குப் புனிதவதி என்றொரு மகள் இருந்தாள். புனிதவதிக்கு உரிய வயது வந்ததும் தனதத்தன் நாக பட்டனத்தில் பெரும் வணிகனாக இருந்த பரமதத்தனுக்கு அவளை விவாகம் செய்து கொடுத்தான். இருவரும் மிகவும் இன்பமாக இல்லறத்தை நடத்திக் கொண்டிருந்தனர்.

ஒரு நாள் பரமதத்தனிடம் வந்த வணிகன் ஒருவன் சுவையான இரு மாங்கனிகளைக் கொண்டு வந்து அவனுக்குக் கொடுத்தான். பரமதத்தன் அவ் இரு மாங்கனிகளையும் ஏவலாளர்கள் மூலம் தனது வீட்டிற்கு அனுப்பி வைத்தான்.

பகல் வேளை புனிதவதி சமைத்துக் கொண்டிருந்தபோது சிவனடியார் ஒருவர் மிகவும் களைப்புற்றுச் சோர்ந்துவந்து தனக்கு உணவு தருமாறு கேட்டார். சோறு சமைத்துவிட்டு காய்கறிகளை வெட்டிக் கொண்டிருந்த புனிதவதி, சிவனடியாரின் பசித்த கோலத்தைக் கண்டு மனம் இளகி உடனடியாக அவருக்கு உணவு கொடுக்க விரும்பினாள். அதனால் சோற்றை இலையில் படைத்து, கணவன் கொடுத்தனுப்பிய மாங்கனிகளுள் ஒன்றை எடுத்துச் சுத்தப்படுத்தி வெட்டிக்கொடுத்தாள். சுவையான மாங்கனியுடன் சோற்றை உண்ட சிவனடியார் அவளை வாழ்த்திவிட்டுப் புறப்பட்டார்.

மதிய உணவிற்காக வீட்டிற்கு வந்து பரமதத்தன் உணவை உண்ட பின், புனிதவதி எஞ்சியிருந்த மாங்கனியைக் கொண்டு வந்து கணவரிடங் கொடுத்தாள். சுவை மிக்க அந்த மாங்கனியை உண்ட பரமதத்தன், மற்றக்கனியையும் கொண்டு வருமாறு சொன்னான்.

புனிதவதி எதுவும் செய்யத் தோன்றாது வீட்டின் உள்ளே சென்று பரம சிவனைத் தியானித்தாள். அவரின் திருவருளால் அவளது கையில் ஒரு மாங்கனிகிடைத்தது. மகிழ்வுடன் அக்கனியைக் கொண்டு சென்று கணவரிடம் கொடுத்தாள். அக்கனி முன்னைய கனியை விடச் சுவையாக இருந்தமையால் ஆச்சரியப்பட்ட பரமதத்தன்; "இக்கனியை போன்றதொரு கனியை நான் இதுவரை உண்டதில்லை. முன்னைய கனியை விட இது சுவையில் வேறுபட்டுள்ளது. இதை நீ எங்கே பெற்றாய்" என்று கேட்டான்.

புனிதவதி காலையில் சிவனடியாருக்கு ஒரு கனியைக் கொடுத்ததையும் பின் சிவனருளால் அக்கனி கிடைத்த வரலாற்றையும் சொன்னாள்.





அதை நம்பாத பரமதத்தன்; "அப்படியாயின் சிவனிடம் இன்னொரு பழத்தை பெற்றுத்தா"என்றான். அதைக் கேட்ட புனிதவதி அவ்விடத்தை விட்டுச் சென்று பரமசிவனைத் தியானித்தாள். திருவருளால் அவளது கைக்கு ஒரு மாங்கனி வந்தது. அதை அவள் கொண்டு வந்து பரம தத்தனுக்குக் கொடுத்தாள். அவன் பயத்துடன் அம் மாங்கனியை வாங்கினான். அப்பொழுது அம் மாங்கனி மறைந்தது. அதனால் கலக்கமுற்ற பரமதத்தன் புனிதவதியைத் தெய்வம் என நினைத்து வேறோர் ஊருக்குச் சென்று வாணிபம் செய்தான்.

சில நாள் செல்ல அவ்வூரில் வாழ்ந்த வாணிகன் ஒருவனின் மகளைத் திருமணம் செய்தான். அவளுக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. அதற்குத் தான் தெய்வமாக வணங்கும் புனிதவதியின் பெயரை வைத்தான்.

பரமதத்தன் திருமணம் செய்து குழந்தையுடன் வாழ்வதைக் கேள்விப்பட்ட புனிதவதியார் தனது தந்தையையும் அழைத்துக் கொண்டு கணவனைச் சந்திக்கச் சென்றாள்.

புனிதவதியார் தன்னைத் தேடி வருவதை அறிந்த பரமதத்தன் அஞ்சி நடுநடுங்கி தனது மனைவியையும் பிள்ளையையும் அழைத்துக் கொண்டு அவளைச் சந்திக்கச் சென்றான். வழியிற் புனிதவதியாரைச் சந்தித்த பரமதத்தன் அவளின் காலடியில் வீழ்ந்து வணங்கினான்.

அதனால் மனக்கவலை அடைந்த புனிதவதியார் பரமசிவனது திருவடிகளைச் சிந்தித்து; "சுவாமி எனது கணவரைத் தெய்வமாக நானே வணங்குதல் வேண்டும். ஆனால் எனது கணவர் என்னைத் தெய்வமாக்கி வணங்கியமையால் எனது சரீரத்தில் உள்ள தசையை நீக்கித் தேவரீரைத் துதிக்கின்ற பேய் வடிவை அடியேனுக்குத் தந்தருளல் வேண்டும்." என்று துதித்தார். அக்கணமே இறைவனின் திருவருளால் புனிதவதியாரின் உடலில் உள்ள தசைகள் யாவும் நீங்கின.

புனிதவதியார் பேய்வடிவில் இறைவனை வணங்கி அற்புதத் திருவந்தாதியையும் திருவிரட்டை மணிமாலையையும் பாடினார். பின்பு திருக்கைலாயங் கிரிக்குச் செல்ல விரும்பி, தலையினாலே நடந்து சென்றார். அவரைக் கண்ட சிவபெருமான் அன்பு மேலீட்டால்; "அம்மையே" என்றழைக்கப் புனிதவதியார்; "அப்பா" என்றழைத்தார். பின்பு; "சுவாமி இனிப் பிறவாமை வேண்டும். பிறப்பின் தேவரீரை ஒரு கணமும் மறக்காத நிலை வேண்டும். அத்துடன் தேவரீர் நடனம் ஆடும் போது நான் அருகில் இருந்து பாட அருளல் வேண்டும்" என்று கேட்டார்.

சிவபெருமான்; "அப்படியே ஆகட்டும்" என்று அருளினார்.

புனிதவதியார் "கொங்கை திரங்கி" என்னும் மூத்ததிருப்பதிகத்தைப் பாடினார். அவர் சுவாமியினுடைய தூக்கிய திருவடியின்கீழ் சிவானந்தத்தை அனுபவித்துக் கொண்டு இன்றும் இருக்கிறார்.

**திருச்சிற்றம்பலம்**

# அப்பூதியடிகள் நாயனார்

சோழ நாட்டிலே திங்களூரிலே அப்பூதியடிகள் என்றொரு பிராமணர் இருந்தார். அவர் சிவனடியார்களின் மேல் பேரன்பு பூண்டு, அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்து மகிழ்வித்து வந்தார். அவர் திருநாவுக்கரசு நாயனார் மீது கொண்ட அதீதபக்தியால் அவரின் பெயரால் அன்ன சத்திரம் அமைத்துச் சிவனடியார்களுக்கு அமுதளித்தார். திருநாவுக்கரசரின் பெயரில் தாக சாந்தி நிலையம் அமைத்து அடியார்களின் தாகத்தைத் தீர்த்தார். அத்துடன் அவரது வீடு, குளம், பிள்ளைகள், பறவைகள், தோட்டங்கள், வயல்கள், பசுக்கள், எருமைகள் யாவற்றிற்கும் திருநாவுக்கரசரின் பெயரைச்சூட்டி மகிழ்ந்திருந்தார்.

இந் நாளில் சிவத்தலங்களைத் தரிசித்துப் பதிகம் பாடி உழவாரத் திருத் தொண்டு செய்து கொண்டு திங்களூருக்கு வந்த திருநாவுக்கரசு நாயனார், அன்ன சத்திரத்திற்கும் தாக சாந்தி நிலையத்திற்கும் தனது பெயர் சூட்டப் பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியமுற்று அங்குள்ளோரை அது பற்றி வினாவினார்.

"இவ்வூரிலே அப்பூதியடிகள் என்றொரு சிவபக்தர் இருக்கிறார். அவர் தனது வீட்டில் உள்ள அனைத்திற்கும் திருநாவுக்கரச நாயனாரின் பெயரைச் சூட்டியுள்ளார்'' என்றனர். திருநாவுக்கரசர் அப்பூதியடிகளாரைத் தரிசிக்கும் பொருட்டு அவரது வீட்டிற்குச் சென்றார். வீட்டு வாசலில் சிவனடியார் ஒருவர் வந்திருப்பதை அறிந்த அப்பூதியடிகள் மகிழ்வுடன் வந்து அவரை வணங்கி; "உள்ளே வந்து களைப்பு நீங்க உணவருந்துங்கள்'' என்று இரந்தார்.

நாவுக்கரசர் அவரைக் கண்டு மனம் மகிழ்ந்தார். அவர் எல்லாப் பொருட்களுக்கும் தனது பெயரைச் சூட்டிய காரணத்தை அறிய விரும்பி, அப்பூதியடிகளது பாதங்களை நமஸ்கரித்தார்.; "அடிகளாரே, தங்களின் உடைமைகள் அனைத்திற்கும் தங்களின் பெயரைச் சூட்டாது சிவனடியார் ஒருவரின் பெயரைச் சூட்டிய காரணத்தை நாம் அறியலாமா?'' என்று கேட்டார்.

அதைக் கேட்ட அப்பூதியடிகளுக்குக் கடும் கோபம் வந்தது. பாதகர்களான சமணர்களுடன் சேர்ந்து பல்லவராஜன் செய்த கொடுமைகளைத் தாங்கி, சிவனருளால் உயிர்பிழைத்து, சைவ சமயமே மெய்ச்சமயம் என்று உலகிற்கு உணர்த்திய திருநாவுக்கரசரின் பெருமையைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா.......? சிவனடியார்களைச் சிவன் என்று வணங்கி சிவத்தலங்கள் தோறும் சென்று வேதப் பொருளைத் தமிழிலே பாடி உழவாரத் தொண்டு செய்யும் திருநாவுக்கரசரைக் குறைத்து மதிப்பிட்ட உம்மைக் கொல்லுதல் வேண்டும். சிவனடியார் என்றபடியால் பொறுத்துக் கொண்டேன். உள்ளே வந்து அமுது செய்து செல்லும்'' என்ற அப்பூதியடிகள் சிறிது நேரம் பொறுத்து; "பெரும் பெருமையும் பக்தியில் வலிமையும் உடைய நாவுக்கரசரை அறியாத நீர் யார்?'' என்று கேட்டார். அப்பூதியடிகள் தன்மீது வைத்த அன்பின் பெருமையை அறிந்து மகிழ்ந்த திருநாவுக்கரசர் "அறியாமையால் சமணசமயத்தைத் தழுவிய பாவியான திருநாவுக்கரசன் நான் தான்'' என்றார்.

அதைக் கேட்ட அப்பூதியடிகள் கரங்களைச் சிரசில் குவித்தார். கண்களால் கண்ணீர் வழிய செய்வதறியாது சில கணங்கள் தடுமாறினார். அவரால் பேசமுடியவில்லை. உடலில்உள்ள உரோமங்கள் சிலிர்க்க நாவுக்கரசரைக் கட்டித் தழுவினார். பின் உள்ளே அழைத்துச் சென்று ஆசனத்தில் இருத்திப் பணிவிடைகள் செய்தார்.

சமையல் முடிந்ததும் மூத்ததிருநாவுக்கரசு வாழை இலை வெட்டுவதற்காக வாழைத் தோட்டத்திற்குச் சென்றபோது அங்கிருந்த நாகம் ஒன்று தீண்டியமையால் அவன் மரணமானான்.

இறந்த மூத்த திருநாவுக்கரசுவின் உடலை மறைத்துவைத்து விட்டுத் திருநாவுக்கரசருக்கு அப்பூதியடிகளின் மனைவியார் அன்னம் படைத்தார். நடந்த சம்பவத்தைச் சிவனருளால் அறிந்து கொண்ட திருநாவுக்கரசர்; "உமது புத்திரர்களையும் அழைத்து வாரும் ஒன்றாக அமர்ந்திருந்து உணவு உண்போம்'' என்றார். அதைக் கேட்டுச் செய்வதறியாது திகைத்து நின்ற அப்பூதியடிகள் வேறுவழியின்றி நடந்த சம்பவத்தைச் சொன்னார்.

உடனே திருநாவுக்கரசர் இறந்து கிடந்த அப்பூதியடிகளின் மகனின் சடலத்திற்கு அருகே சென்று சிவனை நினைத்து; 'ஒன்று கொலாமவர் சிந்தை' எனும் திருப்பதிகத்தைப் பாடினார். உடனே இறந்து கிடந்த மூத்ததிருநாவுக்கரசு உயிர்த்தெழுந்து திருநாவுக்கரசரை வணங்கினான்.

அப்பூதியடிகளார் திருநாவுக்கரசு நாயனாருடைய திருவடிகளை தினமும் தொழுது, அவரின் பெயரால் அமைக்கப்பட்ட அன்னதான மடத்தில் அடியவர்களுக்கு உணவு அளிப்பதை தொண்டாகச் செய்து பரமசிவனின் திருவடிகளை அடைந்தார்.





திருச்சிற்றம்பலம்

## திருநீல நக்க நாயனார்

சோழ நாட்டிலே சாந்த மங்கை என்ற ஊரிலே திருநீல நக்க நாயனார் என்றொரு பிராமணர் வாழ்ந்து வந்தார். அவர் வேதத்தின் உள்ளுறையாவது சிவனையும் அடியார்களையும் அன்புடன் வணங்கி அவர்களுக்கு உணவளித்துத் தொண்டு செய்வதே என்று எண்ணித் தினந்தோறும் சிவனை வணங்கி சிவனடியார்களுக்கு உணவு கொடுத்து அவர்களுக்கு பலவகைப்பட்ட தொண்டுகளைப்புரிந்து வந்தார்.

ஒரு நாள் திருவாதிரைத் தினத்திலே சிவபெருமானை வழிபடுவதற்காக அர்ச்சனைப் பொருட்களுடன் மனைவியையும் அழைத்துக் கொண்டு வீட்டுக்கு அருகே இருந்த அயவந்தி எனும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற சுவாமியைத் தரிசிக்கச் சென்றார். கோயிலை அடைந்த திருநீல நக்க நாயனார், சிவனின் அருகே சென்று சுவாமியைத் தரிசனம் செய்தார். அவரின் அருகே அவரது மனைவியாரும் இருந்தார்.

அப்பொழுது ஒரு சிலந்தி மேலே இருந்து சிவலிங்கத்தின் மேல் விழுந்தது. அதைக் கண்ட திருநீல நக்க நாயனாரின் மனைவியார் உதட்டைக்குவித்து ஊதினார். இதைக் கண்டு பொறுத்துக் கொள்ள முடியாத திருநீல நக்க நாயனார் மனைவியைக் கோபம் கொண்டு ஏசினார், "நீ சிவலிங்கத்தின் மேலே விழுந்த சிலந்தியை வேறுவகையால் துரத்தாது ஊதியமையால் உனது எச்சில் சுவாமியின் மீது பட்டு எனக்குத் தீராத பழியை உண்டு பண்ணிவிட்டது. அதனால் இனி எனக்கும் உனக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை'' என்று கூறிவிட்டு அவர் வீட்டுக்குச் சென்றுவிட்டார். செய்வதறியாது தடுமாறிய திருநீல நக்கனாரின் மனைவியார் சிவனைத் தொழுத வண்ணம் இரவுமுழுவதும் கோயிலில் இருந்தார்.

அன்று இரவு திருநீல நக்க நாயனாரின் கனவில் தோன்றிய சிவபெருமான்; "அன்பனே, அன்போடு என்னை எப்படியும் தொழலாம். கண்ணப்பன் என்ன செய்தான் என்று நினைத்துப்பார். அதே போல் உனது மனைவி வாயால் ஊதியபோது என்மீது எச்சில் பட்ட இடங்கள் எல்லாம் எனக்கு இன்பத்தையே தந்தது படாத இடங்களில் கொப்புளங்கள் வந்து வேதனையைத் தருகின்றன. அவளின் அன்பை நீ உணரத் தவறிவிட்டாய். உடனே சென்று அவளை அழைத்து வா'' என்று கட்டளை இட்டு மறைந்தார். நித்திரை விட்டெழுந்த திருநீல நக்க நாயனார் மகிழ்வுடன் கோயிலுக்குச் சென்று சுவாமியை வணங்கித் தோத்திரம் செய்து விட்டுத் தனது மனைவியை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தார்.

பின் முன்போலச் சிவனடியார்களைப் பேணி உபசரித்து வரும் நாளில், திருஞானசம்பந்தர் அயவந்தி நாதரைத் தரிசிக்க அயவந்திக்கு வந்தார். திருநீல நக்க நாயனார் அவரை வரவேற்று வணங்கி உணவளித்து உபசரித்தார்.அவருடன் திருநீல கண்டப் பெரும் பாணரும் மனைவியாரும் கூட வந்தனர். திருஞான சம்பந்தரின் வேண்டு கோளுக்கு இணங்க அவர்கள் இருவருக்கும் வீட்டின் நடுவே இருக்கின்ற பூசை செய்யும் இடத்திலே தங்கும் படி கூறினார். அங்கு எரிந்து கொண்டிருந்த நித்தியாக்கினி வலஞ்சுழித்துப் பிரகாசமாக ஒளிர்ந்தது. பின் திருநீலகண்டநக்க நாயனார் திருஞான சம்பந்தரின் திருமணச்சடங்கிலே கலந்து, அங்கெழுந்த சோதியில் புகுந்து பரமசிவனின் பாதநிழலை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்

## நமிநந்தியடிகள் நாயனார்

சோழ நாட்டிலே ஏமாப்பேறு என்ற ஊரிலே சிவனது திருவடிகளைப் பேரன்போடு பூசிக்கும் நமிநந்தியடிகள் என்றொரு பிராமணர் வாழ்ந்தார். அவர் தினமும் திருவாரூருக்குச் சென்று வான்மீக நாதரை வணங்குவார்.

ஒரு நாள் அவர் திருமுன்றிலை என்ற ஊரை அடைந்து அங்கு வீற்றிருக்கின்ற பரமசிவனுக்கு விளக்கேற்ற விரும்பினார். கோயிலுக்கருகில் இருந்த வீடு ஒன்றிற்குச் சென்று சுவாமிக்கு தீபம் ஏற்ற நெய் கேட்டார்.

அது சமண சமயத்தவர்கள் வாழும் வீடு. அங்குள்ளவர்கள் அவரைக் கோபித்து; "சுவாலிக்கின்ற அக்கினியைக் கையிலே வைத்திருக்கும் உங்கள் பரமசிவனுக்கு ஏன் நெய் விளக்கு.? தேவையானால் நீரை விட்டு எரி" என்று கூறி அவரைக் கலைத்தனர்.

ஆலயத்திற்கு வந்த நமிநந்தியடிகள் பரமசிவனை மனவருத்தத்துடன் வணங்கினார். அடிகளாரின் மனக்குறையை நீக்க விரும்பிய பரமசிவன் ஆகாயத்தில் தோன்றி; "நமிநந்தியே கவலைப்படாதே எனது ஆலயத்தின் அருகில் இருக்கும் திருக் குளத்திலே நீரை முகர்ந்து கொண்டு வந்து விளக்கேற்று" என்றருளினார்.

நமிநந்தி நாயனார் அதைக் கேட்டு மனம் மகிழ்ந்து குளத்திற்குச் சென்று சிவநாமத்தை உச்சரித்துக் கொண்டு நீரை முகர்ந்து கொண்டு வந்தார். அந் நீரை விளக்கில் இட்டு விளக்கேற்றினார். அது சுடர் விட்டு பிரகாசித்து எரிந்தது. அன்றுமுதல் நமிநந்தியடிகள் இரவில் தண்ணீரில் விளக்கேற்றி வந்தார். அதைக் கண்ட சமணர்கள் பயத்தினால் அக்கோயிலின் அயலை விட்டு விலகிச் சென்றனர்.

நமிநந்தியடிகள் பங்குனி மாதத்தில் சிவபெருமானுக்கு மகோற்சவம் நடத்தினார். அப்பொழுது சகல இன மக்களும் ஆலயத்திற்கு வந்து சுவாமி தரிசனம் செய்தனர். இரவானதும் நமிநந்தியடிகள் தமது வீட்டிற்குச் சென்று வாசலில் நின்று தனது மனைவியை அழைத்து; " நான் இன்று சகல இன மக்களுடனும் சேர்ந்து சுவாமி தரிசனம் செய்தேன். அதனால் சிவபூசை செய்யமுடியாது. குளித்துவிட்டுத் தான் சிவபூசை செய்யமுடியும். எனவே, நீ ஒரு கலத்தில் நீர் கொண்டு வா" என்றார்.

உள்ளே சென்ற மனைவியார் பாத்திரத்துடன் கிணற்றடிக்குச் சென்று தண்ணீர் எடுத்துக் கொண்டு வருமுன் சிவனருளால் நமிநந்தியடிகள் சற்றுக் கண்அயர்ந்தார். அவ் வேளை பரமசிவன் அவரது கனவிலே தோன்றி; "திருவாரூரிலே பிறந்தவர்கள் எல்லோரும் நமது கணங்கள்" என்று அருளி மறைந்தார்.

நமிநந்தியடிகள் திடுக்கிட்டு விழித்தெழுந்து தாம் நினைத்தது குற்றம் என்று நினைத்து மனைவி நீர் கொண்டு வருமுன் உள்ளே சென்று சிவபூசை செய்தார். பின் மறு நாள் திருவாரூர் சென்றபோது அங்குள்ளவர்கள் எல்லோரும் சிவகணங்களாகச் சிலகணங்கள் அவருக்குக் காட்சி கொடுத்தனர். அவரது சிவத் தொண்டினைக் கண்டு மகிழ்ந்த திருநாவுக்கரச நாயனார் இவரைப் புகழ்ந்து பதிகம் பாடினார். இவ்வாறு பல காலம் சிவத் தொண்டு செய்த நமிநந்தியடிகள் ஈற்றில் சிவனின் பாதங்களை அடைந்தார்.

### திருச்சிற்றம்பலம்

## திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்

சோழ நாட்டில் உள்ள சீகாழியிலே சிவபாதவிருதையார் என்றொரு பிராமணர் வாழ்ந்து வந்தார். அவரின் மனைவியாரின் பெயர் பகவதியார்.

சிவனின் பால் பேரன்புபூண்ட சிவபாதவிருதையார் தமிழ் நாடெங்கும் சமண சமயமும் பௌத்த சமயமும் வேகமாகப் பரவி வரச் சைவசமயம் அழிவதைக் கண்டு துயருற்றார். அதனால் சைவசமயத்தை வளர்த்தெடுக்கக்கூடிய பிள்ளை ஒன்றைத் தனக்குத் தந்துதவும் படி தோணியப்பரையும் பெரியநாயகியையும் வேண்டினார். தோணியப்பரின் அனுக்கிரகத்தினால் சிவபாதவிருதையருக்கு அழகான ஆண்குழந்தை ஒன்று பிறந்தது. அப்பிள்ளையை அன்புடன் பெற்றோர் வளர்த்து வந்தனர். அப்பிள்ளைக்கு மூன்று வயதானபோது ஒரு நாள் சிவபாத விருதையர் குளத்தில் நீராடச் சென்றார். மூன்று வயதுடைய அப்பிள்ளை தந்தையாரின் பின்னால் அழுது கொண்டு சென்றது. அதனால் சிவபாத விருதையர் அக் குழந்தையைத் தூக்கிச் சென்று குளக்கரையில் அமர்த்திவிட்டு குளத்தில் மூழ்கி நீராடினார்.

குளத்தில் தனது தந்தையாரைக் காணாத குழந்தை பயத்துடன் தோணியப்பரின் கோபுர உச்சியைப் பார்த்து "அம்மையே அப்பா" என்று கதறிஅழுதது.





குழந்தையின் அழுகுரலைக் கேட்ட தோணியப்பர் இடப வாகனத்தில் உமாதேவியாருடன் தோன்றி; "எமது குழந்தை பசியால் துடிதுடித்து அழுகிறான். உன்னுடைய முலைப்பாலை பொற்கின்னத்தில் கறந்து ஊட்டு" என்றார்.

உமாதேவியார் அப் பாலகனை அன்போடு அணைத்து பொற்கிண்ணத்தில் கொண்டு வந்த பாலை ஊட்டினார். பாலை உண்ட குழந்தை மகிழ்வுடன் சிரிக்க, உலகமாதவான உமாதேவியார் சிவனுடன் இடபவாகனத்தில் ஏறி மறைந்தார்.

குளித்துவிட்டு வந்த சிவபாதவிருதையர் தனது பிள்ளையின் கடைவாயில் பால் இருப்பதைக் கண்டு கோபங் கொண்டு ஒரு கோலை எடுத்து; "நீ யார் தந்த பாலை உண்டாய்?" என்று கேட்டு அடித்தார்.

பிள்ளை அழாது தனது வலது கையை உயர்த்தி சுட்டு விரலால் தோணியப்பரின் கோபுரத்தைக் காட்டி; "தோடுடைய செவியன் விடையேறியோர்" என்னும் தேவாரத்தைப் பாடியது.

சிவபாதவிருதையர் எதுவும் புரியாமல் தடுமாறினார். உமாதேவியாரின் ஞானப் பாலை உண்ட திருஞான சம்பந்தர் தோணியப்பரின் கோயிலுக்குச் சென்று திருப்பதிகம் பாடினார். தேவர்கள் பூமாரி சொரிந்தனர். சிவபாதவிருதையர் வியப்புற்று தோணியப்பரின் திருவருளை நினைத்து மகிழ்ந்து ஆனந்தக்கூத்தாடினார். பின்பு ஞானசம்பந்தரைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்றார்.

மறு நாள் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தோணியப்பரின் ஆலயத்திற்குச் சென்று அவரை வணங்கி கைகளால் தாளம் போட்டுப் பதிகம் பாடினார். அதைக் கண்ட தோணியப்பர் பஞ்சாட்சர மந்திரம் பொறிக்கப்பட்ட பொற்றாளம் ஒன்றை அவரது கரத்திலே வரும்படி செய்தார்.

திருநீல கண்ட பெரும்பாணர் என்பவர் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரின் பெருமைகளை அறிந்து மகிழ்ந்து அவரைத் தரிசிப்பதற்காக விறலியாரோடு சீர்காழிக்கு வந்தார். அவரைக் கண்டு மகிழ்ந்த ஞான சம்பந்தர் அவரின் பாதங்களில் விழுந்து வணங்கினார். திருநீல கண்டப் பெரும் பாணரும் ஞானசம்பந்தரின் கால்களைக் கட்டியணைத்து முத்தமிட்டு வணங்கினார்; "சுவாமி தாங்கள் பதிகம் பாட, நான் அதை யாழில் இசைக்க வேண்டும்" என்று இரந்து கேட்டார். உடனே தோணியப்பரை வணங்கிய ஞானசம்பந்தர் அவரின் மீது பதிகம் பாட திருநீல கண்டப் பெரும்பாணர் யாழில் அதை இசைத்தார். பின்பு; " அடியேன் தங்களுடன் கூடியிருந்து தாங்கள் பாடும் பதிகங்களை யாழில் இசைக்க அருளல் வேண்டும்" என்று கேட்டார். அதற்குத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் ஒப்புக் கொண்டார்.

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் திருநீல கண்டப் பெரும்பாணரும் அடியார்கள் பலரும் ஒரு நாள் திருநெல்லாயிரத்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானைத் தரிசிக்க விரும்பி திருத்தூங்கானை மாடம் என்னும் ஆலயத்தில் இருந்து புறப்பட்டனர். ஞானசம்பந்தப் பெருமான் தந்தையாரின் தோளின் மேல் ஏறி இருந்து செல்வதை விரும்பாது அடியவர்களுடன் கால் நடையாகச் சென்றார். அவரது பூப்போன்ற பாதங்கள் கற்கள் பட்டு புண்ணாகின. அதைக் கண்ட சிவபெருமான் மனம் வருந்திக் கோயிலிலே இருக்கின்ற பிராமணர்களின் கனவிலே தனித்தனியாகத் தோன்றி; "எனது மைந்தன் என்னைத் தரிசிக்கக் கால் நடையாக வருகின்றான். அவனது பொற்பாதங்கள் புண்ணாகி விட்டன. நீங்கள் முத்துச்சிவிகையும் முத்துக்குடையும் முத்துச்சின்னங்களையும் நம்மிடத்திலே வந்து எடுத்துச் சென்று அவனை அழைத்து வாருங்கள்" என்று சொல்லி மறைந்தார்.

விழித்தெழுந்த பிராமணர்கள் கோயிலுக்குள்ளே சென்றபோது அங்கே முத்துச்சிவிகையும் முத்துக்குடையும் முத்துச்சின்னங்களும் இருந்தன. அவற்றை எடுத்துச் சென்ற பிராமணர்கள் திருஞானசம்பந்த மூர்த்திநாயனாரைச் சந்தித்து நடந்தவற்றைச் சொல்லி அவரை முத்துச்சிவிகையில் ஏற்றி முத்துக்குடை பிடித்துச் சுமந்து வந்தனர். திருஞான சம்பந்தர் கோயிலை அடைந்து சிவனை வணங்கிப் பதிகம் பாடினார்.

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தமிழ் நாட்டில் உள்ள அனைத்துச் சிவத்தலங்களையும் தரிசிக்க எண்ணி முத்துச்சிவிகையில் ஒவ்வொரு தலமாகச் சென்று கொண்டிருந்தார்.

மழலை நாட்டிலே வாழ்ந்த கொல்லி மழவன் என்ற சிவனடியார் தனது மகளுக்கு முயலகன் என்ற மாறாத நோய் வந்தமையால் வருத்தமுற்றுத் திருப்பாச்சிலாக் கிராமத்தில் உள்ள சிவத்தலத்தில் அவளைக் கொண்டு சென்று விட்டுத் தானும் இருந்து பரமசிவனைத் தொழுது கொண்டிருந்தான். முத்துச்சிவிகையில் வந்த திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், முத்துச்சிவிகையால் இறங்கிக் கோயிலுள்ளே சென்றபோது ஒரு கன்னிப் பெண் அறிவு கெட்டு நிலத்திலே கிடப்பதைக் கண்டார்.

அவளுக்குக் கிட்டச் சென்ற திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், அவளின் நோயைக் கண்டு இரங்கி சுவாமியை வணங்கி; "துணிவளர் திங்கள்" என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். பதிகம் பாடி முடிந்ததும் அப் பெண் நோய் நீங்கி எழுந்தாள். அதைக்கண்ட கொல்லி மழவன் மகிழ்ந்து திருஞானசம்பந்தரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். அவனது புத்திரியும் விழுந்து வணங்கினாள்.

அதன் பின் திருக்கொடி மாடச் செங்குன்றூருக்குச் சுவாமி தரிசனம் செய்ய அடியார் கூட்டத்துடன் திருஞான சம்பந்தர் சென்றார். அங்கே தங்கியிருக்கும் போது மழைக்காலம் முடிவடைந்து பனிக்காலம் தொடங்கியது. அதனால் அடியார்கள் சனிச்சுர நோயால் பீடிக்கப்பட்டு மிகவும் வருந்தினார்கள். அதைக்கண்டு மனம்வருந்திய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் இறைவனிடம் முறையிட்டுச் சனிச்சுரத்தை நீக்கியருளுமாறு வேண்டி " அவ்வினைக் கிவ்வினை" என்னும் திருநீலகண்டப் பதிகத்தைப் பாடினார். உடனே சிவனடியார்களுக்கு மட்டுமன்றி அந் நாட்டில் உள்ள அனைவரையும் வாட்டிய பனிப்பிணி அகன்றது.

அடியார் கூட்டத்துடன் திருஞான சம்பந்தர் திருச்சக்தி முற்றத்துச் சிவனைத் தரிசித்துக் கொண்டு திருப்பட்டீச்சரத்திற்குச் சென்றார். அப் பொழுது பகற்காலமா தலால் வெய்யில் சுட்டெரித்தது. திருஞான சம்பந்தரும் அடியார்களும் வெய்யில் கொடுமையால் துன்பப் படுவதைக் கண்ட சிவபெருமான் சிவபூதங்களை அனுப்பி அவர் வரும் பாதை முழுவதற்கும் முத்துப்பந்தல் அமைத்து வெய்யிலைத் தடுப்பித்தார்.

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருவாவடுதுறையிலே சுவாமி தரிசனம் செய்து கொண்டிருக்கும் நாளில் ஒரு நாள் சிவபாத விருதையர் தனது மகனின் அருகே சென்று; " நான் யாகம் ஒன்றைச் செய்ய விரும்புகிறேன். அதற்கான பொருளைத் தரல் வேண்டும்"என்று சொன்னார்.

அதைக்கேட்ட திருஞான சம்பந்தர் இறைவனை வணங்கி "இடரினும் தளரினும்" என்ற திருப்பதிகத்தை பாடினார். அப்பொழுது பரமசிவனது திருவருளினாலே ஒரு பூதம் அங்கு வந்து பீடத்திலே ஆயிரம் பொன்னைக் கொண்ட ஒரு முடிச்சை வைத்து விட்டு மறைத்தது.

சிவத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு வந்த திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தருமபுரத்தை அடைந்தார். அவ்வூர் திருநீல கண்டப்பெரும்பாணரது தாயார் பிறந்த ஊர். அதனால் திருநீல கண்டப் பெரும் பாணரது உறவினர்கள் அங்கு வந்து அவரையும் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரையும் தரிசித்து வணங்கினர்.

"திருநீலகண்டப் பெரும்பாணர் திருஞான சம்பந்த மூர்த்திநாயனாரின் பதிகங்களை யாழில் இட்டுப் பாடுவதால் உலகம் முழுவதும் இசை விளங்குகிறது" என்று திருநீலக் கண்டப் பெரும்பாணரது சுற்றத்தவர்கள் சொன்னார்கள்.

அதைக்கேட்டுப் பதை பதைத்த திருநீல கண்டப் பெரும் பாணர் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரிடம் சென்று; "சுவாமி திருப்பதிக இசை யாழில் அடங்காத தன்மையை இவர்களும் உலகத்தில் உள்ள மற்றவர்களும் அறியும் பொருட்டு ஒரு திருப்பதிகம் பாடி அருளல் வேண்டும்" என்று இரந்தார்.





திருஞான சம்பந்தர் பரமசிவனை வணங்கி; "மாதர் மதப்பிடி" என்னும் திருப்பதிகத்தைப் பாடப் பெரும் பாணர் அதை யாழில் இட்டு வாசித்தார். அப்பதிகம் யாழிலே அடங்கவில்லை. அதனால் மனம் வருந்தி, யாழ் வாசிப்பதை விட்டு எழுந்த பெரும்பாணர் சம்பந்தரை வணங்கிவிட்டு; "இந்த யாழ் தான் சுவாமி அருளிச் செய்த பதிகங்களை தன்னுள் அடக்குவேன் என்று மற்றவர்களைச் சொல்லப் பண்ணியது. அதனால் இதை உடைத்தல் வேண்டும்" என்று சொல்லி தன் கையில் இருந்த யாழை உடைக்க ஓங்கினார்.

உடனே சம்பந்தர் அதைத் தடுத்து; "அன்பரே நீ இந்த யாழை உடைப்பதால் என்ன பயன் உண்டாகும்.? எல்லாம் வல்ல எம்பெருமானின் சக்தி இந்த யாழுள் அடங்குமா ? யோசித்துப் பாரும். நீ இந்த யாழை உடையாது எம்பெருமானின் புகழை இயன்றவரை இவ்யாழில் இட்டு வாசியும்" என்றார். பெரும்பாணர் மகிழ்ந்து சம்பந்தரைத் தொழுதார்.

அதன் பின் திருமருகல் என்னும் சிவத்தலத்திற்கு அடியார்களுடன் திருஞான சம்பந்தர் சென்றார். அவ்வாலய மடத்தில் ஒரு வணிகன் கன்னி ஒருத்தியுடன் இரவைக் கழிப்பதற்காகத் தங்கியிருந்தான். அவன் நித்திரையாக இருந்த சமயம் நாகம் ஒன்று அவனைத் தீண்டியதால் அவன் மரணம் அடைந்தான் அக்கன்னிப் பெண் ஆலய வாசலில் வணிகனைக் கிடத்தி விட்டுப் புலம்பி அழுதாள்.

அவன் அழுவதைக் கண்ட திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் அவளின் அருகே சென்று; "நடந்தது என்ன?" என்று கேட்டார்.

"சுவாமி, வைப்பூரில் இருக்கின்ற தாமன் என்னும் பெயருடைய எனது தந்தைக்கு ஏழு புத்திரிகள் இருந்தனர். அவர்களில் என்னைத் தவிர மற்றய ஆறு பெண்களையும் தனது மருமகனான இவருக்கு விவாகம் செய்து கொடுப்பேன் என்று சொல்லிச் சொல்லி ஒவ்வொருவரையும் பணக்கார வணிகர்களுக்கு விற்று விட்டார். அதனால் இவர் மனத்துக்கம் அடைந்தார். இவரது மனவேதனையைப் போக்குவதற்காக எனது தந்தைக்குத் தெரியாமல் நான் இவருடன் புறப்பட்டு வந்து இரவு இம் மடத்தில் தங்கியபோது நாகம் தீண்டி இவர் இறந்து விட்டார்" என்றாள்.

திருஞான சம்பந்தர் விடம் நீங்கும் பொருட்டு திருமருகற் கடவுள் மேல், "சடையாயெனுமால்" என்னும் திருப்பதிகத்தைப் பாடி அருள வணிகன் உயிர் பெற்று எழுந்து சம்பந்தரை வணங்கினான். அப் பெண் மனம்மகிழ்ந்து சம்பந்தரின் பாதங்களைப் பற்றிப்பிடித்து வணங்கினாள்.

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அப்பருடன் சுவாமி தரிசனம் செய்து கொண்டு திருவீழிமிழலையில் இருந்தார். அப்போது மழையின்மையால் காவேரி நதி வற்றியது. அதனால் நாட்டில் பஞ்சம் உண்டாகியது. மக்கள் பசிக் கொடுமையால் அல்லற்பட்டனர். மக்கள் பசியால் துன்பப்பட்டதால் சிவனடியார்களுக்கு அமுதளித்து அவர்களின் பசித்துன்பத்தைப் போக்க இயலாது வருத்தமுற்றனர்.

இதனால் மிகவும் வருந்திய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் திருநாவுக்கரசு நாயனாரும் இறைவனிடம் முறையிட்டுவிட்டு படுத்துறங்கினார். அன்றிரவு இறைவன் அவர்களது கனவில் தோன்றி; "மழை பெய்யாமையால் நாட்டில் பஞ்சம் தலைதூக்கியுள்ளது. மக்களும் சிவனடியார்களும் படும் துன்பத்தைக் கண்டு நீவிர் இருவரும் கவலைப் படுவதால் இன்றுமுதல் இக்கொடிய பஞ்சம் நீங்கும் வரைக்கும் கோயிலின் கிழக்குப்பீடத்திலும் மேற்குப்பீடத்திலும் ஒவ்வொரு காசு உங்களுக்குத் தருகிறோம்". என்று சொல்லி மறைந்தார்.

விழித்தெழுந்த நாயன்மார் இருவரும் கிழக்குப்புறமாக உள்ள பீடத்திற்குச் சென்றனர். பீடத்திலே காசு இருக்கக் கண்டு மிகவும் மகிழ்ந்து இறைவனை வணங்கினர். கிழக்குப்பீடத்தில் உள்ள காசை சம்பந்தர் எடுத்தார். பின் மேற்குப்பீடத்திற்கு இருவரும் சென்றனர். மேற்குப்பீடத்திலும் காசு இருந்தது. அதை அப்பர் எடுத்தார். பின் இருவரும் மக்களையும் சிவனடியார்களையும் அழைத்து உணவளித்தனர்.

அப்பரது மடத்தில் நேரத்துடன் உணவு கொடுக்கப்பட்டது. ஆனால் சம்பந்தரின் மடத்தில் உணவுகொடுப்பது சற்றுத் தாமதம் ஆகியது. அதனால் கவலை கொண்ட சம்பந்தர் மடத்திற்குப் பொறுப்பானவர்களை அழைத்து: "ஏன் நீங்கள் அடியவர்களுக்கு உணவைத் தாமதமாகக் கொடுக்கிறீர்கள்" என்று கேட்டார்.

அதற்கு அவர்கள்; "தேவரீர் தாங்கள் கடவுளிடம் பெறும் படிக்காசைத் தினமும் பண்டம் வாங்குவதற்குக் கொண்டு சென்றால் வாசி கேட்கிறார்கள். அப்பர் மூர்த்தியின் காசுக்கு வாசி கேட்பதில்லை" என்றனர்.

அதைக்கேட்ட சம்பந்தர் இறைவனை வேண்டி; "வாசிதீரவே காசுநல்கிமீர்" என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். அதன் பின் கிழக்குப்புறப்பீடத்தில் இறைவன் வைத்த காசுக்கு வணிகர் வாசி கேட்பதில்லை.

அப்பரும் சம்பந்தரும் சிவத்தலங்கள் பலவற்றைத் தரிசித்து இறைவனை வணங்கிக் கொண்டு வேதாரணியத்தை அடைந்தனர். வேதாரணியக் கதவு பல வருடங்களாக மூடப்பட்டிருந்தது. அதை அறிந்த அப்பரும் சம்பந்தரும் இறைவனை வணங்கினர். சம்பந்தர் பதிகம் பாட அக்கதவு திறந்தது. பின் அப்பர் பதிகம் பாட அக்கதவு மூடப்பட்டது அதன் பின் அக்கதவு காலையில் திறக்கப்பட்டு மாலையில் மூடப்பட்டது. அதனால் அடியவர்கள் உள்ளே சென்று சுவாமி தரிசனம் செய்தனர்.

பாண்டிய மன்னன் சமணத் துறவிகளின் துர்ப்போதனைகளால் கவரப்பட்டு சத்திய மார்க்கமான சைவத்தை விட்டு சமணசமயத்தில் சேர்ந்தான் "அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி" என்ற பழமொழிக்கிணங்க மக்களும் சமண சமயத்தில் சேர்ந்தனர். எனினும் அவனது மனைவியான மங்கையற்கரசியாரும் மந்திரியான குலச்சிறை நாயனாரும் சைவத்தின் பெருமையை உணர்ந்திருந்தமையால் அவர்கள் சிவபெருமானை வணங்கி தமது துயரைத் தீர்க்கும்படி கேட்டனர்.

வேதாரணியத்தில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் தங்கியிருக்கின்றார். என்ற செய்தியை அறிந்த குலச்சிறை நாயனார் அதை மங்கையற்கரசியாருக்குச் சொன்னார். ஞானசம்பந்தரின் பெருமைகளைக் கேள்விப்பட்டிருந்த மங்கையற்கரசியார் ஏவலாளர்கள் இருவரை அழைத்து திருஞான சம்பந்தரிடம் அனுப்பினார்.

ஏவலாளர்கள் வேதாரணியத்தை அடைந்து சம்பந்தரைக் கண்டு வணங்கி; "சுவாமி நாம் பாண்டிய நாட்டு அரசியாரின் தூதுவர்களாக வந்துள்ளோம். எமது அரசன் சமணர்களுடைய துர்ப்போதனைகளை உண்மையென நம்பி மெய்ச்சமயமான சைவத்தில் இருந்து நீங்கிச் சமணசமயத்தைத் தழுவிக் கொண்டான். அதனால் பட்டத்தரசியான மங்கையற்கரசியாரும் மந்திரியான குலச்சிறை நாயனாரும் மிகவும் வேதனைப் படுகின்றனர். அவர்களின் துயரைத்தீர்க்கத் தாங்கள் பாண்டிய நாட்டிற்கு வருகை தரல் வேண்டும்" என்றார்.

"கவலைப்படாதீர்கள் உங்கள் அரசியாரினதும் மந்திரியாரினதும் குறையைத் தீர்க்க விரைவில் பாண்டிய நாட்டிற்கு வருவேன் என்று அரசியாருக்கும் மந்திரியாருக்கும் கூறுங்கள்" என்றார் சம்பந்தர்.

ஏவலாளர்கள் மகிழ்வுடன் சம்பந்தரை வணங்கிப் பாண்டிய நாட்டிற்குச் சென்றனர். அப்பொழுது அப்பர்; "தேவரீர, தாங்கள் சிறுபிள்ளை. சமணர்கள் மிகவும் கொடியவர்கள். எண்ணில் அடங்காத கொடிய தீமைகளைச் செய்வார்கள். எனவே, தாங்கள் பாண்டிய நாட்டிற்குச் செல்வது நல்லதல்ல" என்றார்.

"பரமசிவன் என்சிந்தையுள் இருப்பதால் எனக்கு எந்தக்கேடும் வராது. அப்பரே, நீர் பயம் கொள்ள வேண்டாம்". என்று கூறி; "வேயுறு தோளி பங்கன்" என்னும் கோளாறு பதிகத்தைப் பாடினார். அத்திருப்பதிகத்தைக் கேட்ட அப்பர் மனம்தெளிந்து சம்பந்தர் பாண்டிய நாட்டிற்குச் செல்ல விருப்பம் தெரிவித்தார்.

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாண்டிய நாட்டிற்கு முத்துச்சிவிகையில் அடியார்கள் புடைசூழ வருகிறார் என்று கேள்விப்பட்ட மங்கையற்கரசியார், குலச்சிறை நாயனாரை அழைத்து சம்பந்தரை எதிர் கொண்டு வரவேற்று அழைத்து வருமாறு கூறினார்.



திருச்சிற்றம்பலம்

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாண்டிய நாட்டிற்கு முத்துச்சிவிகையில் அடியார்கள் புடைசூழ வருகிறார் என்று கேள்விப்பட்ட மங்கையற்கரசியார், குலச்சிறை நாயனாரை அழைத்து சம்பந்தரை எதிர் கொண்டு வரவேற்று அழைத்து வருமாறு கூறினார்.

குலச்சிறை நாயனார் சம்பந்தரை அவ்வூராலய மடத்தில் சந்தித்து வணங்கி, அங்கே அவர்கள் தங்குவதற்கான வசதிகள் அனைத்தையும் செய்து கொடுத்து விட்டு அரச மாளிகைக்குச் சென்றார்.

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் ஆலய மடத்தில் வந்து தங்கியிருப்பதை அறிந்த சமணர்கள் அரசனிடம் ஓடிச் சென்று; "அரசே, தோணியப்பரின் ஆலயத்தில் உமாதேவியாரிடமிருந்து ஞானப் பாலை உண்ட சிறுவன் ஒருவன் எமது சமயத்தை அழிப்பேன் என்று சபதம் இட்டு வந்து மடத்தில் தங்கியுள்ளான். அவனையும் அவனுடன் கூட வந்தவர்களையும் அரண்மனைக்குள் வரவிடக் கூடாது. எனவே, அந்த ஆலய மடத்தை இரவு தீ வைத்துக் கொழுத்துவோம்" என்றனர்.

அரசன் அதற்கு உடன் பட்டான். அன்றிரவு சமணர்களால் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும் அடியார்களும் தங்கியிருந்த மடம் தீக்கிரையாக்கப்பட்டது. அதைக்கண்ட சம்பந்தர் இறைவனைத் தொழுது; "செய்யனே திருவாலவாய்" என்ற திருப்பதிகத்தைப் பாடி "அமணர் கொளுவுஞ் சுடர் பையவே சென்று பாண்டியற்காகவே" என்று முடித்தார். திருப்பதிகம் பாடி முடித்ததும் அக்கினியின் வெம்மை பாண்டியனைச் சென்றடைந்து வருத்தத் தொடங்கியது.

பாண்டியன் வெப்புநோயினாலே மிகவும் வருந்தினான். சமணர்கள் வந்து தமது சமய முறைப்படி வைத்தியம் செய்தும் மந்திரித்தும் பார்த்தனர். அதனால் நோய் அதிகரித்ததே தவிரக் குறையவில்லை அதனால் கோபமுற்ற பாண்டிய அரசன்; "நீங்கள் செய்த வைத்தியம் எதுவும் இதுவரை பயனளிக்கவில்லை. மந்திரம் ஜெபித்தும் குணமாகவில்லை. எனவே இவ்விடத்தை விட்டு சென்று விடுங்கள்" என்று கூறி மயக்கம் அடைந்தான்.

பாண்டிமா தேவி பயந்து குலச்சிறை நாயனாரை நோக்கி; "இரவு சமணர்கள் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருக்குச் செய்த கொடுமை தான் அரசருக்கு நோயாக வந்து சேர்ந்து விட்டது. எனவே திருஞானசம்பந்தரால் தான் இந்நோய் நீங்கும்" என்றார்.

மயங்கிக்கிடந்த அரசனின் செவியுள் இவ்வார்த்தைகள் புகுந்தன. அதனால் மயக்கம் தீர்ந்து எழுந்த அரசன் மனைவியைப் பார்த்து; "என்னால் நோயின் கொடுமையைத் தாங்கமுடியவில்லை. விரைந்து சென்று சம்பந்தரை அழைத்து வாருங்கள். அவர் எனது நோயை தீர்த்தால் உடனே நான் சைவ சமயத்தவனாக மாறுவேன்." என்றான்.

மங்கையற்கரசியார் அது கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார். பின் சிவிகையில் ஏறிக் குலச்சிறை நாயனாருடன் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தங்கியிருக்குமிடத்திற்குச் சென்று அவரைக் கண்டு வணங்கினார். பின்பு; "சுவாமி, அறியாமையால் எனது கணவர் சமணர்களுடன் சேர்ந்து தங்களுக்குச் செய்த கொடுமைகளை மறந்து சைவ சமயம் வளரவும் சமணம் அழியவும் கிருபை செய்தல் வேண்டும். அத்துடன் எனது கண்வரை ஆட்டும் கொடிய வெப்பு நோயையும் நீக்கியருள வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தார்.

சம்பந்தர் மங்கையற்கரசியாரைக் கனிவுடன் நோக்கி; "அஞ்ச வேண்டாம். நான் சமணரை வாதில் வென்று பாண்டியனைச் சைவ சமயத்தவன் ஆக்குவேன்" என்றார்.

அதைக் கேட்டு மகிழ்ந்த மங்கையற்கரசியாரும் குலச்சிறை நாயனாரும் திருஞான சம்பந்தரின் பாதங்களைப் பணிந்து; "சுவாமி எங்களுடன் தாங்கள் அரண்மனைக்கு எழுந்தருளல் வேண்டும்". என்று சொல்ல, திருஞான சம்பந்தர் அதற்கு ஒப்புக் கொண்டார். மங்கையற்கரசியாரும் குலச்சிறை நாயனாரும் முன்னே செல்ல திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் சிவனடியார்களும் அவரின் பின்னே சென்று பாண்டிய மன்னனின் அரண்மனையை அடைந்தனர்.

அதனால் பயந்த மங்கையற்கரசியார் பாண்டியனின் அருகில் சென்று; "சுவாமி சம்பந்தர் சிறுபிள்ளை. சமணர்கள் பலர்; வயது வந்தவர்கள்; அவர்களால் அச்சிறுபிள்ளைக்கு ஆபத்து நேர்ந்தால் எமது குலத்திற்கே அவமானம்"என்று நடுங்கியபடி கூறினார்.

அதைக்கேட்டுச் சிரித்த ஞானசம்பந்தர்; "அன்னையே வீணாகப் பயப்பட வேண்டாம். எம்மையாளும் சிவன் என்னைக் கைவிட மாட்டான்" என்று கூறி "மானினேர் விழி மாதராய்" என்னும் திருப்பதிகத்தைப் பாடினார்.

அதைக் கேட்டு மகிழ்ந்த பாண்டியன்; "நீங்கள் என்னுடைய நோயைத் தீருங்கள். தீர்த்தவர் எவரோ, அவரே வாதில் வென்றவராவார்". என்றான்.

அதைக்கேட்ட சமணர்கள்; "மகாராஜாவே நாம் உமது உடலின் இடப்பக்கத்தில் உள்ள நோயைத் தீர்க்கிறோம். சம்பந்தர் வலப்பக்கத்து நோயைத்தீர்க்கட்டும்". என்று கூறி, அரசனின் இடப்பாகத்தை மயிர்ப்பீலியினால் தடவினார்கள். அரசனின் நோய் அதிகரித்தது. சம்பந்தர் வீபூதியை எடுத்து அரசனின் வலப்பாகத்தில் பூசிவிட்டு; "மந்திரமாவது நீறு"என்னும் திருநீற்றுப் பதிகத்தைப் பாடினார். உடனே மன்னனின் வலப் பாகம் குளிர்ந்து நோய் அகன்றது. இடப்பாகத்தில் நோய் அதிகரித்தமையால் வருந்திய பாண்டிய மன்னன் சம்பந்தரை நோக்கி; "சுவாமி, இடப்பாக நோயை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதையும் தாங்களே தீர்த்து வையுங்கள்" என்று இரந்தான். சம்பந்தர் வீபூதியை எடுத்து மன்னனின் இடப்பாகத்திலும் பூச இடப்பாகத்து நோயும் தீர்ந்தது. மன்னன் அளவில்லாத மகிழ்வுடன் சம்பந்தரைத் தொழுதான்.

சம்பந்தர் சமணர்களை நோக்கி; "உங்கள் சமய உண்மைகளை என்னுடன் வாதிக்கத் தயாரா?" என்று கேட்டார்.

அதற்குச் சமணர்கள்; "வாதிடத் தேவையில்லை; இரு சமய உண்மைகளையும் ஏட்டிலே எழுதித் தீயில் இடுவோம். எந்த ஏடு தீயில் எரியாமல் இருக்கிறதோ அந்த ஏட்டுக்குரிய சமயமே மெய்ச்சமயம் எனக் கொள்வோம்" என்றனர்.

சம்பந்தர் அதற்கு உடன்பட்டார். பின் இறைவனை வணங்கி தான் கொண்டு வந்த ஏட்டுக்கட்டை விரித்து அதிலிருந்து ஓர் ஏட்டை எடுத்தார். அதில்; "போக மார்த்த பூண் முலையாள்" என்னும் திருப்பதிகம் இருந்தது. சமணர்கள் ஓர் ஏட்டை எடுத்துத் தமது சமய உண்மைகளை அதில் எழுதினார்கள்.

மன்னரின் உத்தரவின் பெயரில் அரண்மனைக்கு வெளியே பெரும் தீமூட்டப்பட்டது. மக்கள் பலர் தீயைச் சுற்றி நின்றனர். திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தீயை வலம் வந்து ஏட்டை அத் தீயில் இட்டார். அவ்வேடு கொழுந்து விட்டெரியும் நெருப்பில் எரியாது பச்சைப் பசேல் என இருந்தது. சமணர்கள் தமது கடவுளை வணங்கித் தமது சமய உண்மைகளை எழுதிய ஏட்டைத் தீயில் இட்டனர். இட்ட மாத்திரத்தே அது தீயில் எரிந்து சாம்பரானது.

உடனே அரசன் சமணரைப் பார்த்து; "இனியும் இங்கே தங்கியிராது ஓடிச் செல்லுங்கள். எனது வெப்புநோயை நீக்கியமையாலும் ஏட்டைத் தீயில் இட்டபோது அது எரியாமையினாலும் சம்பந்தர் வாதில் வென்றவராவார் அத்துடன் சைவ சமயமே மெய்ச் சமயம்" என்றான்.

அதற்குச் சமணர்கள்; " முன்பு இருமுறை வாது செய்தோம். இன்னொரு முறை வாது செய்ய அனுமதித்தல் வேண்டும்" என்றனர்.

அதைக் கேட்ட பாண்டிய மன்னன் நகைத்து; "இனி என்னவாது செய்யப் போகிறீர்கள்" என்று கேட்டான்.





அதைக் கேட்ட பாண்டிய மன்னன் நகைத்து; "இனி என்னவாது செய்யப் போகிறீர்கள்" என்று கேட்டான்.

"இரு சமயத்தினரும் தத் தமது சமய உண்மைகளை ஏட்டில் எழுதிக் கங்கையாற்றில் இடுவோம். எந்த ஏடு பாயும் நீரை எதிர்த்துச் செல்கிறதோ அந்த ஏட்டைச் சார்ந்த சமயமே மெய்ச்சமயம்" என்று சமணர் கூறினர்.

அதற்குஉடன்பட்ட திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் வைகையாற்றங்கரைக்குச் செல்லத் தயாரானார். அப்பொழுது அரசன்; "இவ் வாதில் தோற்பவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும். என்ன தண்டனை வழங்கப்பட வேண்டுமென்று சமணரே சொல்லட்டும்" என்றான்.

"தோற்றவர்களைக் கழுவில் ஏற்றுங்கள்" என்று சமணர்கள் கூறினர். சமணர் எல்லோரும் வைகை ஆற்றங் கரையை அடைந்தனர். திருஞான சம்பந்தரைக் கண்டதும் வைகை நதி மகிழ்வுற்று பொங்கிப்பூரித்து அணை கடந்து பாய்ந்தது.

சமணர்கள் தாம் எழுதிய ஏட்டைத் தமது கடவுளை வணங்கி வைகையாற்றில் இட்டனர். இட்ட மாத்திரத்தே அது வெள்ளத்தில் அடிபட்டு கடலை நோக்கித் தலை கீழாக உருண்டு புரண்டு சென்றது. சமணர்கள் செய்வதறியாது கலங்கி நின்றனர்.

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், இறைவனை வணங்கி "வாழ்க அந்தணர்" எனும் திருப்பதிகத்தைப் பாடி, அதை ஏட்டில் எழுதி வைகை நதியில் இட்டார். அத்திருவேடு வைகை நதியை எதிர்த்துப் பாய்ந்துவரும் வெள்ளத்தைக் கிழித்துக் கொண்டு எதிர்த்திசையாகச் சென்றது. வைகையில் இட்ட ஏட்டில் "வேந்தனும் ஓங்குக" என்று ஞானசம்பந்தர் எழுதியமையால் நெடு நாட்களாகக் கூனியிருந்த பாண்டிய மன்னனது கூன் நீங்கியது.

மன்னன் சமணர்களைக் கழுவேற்றினான். மன்னன் சைவனானதும் மக்கள் எல்லோரும் அவனைப் பின்பற்றிச் சைவர்களாயினர். பாழடைந்த திருக்கோயில்களை மன்னன் புனருத்தாரணம் செய்து நித்திய பூசைகள் செய்வதற்கான ஒழுங்கினைச் செய்தான்.

பின் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் இராமேஸ்வரத்திற்கு வந்து அங்கே சில நாட்கள் தங்கியிருந்தார். அப்பொழுது ஈழமண்டலத்தில் கோயில் கொண்டிருக்கும் திருக்கோணேஸ்வரத்தானைப் பற்றியும் திருக்கேதீச்சரத்தானைப் பற்றியும் திருப்பதிகங்கள் பாடியருளினார்.

அதன் பின் திருஞான சம்பந்தரும் சிவனடியார்களும் திருத்தெளிச் சேரியை அடைந்து சுவாமியை வணங்கிவிட்டுச் செல்லும் போது பதிகங்கள் பாடிக் கொண்டும்; சங்கு ஊதிக்கொண்டும்; மேளங்கள் அடித்துக் கொண்டும்; சென்றனர். அவ்வழியில் ஒரு பௌத்தத்தலம் இருந்தது. அங்குள்ளவர்கள் அம்மங்கல ஒலியைக் கேட்டு கோபித்துத் தமது மதத்தலைவரான புத்த நந்திக்குச் சொன்னார்கள். புத்தநந்தி கடும் கோபத்துடன் வந்து சிவனடியார்களைத் தாக்கினார். அதைப் பொறுக்க முடியாத திருஞான சம்பந்தர் இறைவனை நினைத்துப் பதிகம் பாடி; "புத்த நந்தியின் தலையில் இடிவிழக்கடவது" என்றார். உடனே வானத்தில் இடியிடித்து புத்த நந்தியின் தலைமேல் விழுந்தது. இதைக் கண்டு பயந்தோடிய பௌத்தர்கள் தமது குருவான அரிபுத்தருக்குச் சொன்னார்கள். அரிபுத்தன் சம்பந்தப் பெருமானைச் சந்தித்து வாதிற்கு அழைத்தான். சம்பந்தர் வாதிற்குச் சம்மதித்து அரிபுத்தனை வாதில் வென்றார்.

பின் திருஞான சம்பந்தர், அப்பர் சுவாமிகளைக் காணும் ஆசையால் திருப்பூந்துருத்திக்குச் சென்றார். அதைக் கேள்விப்பட்ட அப்பர் திருஞான சம்பந்தரைத் தேடி வந்து அடியாரோடு அடியாராகச் சேர்ந்து திருஞான சம்பந்தர் ஏறிவந்த முத்துச்சிவிகையைச் சுமந்து வந்தார். சம்பந்தர் திருப்பூந்துருத்திக்கு வந்து; "அப்பர் எங்குள்ளார். அழைத்து வாருங்கள்" என்று சொல்ல, அப்பர் அதைக்கேட்டு மகிழ்ந்து; "அடியேன்

அப்பருடன் சம்பந்தர் பல திருத்தலங்களுக்குச் சென்று பதிகம் பாடி வணங்கிக் கொண்டு திருவோத்தூருக்கு வந்தார். அத்திருத்தலத்தில் உள்ள சிவனடியாரின் தோப்பில் உள்ள பனைகள் எல்லாம் ஆண்பனைகளாகவே இருந்தன. அதனால் சமணர்கள் அவரை பரிகாசம் செய்தனர். அச்சிவனடியார் திருஞான சம்பந்தரை வணங்கி; "சுவாமி எனது தோப்பில் உள்ள பனைமரங்கள் யாவும் ஆண்பனைகளாகவே உள்ளன. அத்துடன் நான் நடும் பனைகளும் ஆண்பனைகளாகவே வளர்கின்றன. இதனால் என்னைச் சமணர்கள் பரிகசிக்கின்றனர். தேவரீர், எனது ஆண்பனைகளைக் காய்க்கச் செய்தருளல் வேண்டும்" என்று சொன்னார்.

சம்பந்தர் இறைவனை வணங்கி; "தேர்ந்தாயன்" என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். அப்பதிகத்தின் இறுதியில் "குரும்பை யாண்பனையீன் குலை போத்தூர்" என்று பாடினார். உடனே ஆண்பனைகள் எல்லாம் குரும்பைக் குலைகளையுடைய பெண்பனைகளாயின.

திருமயிலாப்பூரிலே சிவபக்தியிற் சிறந்தவரும் அடியார்களை மெய்யன்போடு உபசரித்து உணவளித்துக் காப்பவருமான சிவனேசர் என்னும் ஒரு பெரும் செல்வந்தர் வாழ்ந்து வந்தார். அவர் திருஞான சம்பந்தர் ஞானப் பால் உண்ட வரலாற்றையும் சமண சமயத்தவர்களோடு வாதில் வென்ற வரலாற்றையும் கேள்விப்பட்டு அவரின் மேல் பேரன்புடையவராக இருந்தார். அவருக்குப் பூம்பாவை என்னும் பெயருடைய அழகிய மகள் ஒருத்தி இருந்தாள். திருஞான சம்பந்தர் மீதிருந்த அளவில்லாத அன்பு காரணமாகச் சிவனேசர் தன்னையும் தனது திரவியங்களையும் தனது மகளையும் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருக்குக் கொடுப்பேன். என்று எல்லோருக்கும் சொல்வார்.

ஒரு நாள் பூம்பாவை நந்தவனத்திற்குத் தனது தோழிகளுடன் சென்று பூப்பறித்தாள். அப்பொழுது நந்தவனத்தில் மறைந்திருந்த பாம்பொன்று அவளைத்தீண்டியது. சிவனேசர் வைத்தியர்களை அழைத்து வந்து வைத்தியம் பார்த்தபோதும் அது பலிக்காததால் அவள் இறந்துவிட்டாள்.

துயர மிகுதியால் அழுது புரண்ட சிவனேசர் அவளது உடலைத் தகனம் செய்து, சாம்பரையும் எலும்புகளையும் ஒருகுடத்தில் இட்டுப் பாதுகாத்து வந்தார்.

ஒரு நாள் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருமயிலாப்பூருக்கு வந்தார். இதை அறிந்த சிவனேசர் அவரைச் சந்தித்துத் தனது துயர வரலாற்றை எடுத்துச் சொன்னார். அதைக் கேட்ட சம்பந்தர்; "உமது மகளினது எலும்பு நிறைந்த குடத்தைத் திருக்கோயிலின் வெளி வாசலுக்குக் கொண்டு வாரும்" என்றார்.

அதைக் கேட்டு மகிழ்ந்து வணங்கிய சிவனேசர், மகளின் எலும்பு நிறைந்த குடத்தைத் திருக்கோயிலின் வெளிவாசலிற் கொண்டு வந்து வைத்தார். அதன் அருகில் வந்த திருஞான சம்பந்தர் இறைவனை வணங்கி; "மட்டிட்ட புன்னை"என்னும் திருப்பதிகத்தைப் பாடி; "பூம்பாவாய் எழுந்து வருவாய்" என்றார். உடனே பூம்பாவை மட்குடத்தில் இருந்து உயிர் பெற்று எழுந்து வந்து சம்பந்தரையும் சிவனேசரையும் வணங்கினாள். தேவர்கள் பூமாரி சொரிந்தனர். அடியார்கள் குதூகலித்து ஆனந்தக் கூத்தாடினர்.

சம்பந்தரை வணங்கிய சிவனேசர்; "அடியேன் பூம்பாவை பிறந்தன்றே தங்களுக்குரியவள் என்று நிச்சயித்து விட்டேன். ஆகையால் தாங்கள் அவளைத் திருமணம் செய்தல் வேண்டும்" என்று சொன்னார்.

"சிவனேசரே, உமது மகள் என்றோ இறந்து விட்டாள். இப்பொழுது இவள் எனது மகள்" என்றார் சம்பந்தர்.

அதைக்கேட்டு மகிழ்ந்த சிவனேசர் சம்பந்தரை வணங்கிவிட்டுப் பூம்பாவையை அழைத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்றார்.

சிவபாத விருதையரும் அவரது சுற்றத்தவர்களும் ஒன்று கூடித் திருநல்லூரில் இருக்கின்ற நம்பியாண்டார்நம்பி என்பவரின் புத்திரியைத் திருஞான சம்பந்தருக்குத் திருமணம் செய்து வைப்பதெனத் தீர்மானித்தனர். அதற்குச் சம்பந்தரும் ஒப்புக் கொண்டார்.





சுபதினம் ஒன்றில் திருஞான சம்பந்தருக்குத் திருமணம் நடைபெற்றது. தேவர்கள் பூமாரி சொரிய, பிராமணர்கள் மந்திரங்கள் ஓத, அடியார்கள் பஞ்சாட்சர மந்திரத்தைச் செபிக்க, சிவபெருமானும் உமாதேவியாரும் இடப வாகனத்தில் இருந்து வாழ்த்தத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருமாங்கல்யத்தைக் கட்டினார். பின் மனைவியோடு வேத விதிப்படி வளர்க்கப்பட்ட அக்கினியை வலம் வந்து "கல்லூர்ப் பெருமணம்" என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். அப்பொழுது கருணாநிதியான சிவபெருமான்; "நீயும் உனது மனைவியும் உனது திருமணச்சடங்கில் கலந்து கொண்டவர்களும் இச்சோதியிலே கலந்து நம்மை வந்தடையுங்கள்" என அருளிச் சோதிவடிவமாக நின்றார். சோதிவடிவாய் நின்ற சிவபெருமானை வணங்கிய திருஞான சம்பந்தர்; "காதலாகிக் கசிந்து" என்னும் திருப்பதிகத்தை பாடி; "இத்திருமணச்சடங்கில் கலந்து கொள்ள வந்தவர்கள் ஒவ்வொருவராகச் சோதியுட் புகுங்கள்" என்றார்.

திருமணச் சடங்கில் கலந்து கொள்ள வந்தோர் பெருமகிழ்வுடன் இறைவனை வணங்கி ஒவ்வொருவராகச் சோதியினுட் புகுந்தனர். இறுதியாகத் திருஞான சம்பந்தரும் மனைவியும் உட்செல்ல சோதி மறைந்தது.

## திருச்சிற்றம்பலம்

## ஏயர்கோன் கலிக்காம நாயனார்

சோழ நாட்டின் சேனாதிபதியான கலிக்காம நாயனார் திருப்பெரு மங்கலம் என்ற ஊரில் வாழ்ந்து வந்தார். அவர் சிவனடியார்களைச் சிவன் என நினைத்து அவர்களுக்கு எல்லாவிதமான தொண்டுகளையும் செய்து வந்தார்.

சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானைப் பரவையாரிடத்துத் தூது அனுப்பியதை அறிந்து அளவில்லாத கோபம் கொண்டிருந்தார். அதனை அறிந்த சுந்தரமூர்த்தி நாயனார் மிகவும் வருந்தி பரமசிவனுக்கு முறையிட்டார். இருவரையும் நண்பர்களாக்க விரும்பிய பரமசிவன் கலிக்காம நாயனாருக்குச் சூலை நோயை உண்டாக்கினார். கலிக்காம நாயனார் சூலை நோயால் மிகவும் வருந்தி, தனது நோயைத் தீர்க்குமாறு பரமசிவனிடம் இரந்து கேட்டார். அன்றிரவு கலிக்காம நாயனாரின் கனவில் தோன்றிய பரமசிவன் "கலிக்காமரே, உமது சூலை நோய் சுந்தரனாலன்றி வேறொருவராலும் தீராது" என்று அருளிமறைந்தார்.

சுந்தரமூர்த்தி நாயனார் தனது நோயைக் குணப்படுத்த வருகிறார் என்பதை அறிந்த கலிக்காம நாயனார் உடைவாளை எடுத்துத் தனது வயிற்றைக் கிழித்து மரணமானார். சுந்தரமூர்த்தி நாயனார் இதையறியாது கலிக்காமரின் வீட்டிற்கு வந்து அவரது மனைவியாரிடம் கலிக்காம நாயனாரைச் சந்திக்க வந்திருப்பதாகக் கூறினார். நடந்த சம்பவத்தைச் சொல்லத் தயங்கிய அவரது மனைவி; "எனது கணவர் உள்ளே நித்திரை செய்கிறார்" என்று கூறினார்.

நடந்த சம்பவத்தைத் திருவருளால் அறிந்த சுந்தரமூர்த்தி நாயனார் உள்ளே சென்று பார்த்தார். இரத்த வெள்ளத்தில் கலிக்காமநாயனார் இறந்து கிடந்ததைக் கண்டு கவலை கொண்டு, அங்கிருந்த உடைவாளை எடுத்துத் தானும் அதனால் உடலை வெட்டப் போனார். அவ்வேளை பரமசிவனது திருவருளினால் உயிர் பெற்று எழுந்த ஏயர்கோன் கலிக்காம நாயனார், சுந்தரரது கையைப் பிடித்தார். சுந்தரர் மனம்மகிழ்ந்து கலிக்காம நாயனாரை வணங்கினார். கலிக்காம நாயனாரும் சுந்தரரை வணங்கினார். பின் நெடுங்காலம் இருவரும் நண்பர்களாக இருந்தனர்.

## திருச்சிற்றம்பலம்

## திருமூல நாயனார்

திருக்கைலாய மலையிலே சிவபெருமானது முதற்பெரு நாயகரான திருநந்திதேவரது மாணவரான சிவயோகி ஒருவர் அகத்திய முனிவரைச் சந்தித்து, அவருடன் சில காலம் தங்கியிருப்பதற்காகப் பொதிய மலையை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். செல்லும் வழியில் காவிரி ஆற்றங்கரையிலே உள்ள புற்றரையிலே பசுக்கள் கூட்டமாகக் கூடிநின்றன. அவற்றின் கண்களிலிருந்து கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தது. சிவயோகியார் அங்கே சென்று பார்த்தார். அப்பசுக் கூட்டத்தை மேய்ப்பவனான மூலன் என்பவன் இறந்து கிடந்தான். பசுக்கள் அழுவதைத் தாங்கிக் கொள்ள முடியாத சிவயோகியார் தனது உடலைப் பாதுகாப்பான ஓர் இடத்தில் மறைத்து வைத்துவிட்டு, மூலனின் உடலுள் தனது உயிரைச் செலுத்தித் திருமூலராக எழுந்தார்.அவர் எழுந்ததும் பசுக்கள் யாவும் மகிழ்ந்து அவரைப் பாசத்தடன் நக்கின. மிகுந்த களிப்பினாலே துள்ளி விளையாடின.

மாலையானதும் பசுக்கள் தமது இருப்பிடங்களை நோக்கிச் சென்றன. சிவயோகியார் அப் பசுக்கள் யாவும் வீடுகளுக்குச் சென்ற பின் வீதியில் நின்றார்.

மூலனது மனைவி தனது கணவனைக் காணாமையால் அவனைத் தேடி வந்தாள். வீதியில் சிவயோகியார் மூலனது உருவில் நிற்பதை அறியாது அவரைத் தனது கணவன் என நினைத்து அவரின் அருகே சென்று, அவரைத் தொட்டு; "நாதா, ஏன் வீதியில் நிற்கிறீர்கள்? வீட்டுக்கு வாருங்கள்"என்று கூற சிவயோகியார்; "உனக்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்று கூறி அவ்வூர்த்தலத்திற்குச் சென்று சிவயோகத்தில் இருந்தார். பின் மறு நாள் பசுக்களை ஓட்டிச் சென்று புற்றரையில் மேயவிட்டு விட்டுத் தமது சரீரத்தை வைத்த இடத்தில் போய்ப்பார்த்தார். அதைக் காணவில்லை. அது இறைவனது செயலென நினைத்து இறைவனைத் துதித்தார். திருவாவடுதுறையை சென்று அடைந்தார். அங்குள்ள சிவாலயத்தின் மேற்குத்திசையில் நின்ற அரசமரத்தின் கீழே அமர்ந்தார். பலகாலம் சிவயோகத்தில் இருந்த திருமூலர் சைவ ஆகமங்களில் உணர்த்தப்பட்ட சரியை , கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களை உள்ளடக்கிய 'திருமந்திரம்' என்னும் நூலைப் பாடியருளினார்.

## திருச்சிற்றம்பலம்

## தண்டியடிகள் நாயனார்

சோழ நாட்டிலே திருவாரூரிலே தண்டியடிகள் என்றொரு சிவனடியார் வாழ்ந்து வந்தார். அவர் பிறவிக் குருடர். அவர் தமது மனதில் சிவபெருமானின் உருவத்தை நினைத்துப் பஞ்சாட்சர மந்திரத்தைத் தினமும் ஓதுவார். திருக்கோயிலைத் தினமும் வலம் வருவார்.

அவ் ஆலயத்தின் மேற்குப்புறத்தில் இருந்த திருக்குளத்தைச் சமணர்கள் சேதமாக்கினார்கள். இதனால் கவலை கொண்ட தண்டியடிகள் குளத்தின் நடுவே கம்பு ஒன்றை நட்டார். பின் கரையிலும் ஒரு கம்பை நட்டார். இரண்டு கம்பையும் கயிற்றினால் இணைத்தார். பின் மண்வெட்டியையும் கூடையையும் எடுத்து வந்து கயிற்றைத் தடவிச் சென்று மண்ணைக் கூடையிலே நிரப்பிக் கொண்டு சென்று கரையிலே போட்டார். இப்படிப் பல நாட்கள் செய்தமையால் குளம் ஆழமானது. இதைக்கண்டு பொறுக்கமுடியாத சமணர்கள் அவருக்குப் பல தொல்லைகளைச் செய்தனர்; "குருடரே, உமக்கேன் இந்த வேலை?" என்று பரிகசித்தனர்.

கோபம் கொண்ட தண்டியடிகள்; என்னைக் குருடன் என்று பழித்த உங்களின் கண்களைக் குருடாக்கி, நான் பார்வை பெற்றால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார்.

அதற்குச் சமணர்கள் சிரித்தவாறு; "நாம் இவ்வூரை விட்டு ஓடிவிடுவோம்" என்று கூறி அவரது கூடையையும் மண்வெட்டியையும் பறித்துத் தூர வீசி விட்டு, அவர் நட்ட கம்புகளையும் பிடுங்கி எறிந்தனர்.





தண்டியடிகள் கோபம் கொண்டு திருக்கோயிலின் வாசலை அடைந்து இறைவனை வணங்கி; "எம்பெருமானே, தேவரீரை நிந்தனை செய்து, அடியேனைச் சிவத்தொண்டு செய்ய விடாமற் தடுத்த சமணர்களைத் தண்டித்து, எனது கண்கள் பார்வை பெறவும், சமணர்களது கண்கள் குருடாகவும் அருள் செய்தல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

அன்றிரவு தண்டியடிகளின் கனவில் தோன்றிய பரமசிவன்; "அன்பரே, உமது துயர் தீரக்கப்படும்" என்று சொல்லி மறைந்தார். பின்பு சோழ அரசரின் கனவிற் தோன்றி; "தண்டியடிகளுக்குச் சமணர்கள் ஓயாது துன்பம் செய்கின்றனர். அவரது துயரத்தைத் தீர்த்து வைப்பாயாக" என்று அருளி மறைந்தார்.

சோழமன்னன் நித்திரை விட்டெழுந்து சென்று தண்டியடிகளைச் சந்தித்து; "சுவாமி தங்களின் துயரைப் போக்கி அருளும் படி பரமசிவன் எனக்குக் கட்டளை இட்டுள்ளார். நான் யாது செய்தல் வேண்டும்"என்று கேட்டு வணங்கினார்.

தண்டியடிகள் நடந்தவற்றை விளக்கமாகக் கூறினார். அரசன் சமணர்களை அழைத்தான் பின் தண்டியடிகளைப் பார்த்து;" தேவரீர், பரமசிவனது திருவருளாலே கண்ணைப் பெற்றுக் காட்டும்" என்றான்.

தண்டியடிகள் பரமசிவனை வணங்கிப் பஞ்சாட்சர மந்திரத்தை ஓதி; "இறவைா, அரசன் எதிரே நான் கண்பெறவும், இச்சமணர்கள் கண் இழக்கவும் அருளல் வேண்டும்" என்று வணங்கினார். உடனே தண்டியடிகளின் பார்வை இழந்த கண்கள் பார்வையைப் பெற்றன. சமணர்களின் கண்கள் குருடாயின.

சோழமன்னன் சமணர்களைச் சோழ நாட்டைவிட்டு வெளியேற்றுமாறு வீரர்களுக்குக் கூறினான். வீரர்கள் சமணர்களைத் துரத்தினார்கள். பார்வை இழந்த சமணர்கள் தட்டுத் தடுமாறி இடறிவிழுந்து அவ்விடத்தை விட்டு மிகவும் சிரமப்பட்டுச் சென்றனர்.

## திருச்சிற்றம்பலம்

## மூர்க்க நாயனார்

தொண்டை நாட்டிலுள்ள திருவேற்காடு என்னும் ஊரில் ஒரு சிவனடியார் வாழ்ந்து வந்தார். அவர் சிவனடியார்களுக்கு உணவளித்த பின்பு எஞ்சியவற்றைத் தான் உண்டு வந்தார். சிவனடியார்களுக்குத் தினமும் உணவிட்டமையால் அவரின் பொருட்கள் யாவும் முடிந்து விட்டன. அதனால் தனது நிலபுலங்களை விற்றுச் சிவனடியார்களுக்கு உணவு படைத்து வந்தார். நிலபுலங்களை விற்ற பணம் முடிவடைந்தது. அதனால் அவர் சூதாடிவரும் பணத்தைக் கொண்டு அடியவாகளுக்கு உணவு கொடுத்து வந்தார். சூதாட மறுத்தவர்களை உடை வாளை உருவிக் குத்தியும் வெருட்டியும் சூதாட வைப்பார். இதனால் இவரை "மூர்க்கர்" என்று மக்கள் அழைத்தனர். இதனால் மூர்க்க நாயனார் என்னும் பெயரைப் பெற்றார். தன் வாழ்நாள் முழுவதும் சூதாடி அதன்மூலம் வரும் பொருளைக் கொண்டு சிவனடியார்களுக்கு அமுது படைத்துச் சிவபதம் அடைந்தார்.

## திருச்சிற்றம்பலம்

## சோமாசி மாற நாயனார்

சோழ நாட்டிலே உள்ள திருவம்பர் என்னும் ஊரிலே சோமாசி மாற நாயனார் என்றொரு சிவனடியார் வாழ்ந்து வந்தார். அவர் தினமும் பஞ்சாட்சர மந்திரத்தை ஓதுவார். சாதி பேதம் பாராது சிவனடியார்களைச் சிவன் என நினைத்துத் துதித்துவணங்கி உணவளித்துப் போற்றி வந்தார். அவர் திருவாரூர் சென்று சுந்தரமூர்த்தி நாயனாரைச் சந்தித்து வணங்கி அவரைப் போற்றி, அவர் செல்லும் திருத்தலங்கள் யாவற்றிற்கும் அவருடன் கூடச் சென்று வந்தார். சுந்தரமூர்த்தி நாயனாரைக் குருவாக ஏற்று சிவனடியார்க்குத் தொண்டு செய்து சிவபதம் அடைந்தார்.

## திருச்சிற்றம்பலம்

### சாக்கிய நாயனார்

திருச்சங்க மங்கையிலே சாக்கிய நாயனார் என்றொரு சிவனடியார் வாழ்ந்து வந்தார். அவர் உலகில் மெய்ச்சமயம் எதுவென்று உணர்வதற்காகப் பௌத்த சமயத்திலே சேர்ந்து அச் சமயத்தின் மூல நூல்கள் யாவற்றையும் கற்றுத்தேர்ந்தார்.. பின் சைவ சமய நூல்கள் அனைத்தையும் கற்றார். தனது ஆய்வின் படி மெய்ச்சமயம் சைவமே என்று உணர்ந்து கொண்டார். அவர் பௌத்த சமயத்தவனாக இருந்து கொண்டே பரமசிவனைத் தினமும் அன்போடு தியானம் செய்து வந்தார். அத்துடன் தினமும் சிவபூசை செய்யாமல் உணவு உண்ணக்கூடாது என்று நினைத்த சாக்கிய நாயனார், ஒரு வெளிப்பிரதேசத்திலே இருந்த சிவலிங்கத்தைக்கண்டு மகிழ்ந்து அச்சிவலிங்கத்தைத் தினமும் தரிசித்து பின்பே உணவை உண்டு வந்தார். ஒரு நாள் சிவலிங்கத்திற்கு அருகே இருந்த ஒரு செங்கல்லை எடுத்து சிவலிங்கத்திற்கு எறிய அக்கல் சிவலிங்கத்திற் பட்டுத் தெறித்தது. இப்படித்தினமும் சாக்கிய நாயனார் செங்கல்லால் சிவலிங்கத்திற்கு எறிந்து வந்தார்.

ஒரு நாள் சாக்கிய நாயனார் திருவருளினாலே சிவலிங்கத்தைத் தரிசிப்பதை மறந்து உணவை உண்டார். உண்ட பின்பு சாக்கிய நாயனாருக்கு அன்று தான் சிவலிங்கத்தைத் தரிசிக்காமையும் செங்கல்லால் எறியாமையும் அவருக்கு நினைவுக்கு வந்தது.

உடனே எழுந்து விரைவாகச் சென்ற சாக்கிய நாயனார் சிவலிங்கத்தைத் தரிசித்தார். பின் செங்கல்லை எடுத்துச் சிவலிங்கத்திற்கு எறிந்தார். அப்பொழுது சிவபெருமான் உமாதேவியாரோடு இடப வாகனத்தில் தோன்றி அவரைத் தன்னுடன் அணைத்துக் கொண்டார்.

## திருச்சிற்றம்பலம்

### சிறப்புலி நாயனார்

சோழ நாட்டில் உள்ள திருவாக் கூரிலே சிறப்புலி நாயனார் என்றொரு சிவபக்தர் வாழ்ந்து வந்தார். அவர் எந்நேரமும் பரமசிவனை நினைத்துப் பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரிப்பார்; சிவபூசை செய்வார்; யாகம் செய்வார்; சிவனடியார்களைக் கண்டால் அவர்களை வணங்கி இன்சொற் பேசி வீட்டிற்கு அழைத்துச் சென்று உணவும் உடையும் கொடுத்து உபசரிப்பார். சிறப்புலி நாயனார் தனது வாழ் நாள் முழுவதும் சிவனடியார்களுக்குத் தொண்டு செய்து சிவபதம் அடைந்தார்.

## திருச்சிற்றம்பலம்

### சிறுத் தொண்ட நாயனார்

சோழ வள நாட்டிலே திருச்செங்காட்டங் குடி என்னும் ஊரிலே பரஞ்சோதியார் என்றொரு சிவபக்தர் வாழ்ந்து வந்தார். அவர் வேத உபநிடதங்களை நன்கு கற்றவர். யானை ஏற்றம், குதிரையேற்றம் என்பவற்றைக் கற்றுத்தேர்ந்தவர். பரமசிவனின் திருவடிகளைத்தினமும் தொழுபவர்.

அரசன் போர் செய்யும் போது யானைப்படைக்கு அவரே தலைமை தாங்கிச் செல்வார். பல அரசர்களை வென்று அந் நாட்டுத் திரவியங்களை எல்லாம் கவர்ந்து வந்து அரசனிடம் கொடுப்பார். பகை அரசர்கள் 'பரஞ்சோதியார்' என்ற பெயரைக் கேட்டதும் நடுநடுங்குவார்கள்.

ஒரு நாள் சோழ அரசன் பரஞ்சோதியார் ஒரு சிவனடியார் என்று அறிந்து அவரை அழைத்து; "சுவாமி தாங்கள் பரமசிவனின் பக்தர் என்றறியாமல் போருக்குத் தலைமை தாங்கிச் செல்லவைத்துப் பல உயிர்களைக்





கொல்ல வைத்துவிட்டேன். அது மகா பாவம். அதைப் பொறுத்தருளல் வேண்டும்" என்று வணங்கினான். அரசர் தன்னை வணங்கு முன் அரசனை வணங்கிய பரஞ்சோதியார்; "அரசே, நான் எனது தொழிலுக்குரிய கடமைகளைத் தான் செய்தேன் அதில் தவறு ஏதுமில்லை" என்றார்.

"இது நாள் வரை நான் தங்களைப் பற்றி அறியாததால் போருக்குத் தங்களை அனுப்பினேன். இனி அப்படிச் செய்ய மாட்டேன். இனிமேல் நீர் பரமசிவனைத் தொழுது சிவனடியார்களுக்குத் திருத்தொண்டு செய்யும்" என்றான்.

அதற்குச் சம்மதித்த பரஞ்சோதியார் கணபதீச்சரம் சென்று அங்கு எழுந்தருளி இருக்கின்ற பரமசிவனை வணங்கித் திருத்தொண்டுகள் செய்து வந்தார்.

பெற்றோர்கள் 'நங்கையார்' என்னும் மங்கையைப் பரஞ்சோதியாருக்குத் திருமணம் செய்து கொடுத்தனர். அவர்களுக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. அதற்குச் சீரான தேவர் என்னும் பெயரிட்டு அன்புடன் வளர்த்து வந்தனர். பரஞ்சோதியார் தமது வீடு தேடி வரும் அடியவர்களை அன்புடன் அழைத்துச் சென்று கால்களை அழுக்கற்ற தூய நீரினால் கழுவிச் சுத்தமான சேலையால் கால்களைத் துடைத்து அவர்களுக்கு உணவளிப்பார். சிவனடியார்களின் முன் கைகட்டி வாய் பொத்தி மிகவும் சிறுமையுடையவராகப் பரஞ்சோதியார் நடந்து கொண்டமையால் அவரைச் 'சிறுத்தொண்டர்' என்று மக்கள் அழைத்தனர்.

சிவபெருமான் சிறுத்தொண்ட நாயனாரின் மெய்யன்பை உலகத்தவர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்பி வைரவருக்கு உரிய திருவேடம் பூண்டு சிறுத்தொண்ட நாயனாரின் வீட்டிற்குச் சென்றார். அவர் சென்ற போது, சிறுத் தொண்ட நாயனார் வீட்டில் இருக்கவில்லை. சிவனடியாரைக் கண்ட நங்கையார் மிக மகிழ்ந்து; "சுவாமி எனது கணவர் தினமும் சிவனடியார்களுக்கு உணவு கொடுத்த பின்பே தாம் உண்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார். இன்று சிவனடியார் எவரும் வீட்டுக்கு வராமையால் அவர்களைத் தேடிச் சென்றுள்ளார். நீங்கள் உள்ளே வந்து களைப்பாறுங்கள்" என்றார்.

அதற்கு வைரவர்; "பெண்கள் இருக்குமிடத்தில் நாம் தங்கமாட்டோம். நாம் சென்று கணபதீச்சரத்தில் உள்ள திருவாத்தி மரத்தின் கீழ் இருக்கின்றோம். உனது கணவன் வந்ததும் அதை தெரிவி"என்று சொல்லிவிட்டு அவர் சென்றுவிட்டார்.

சிவனடியார்களைத் தேடிச் சென்ற சிறுத்தொண்டர் சிவனடியார்கள் எவரையும் காணமையால் கவலையுடன் வீட்டுக்குத் திரும்பிவந்தார். அவர் வந்ததும் மனைவியார் சிவனடியார் வந்த விடயத்தைக் கூறினார். மனம் மகிழ்ந்த சிறுத்தொண்டர் கணபதீஸ்வரத்திற்குச் சென்றார். அங்கே திருவாத்தி மரநிழலில் அமர்ந்திருந்த சிவனடியாரைக் கண்டு வணங்கிய சிறுத்தொண்டர் "சுவாமி யான் இல்லாத வேளையில் வீட்டுக்கு வந்ததாக எனது மனைவி சொன்னார். தேவரீர் அடியேனின் வீட்டுககு வந்து உணவருந்தல் வேண்டும்" என்று பணிவுடன் கூறினார்.

"அன்பரே, நான் உத்தரதேசத்தவன். உம்மைக் காணவே வந்தேன். உம்மால் எமக்கு உணவளிக்கமுடியாது" என்றார்.

அதைக்கேட்டுப் பதைபதைத்த சிறுத்தொண்டர்; "உங்கள் விருப்பப்படி நான் உங்களுக்கு உணவளிப்பேன். எவ்வகையான உணவுகளைத் தாங்கள் உண்பீர்கள் என்பதைத் தெரியப்படுத்துங்கள்" என்றார். சிறுத்தொண்டர்.

"நான் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை ஒரு பசுவைக் கொன்று கறிசமைத்துச் சோற்றுடன் உண்பேன். பசுவைக் கொன்று உணவு படைக்க சிவனடியாரான உம்மால் முடியாது"என்றார் வைரவர்.

"என்னிடம் அனேக பசுக்கள் உள்ளன. ஒன்றைக் கொன்று நான் சமைத்துத் தருகிறேன்" என்றார். சிறுத்தொண்டர்.

"நாம்உண்பது நரபசுவையே. அது ஐந்து வயதினை உடையதாகவும், அங்கக் குறைவுகள் இல்லாததாகவும், அந்தக்குடும்பத்திற்கு ஒரேபுத்திரனாகவும் இருத்தல் வேண்டும். அப்பிள்ளையை மகிழ்வுடன் தாய்பிடிக்கத் தந்தை அரிதல் வேண்டும். அப்படிச்சமைக்கப்பட்ட கறியையே நான் உண்பேன்." என்றார் வைரவர்.

"மிகவும் மகிழ்ச்சி சுவாமி. நான் சமைத்து முடிந்ததும் இங்கு வந்து தங்களை அழைத்துச் செல்வேன்" என்று கூறிய சிறுத்தொண்டர் வீட்டுக்குச் சென்றார். வீட்டு வாசலில் கணவனின் வரவை எதிர்பார்த்திருந்த மனைவி, சிறுத்தொண்டர் மகிழ்வுடன் வருவதைக் கண்டு மகிழ்ந்து; "அடியவர் எங்கே.....?" என்று கேட்டாள்.

"ஒரு குடிக்கு ஒருபுத்திரனாக இருத்தல் வேண்டும். அவனுக்கு ஐந்து வயதாகவும் இருத்தல் வேண்டும். அங்கக் குறைவுகள் இருத்தல் கூடாது.அவனைப் பெற்ற தாய் மகிழ்வுடன் பிடிக்க தந்தை அறுத்துக் கறி சமைத்தால் தான் சிவனடியார் உண்பாராம். அப்படியான பிள்ளையைத் தேடிவருகிறேன்" என்று கூறிவிட்டுச் சிறுத் தொண்டர் புறப்பட்டார்.

"நாதா, சிவனடியார் கூறிய அம்சங்களையுடைய புத்திரனை எவ்வளவு திரவியங்களைக் கொடுத்தாலும் யாரும் தரமாட்டார்கள். தந்தாலும் மகிழ்வுடன் தாய்பிடிக்க எந்தத் தந்தை அரிய ஒப்புக் கொள்வான். எனவே எமது புத்திரனை அரிந்து கறிசமைத்துக் கொடுப்போம்" என்றாள்.

அதைக்கேட்டு மகிழ்ந்த சிறுத்தொண்டர் பாடசாலைக்குச் சென்று தனது மகனைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார். பின் தாயார் பிள்ளையின் கைகளை மகிழ்வுடன் பிடிக்க பிள்ளை மகிழ்வுடன் சிரித்தது. சிறுத்தொண்டர் மகிழ்வுடன் கத்தியை எடுத்து அதன் தலையை அரிந்து வைத்துவிட்டு மிகுதிஉடலைக் கறியாகச் சமைத்தார். பின் கணபதீஸ்சரம் சென்று திருவாத்தி மரத்தின்கீழ் இருந்த சிவனடியாரை அழைத்து வந்தார்.

வீட்டுக்கு வந்த சிவனடியாரின் காலைக் கழுவித் துடைத்து வணங்கிய சிறுத்தொண்டர், சிவனடியாரை உணவுண்ண வரும்படி அழைத்து வாழையிலையில் உணவைப் படைத்தார். கறியைப் பார்த்த சிவனடியார்; "தலையில் கறிசமைக்கவில்லையா? தலைக்கறிதான் எனக்குப்பிடிக்கும். தலைக்கறி இல்லாமல் சாப்பிட மாட்டேன்" என்று கூறி எழுந்தார்.

சிறுத்தொண்டர் பதைபதைத்து; "சுவாமி, தலைக்கறி உண்ணக்கூடாது என்பதற்காக நான் அதை ஒதுக்கி வைத்தேன். சிறிது நேரம் பொறுத்தருள்வீர்களானால் தலையைப் பாகம் பண்ணிச் சமைத்துத் தருவேன்" என்று கூறி உள்ளே சென்றார்.

தலையை சுத்தப்படுத்தி கறிசமைத்துக் கொண்டு வந்த சிறுத்தொண்டர் வாழையிலையில் படைத்துவிட்டு; "உண்ணுங்கள் சுவாமி" என்றார்.

"யாம் தனியே உணவுஉண்பதில்லை. சிவனடியார்களுடன் தான் உண்பேன். சிவனடியார்களை வெளியே சென்று அழைத்து வாரும்" என்றார்.

சிறுத்தொண்டர் வெளியே சென்று பலமணிநேரமாகச் சிவனடியார்களைத் தேடினார்.ஒருவரையும் காணவில்லை. அதனால் வீட்டுக்குத் திரும்பிவந்த சிறுத்தொண்டர், "சுவாமி சிவனடியார் எவரையும் காணவில்லை" என்று கலங்கினார்.

"பரவாயில்லை, நீரும் உமது மனைவியும் என்னோடு இருந்து சாப்பிடுங்கள்" என்றார் வைரவர்.

சிறுத்தொண்டரது மனைவி வாழையிலைகள் இரண்டை வைத்து அதில் உணவைப் படைத்துவிட்டுச் சாப்பிடுவதற்கு அமர்ந்தார். சிறுத்தொண்டர் சிவனடியாருக்கு அருகில் அமர்ந்தார். சோற்றுக்குள் கையை வைத்த வைரவர்;" சிறுத்தொண்டரே, பிள்ளைகள் இல்லாத வீட்டில் நான் உணவு அருந்தமாட்டேன்" என்றார்.





சிறுத்தொண்டர் சற்றுத் தடுமாறிய படி; "இப்பொழுது அவன் இங்கே வரமாட்டான்"எனறார்.

"அவன் வந்தால்தான் நான் உணவு உண்பேன். கூவிஅழையும்" என்றார் வைரவர்.

பரமசிவனை நினைத்துக் கொண்டு சிறுத்தொண்டர் வீட்டின் பிற்பக்கம் சென்று; "சீராளதேவா, சிவனடியார் ஒருவர் நீ இல்லாமல் உணவு உண்ண மறுக்கிறார். உடனே ஓடிவந்து அடியாரை உண்பித்து எமது துயரைப் போக்கு" என்று அழைத்தார். அப்பொழுது அவரது புத்திரன் பரமசிவனது பேருளின் மகிமையால் பாடசாலையில் இருந்து வருபவன் போல வந்தார். சிறுத்தொண்டர் மனம்மகிழ்ந்து, உரோமம் சிலிர்க்க ஓடிச்சென்று தனது மகனைத் தூக்கிக் கொண்டு வீட்டின் உள்ளே வந்தார். உள்ளே இருந்த சிவனடியாரைக் காணவில்லை. சிறுத்தொண்டர் ஒவ்வொரு இடமாகத் தேடிக் கொண்டிருந்தார். அப்பொழுது சிவபெருமான் உமாதேவியாருடனும் சுப்பிரமணிய சுவாமியுடனும் இடப வாகனத்தில் ஆகாயத்தில் தோன்றினார். சிறுத்தொண்ட நாயனாரும் அவரது மனைவியும் மகிழ்ந்து அவர்களை வணங்கினார்கள். சிவபெருமான் சிறுத்தொண்ட நாயனாரையும் அவரது மனைவியையும் மகனையும் அழைத்துக் கொண்டு திருக்கைலாய மலைக்குச் சென்றார்.

## திருச்சிற்றம்பலம்

## சேரமான் பெருமான் நாயனார்

கொடுங்கோளூரிலே சேரர்குடியில் பெருமாக் கோதையர் என்றொரு சிவனடியார் இருந்தார். அவர் திருநந்தவனம் அமைத்தல், பூக்களைப் பறித்தல், திருமாலைகட்டல், திருவிளக்கிடுதல், திருமெழுக்கிடல், திருப்பாட்டுப் பாடுதல் ஆகிய திருத்தொண்டுகளைச் செய்து வந்தார்.

சோழமன்னரான செங்கோற் பொறையன் என்பவன் சிவபிரானின் மீதுள்ள அன்பின் நிமித்தம் அரசைத்துறந்து காட்டுக்குச் சென்று தபோவனம் அமைத்து அங்கு தங்கியிருந்தான். அரசன் இல்லாமையால் கவலை கொண்ட மந்திரி பிரதானிகள் பெருமாக்கோதையரிடம் சென்று அரச பொறுப்பை ஏற்கும்படி இரந்து கேட்டனர். "சிவனுக்குத் திருத்தொண்டு செய்வதே எனது தொழில்" என்று கூறி, பெருமாக் கோதையர் மறுத்துவிட்டார். அன்றிரவு அவரது கனவிற் தோன்றிய சிவபெருமான்; "அன்பனே, சேர நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று சிறப்பாக நடத்து. அதற்கான உதவிகள் யாவும் உனக்குக்கிடைக்கும்" என்று அருளிமறைந்தார்.

பெருமாக்கோதையர் ஒரு சுபதினத்திலே முடிசூடி சேரமண்டலத்திற்கு அரசனானார். ஒரு நாள் அவர் யானைமீது அமர்ந்து நகர்வலம் வந்தார். அப்பொழுது ஒரு வண்ணான் ஒரு உவர்மண்பொதியைத் தோளிலே சுமந்து கொண்டு வந்தான். சற்றுமுன் மழை பெய்தமையால் உவர்மண் கரைந்து அவனது மேலெங்கும் படிந்திருந்தது. அதைவீபூதி என்று நினைத்த சேரமான் பெருமான் நாயனார் யானையில் இருந்து இறங்கிச் சென்று அவனை நமஸ்கரித்தார். அதைக்கண்ட வண்ணான் பதைபதைத்து அவரின் காலடியில் வீழ்ந்து வணங்கினான்.

அங்கு கூடியிருந்தோர் சேராமான்பெருமான் நாயனாரின் சங்கம பக்தியைக் கண்டு மெய்சிலிர்த்தனர். சேரமான்பெருமான் நாயனார் தினமும் சிதம்பரத்தில் நடனமாடும் சபாநாயகரைத் துதிப்பார். சபாநாயகர், பூசைமுடிந்த பின்பு தனது சிலம்பை ஒலிக்கச் செய்வார். அதைக்கேட்டுச் சேராமான் பெருமான் நாயனார் மகிழ்வார்.

இப்படி இருக்கும் நாளிலே சோமசுந்தரக் கடவுள் தன்னை அன்போடு வணங்கித்துதிக்கும் பாணபத்திரனுக்குத் திரவியங்களைக் கொடுக்க விரும்பி, அவனது கனவிலே தோன்றி; "நான் உனக்குத் திரவியங்களைக் கொடுக்கும்படி சேரனுக்கு ஓலை தருகிறேன்" என்று அருளி மறைந்தார்.

மறு நாள் பாணபத்திரன் சிவபெருமானிடம் பெற்ற ஓலையைக் கொண்டு சென்று சேரமான் பெருமான் நாயனாரிடம் கொடுத்தார். நாயனார் பாணபத்திரனின் கால்களில் வீழ்ந்து வணங்கி அவரது கால்களைக் கழுவி, துடைத்து, ஈரம்போக்கி ஆசனத்தில் அமர்த்தினார். பின்பு தனது சேவகர்களை அழைத்து; "களஞ்சிய

சாலையில் உள்ள அனைத்துப் பொருட்களையும் வெவ்வேறாக மூட்டை கட்டி வாருங்கள்'' என்று சொன்னார். சேவகர்கள் களஞ்சியத்தில் உள்ள பொருட்கள் அனைத்தையும் வெவ்வேறாக மூட்டைகட்டிக் கொண்டு வந்து அரசனின் முன் வைத்தனர்.

"அடியவரே, சிவபெருமானின் சொற்படி யாவற்றையும் உமக்குத்தந்தோம். அத்துடன் அரசுப்பொறுப்பையும் ஏற்று நடத்தவேண்டும்'' என்றார்.

அதற்குப் பாணன்; "எம்பெருமான் எனக்குத் திரவியங்களைக் கொடுத்தருளும்படி எழுதியிருக்கிறார். அரசுப்பொறுப்பை நீரே வைத்திரும்'' என்று கூறி, அரசன் கொடுத்த திரவியங்களை யானைகளிலும் குதிரைகளிலும் ஏற்றிக் கொண்டு புறப்பட்டார்.

சேரமான் பெருமான் நாயனார் ஒருநாள் சிதம்பரத்தில் பூசை செய்தார். பூசை செய்து முடித்த பின் கேட்கும் சிலம்பொலி அன்று கேட்கவில்லை. அதனால் கவலை கொண்ட சேரமான் பெருமான் நாயனார் உடைவாளை உருவி தனது நெஞ்சிலே பாய்ச்ச ஓங்கினார். அப்பொழுது சபாநாயகர் சிலம்பை ஒலித்தார்.

"எம்பெருமானே, இவ்வளவு நாட்களும் பூசைமுடிந்ததும் சிலம்பை ஒலிக்கும் தாங்கள் இன்று தாமதித்து ஒலித்தது ஏனோ..?'' என்று கேட்டார்.

"அன்பனே, கனகசபையிலே வன்தொண்டனாகிய சுந்தரன் என்னை வணங்கிப் பதிகம் பாடினான். அதில் மெய்ம்மறந்து லயித்து விட்டோம்'' என்று சபாநாயகர் சொன்னார்.

பின் சுந்தரமூர்த்தி நாயனாரைத் தரிசிக்க விரும்பிய சேரமான் பெருமான் நாயனார், திருவாவூரை அடைந்து சுந்தரமூர்த்தி நாயனாரைத் தரிசித்து, வணங்கி, அவருடன் திருக்கோயிலுக்குச் சென்று வான்மீக நாதரை வணங்கி, மும்மணிக்கோவையைப் பாடினார்.

பின் இருவரும் இணைபிரியாத நண்பர்களாக இருந்தனர். ஒருநாள் சுந்தரமூர்த்தி நாயனார் வெள்ளை யானையில் ஏறி திருக்கைலாய மலைக்குச் செல்கிறார். என்பதை அறிந்த சேரமான் பெருமான் நாயனார், தனது குதிரையில் ஏறி அதன் காதில் பஞ்சாட்சர மந்திரத்தை ஓதினார். அக்குதிரை, சுந்தரர் சென்ற வெள்ளை யானைக்கு முன் சென்று திருக்கைலாய மலையை அடைந்தது.சேரமான் பெருமான் நாயனார் இறைவனை வணங்கி "திருக்கைலாய ஞான உலா"வினைப் பாடினார்.

## திருச்சிற்றம்பலம்

## கணநாத நாயனார்

சீகாழியிலே, கணநாத நாயனார் என்றொரு சிவனடியார் வாழ்ந்தார். அவர், தோனியப்பரின் மீது அளவில்லாத பக்தி கொண்டவர். தம்மை விரும்பி வந்து உதவிகோருவோருக்குத் தன்னாலான உதவிகளைச் செய்வார். அத்துடன் திருநந்தவனம்அமைத்தல், பூக்கொய்தல், திருமாலைகட்டுதல், திருமஞ்சனம் எடுத்தல், திருவலகிடல், திருமெழுக்கிடல், திருவிளக்கேற்றல், திருமுறைகளை எழுதுதல், திருமுறைகளை வாசித்தல் முதலான திருத்தொண்டுகளுள் அவரவர் விரும்பிய திருத்தொண்டுகளைப் பயில்விப்பார். திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரைத் தினந்தோறும் வழிபட்டு, அவர் பாடியருளிய திருப்பதிகங்களைப் பண்ணுடன் பாடுவார். அதன் பயனாகத் திருக்கைலாய மலையை அடைந்து, சிவகணங்களுக்குத் தலைவரானார்.





திருச்சிற்றம்பலம்

## கூற்றுவ நாயனார்

கனந்தை என்னும்ஊரில் கூற்றுவ நாயனார் என்றொரு சிவனடியார் இருந்தார். அவர் பஞ்சாட்சர மந்திரத்தை விதிப்படி உச்சரிப்பார். சிவனடியார்களை உபசரித்து அவர்களின் தேவைகள் அனைத்தையும் பூர்த்திசெய்பவர். அவர் தனது படைவலிமையால் பல நாடுகளைக் கைப்பற்றி, அங்கு கவர்ந்த திரவியங்களைத் திருக்கோயில்கள் கட்டவும், புனருத்தாரனம் செய்யவும், அடியார்களுக்கு உணவளிக்கவும் செலவு செய்து வந்தார்.

எல்லா நாடுகளையும் வென்ற கூற்றுவ நாயனார், அரசராக முடிசூட்ட விரும்பி, தில்லை வாழ்அந்தணர்களை அழைத்துத் தனக்கு முடிசூட்டி வைக்குமாறு விண்ணப்பம் செய்தார்.

"நாங்கள் சோழர் குலத்தவருக்கன்றி மற்றையோர்க்கு முடிசூட்ட மாட்டோம்''. என்று தில்லை வாழ் அந்தணர்கள் கூறினார்கள் அதனால் கவலை கொண்ட கூற்றுவ நாயனார் மனம் வருந்தி சபாநாயகரிடம் விண்ணப்பம் செய்தார். அன்றிரவு சபாநாயகர் அவரின் கனவிற் தோன்றி; "எமது திருவடியை உமக்கு முடியாகத் தந்தோம்'' என்று அருளி தனது திருவடிகளை கூற்றுவநாயனாரின் தலையில் வைத்து மறைந்தார். கூற்றுவ நாயனார் நித்திரை விட்டெழுந்து வணங்கி மகிழ்ந்தார்.

திருச்சிற்றம்பலம்

## புகழ்ச்சோழ நாயனார்

சோழ நாட்டில் உள்ள உறையூரின் அரசர் புகழ்ச் சோழ நாயனார். அவர் நீதி தவறாது தனது நாட்டை ஆண்டு வந்தார். திருக்கோயில்களைக் கட்டுதல் ,அங்கு தவறாது பூசைகளைச் செய்வித்தல் போன்றன அவரது முக்கியமான பணிகளாகும். சிவனடியார்களை வணங்கித்துதிக்கும் அவர் சிவனடியார்களின் குறிப்பறிந்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வார்.

ஒரு நாள் சிவகாமியாண்டார் என்னும் முதியவர் இறைவனுக்கு மாலை கட்டுவதற்காகக் கூடையில் பூப்பறித்துக் கொண்டு வந்தார். அப்பூக்கூடையைப் புகழ்ச் சோழ நாயனாரின் பட்டத்து யானை பறித்துச் சிந்திவிட்டது. அதனால் ஆத்திரம் கொண்ட எறிபத்த நாயனார், பட்டத்து யானையையும் பாகர்களையும் கொன்றார். இதைக்கேள்விப்பட்ட புகழ்ச்சோழ நாயனார் தனது உடைவாளை உருவி; "யானையை முறையாக வளர்க்காத என்னையும் கொல்லுங்கள்'' என்று சொல்லி எறிபத்த நாயனாரிடம் கொடுத்தார்.

அயல் நாட்டு அரசர்கள் புகழ்ச்சோழ நாயனாருக்குத் திறை செலுத்தி வந்தனர். அதிகன் என்ற குறுநில மன்னன் திறை செலுத்தவில்லை. அதனால் புகழ்ச்சோழ நாயனார் அவனைக் கைது செய்து வருமாறு படைகளை அனுப்பினார்.

அதிகன் போரிற் தோற்றமையால் ஒளித்துவிட்டான். படைவீரர்கள் அவனது நாட்டிலுள்ள அனைத்துத் திரவியங்களையும் கொண்டுவந்தனர். அத்துடன் போரில் இறந்த சிலரின் தலைகளையும் கொண்டு வந்தனர். புகழ்ச்சோழ நாயனார் போர்வீரர் கொண்டு வந்த பொருட்களைப் பார்வையிடும்போது, ஒரு தலையில் சிவனடியாரின் தலையைப்போன்று சடையிருந்தது. அதைக்கண்டு நடுங்கிய நாயனார் மனம் கலங்கி அழுதார்; "பரமசிவனின் அடியவர்களின் குறிப்பறிந்து உதவிகள் புரியும் நான் ஓர்அடியவரைக் கொன்று விட்டேன். இனி நான் உயிர்வாழக்கூடாது.எனது குமாரனுக்கு முடிசூட்டுங்கள்'' என்று கூறி அரண்மனை வாசலில் தீமூட்டி அதை வலம் வந்து பஞ்சாட்ச்சர மந்திரத்தை ஓதிக் கொண்டு தீயுட் சென்று பரமசிவனின் திருவடிநிழலை அடைந்தார்.

## திருச்சிற்றம்பலம்

### நரசிங்க முனையரைய நாயனார்

திருமுனைப் பாடி நாட்டின் அரசரான நரசிங்கமுனையரைய நாயனார், தனக்கும் தனது நாட்டிற்கும் பெரும் செல்வமாக விளங்குவது வீபூதியே என்று நினைத்து, வீபூதி பூசிவரும் அடியவர்களை அன்போடு அணைத்து அழைத்து வந்து ஆசனத்தில் இருத்தி உபசரிப்பார். சிவாலயங்கள் தோறும் நித்திய நைமித்தியங்களை ஒழுங்காக நடத்துவித்தார். திருவாதிரை நட்சத்திரம் தோறும் வரும் அடியார்களுக்கு உணவளித்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் நூறு பொன் கொடுப்பார்.

ஒரு திருவாதிரை நட்சத்திரத்திலே அடியார்களுக்கு அவர் பொன் கொடுக்கும்போது, அவலட்சணமான ஒருவன் கந்தல் உடை அணிந்து துர்நாற்றம் வீச, நெற்றியிலே திருநீறு அணிந்து வந்தான். அவனைக் கண்டவர்கள் அருகில் நிற்கமுடியாது அகன்று சென்றனர். நரசிங்கமுனையரைய நாயனார் அவனின் அருகே சென்று அவனைக் கட்டி அணைத்து, முத்தமிட்டு, கால்களில் விழுந்து வணங்கி அவனை அழைத்து வந்து ஆசனத்தில் இருத்தினார். பின்பு அவனது கால்களைக் கழுவிச் சுத்தம் செய்து, ஈரம் உலர்த்தி, உணவளித்தார். அவன் உணவு உண்டபின், அவனுக்கு இருநூறு பொன் கொடுத்தார். இப்படித் திருத் தொண்டு புரிந்த நரசிங்க முனைய்ரைய நாயனார், சில நாட்களின் பின் சிவபதம் அடைந்தார்.

## திருச்சிற்றம்பலம்

### அதிபத்த நாயனார்

நாகபட்டினத்தின், கடற்கரை ஓரத்தில் உள்ள நுளைப்பாடியூரிலே, அதிபத்த நாயனார் என்றொரு மீனவர் வாழ்ந்தார். அவரின் பண்புகளை அறிந்து மகிழ்ந்த மீனவர்கள் அவரைத் தமது தலைவராக நியமித்தனர். அங்கு வாழும் மீனவர்களுடன் கடலுக்குச் சென்று, வலைவீசி அதிபத்த நாயனார் மீன்பிடிப்பார். வலையில் அகப்பட்டும் நல்ல மீனை, இது பரமசிவனுக்கு என்று கூறிக் கடலில் விட்டு விடுவார். இப்படி இருக்கும் நாளிலே, தொடர்ந்து சில நாட்கள் ஒவ்வொரு மீனே அவரின் வலையில் அகப்பட்டு வந்தது. அதை எடுத்து 'இது பரமசிவனுக்கு' என்று சொல்லி அதிபக்த நாயனார் கடலில் விட்டுவிடுவார். இதனால் அவரது மனைவி, மக்கள் பல நாட்களாக உணவின்றி அவதிப்பட்டனர்.

ஒரு நாள் அவர் வீசிய வலையில் பொன்னாலான ஒரு மீன் அகப்பட்டது. அதை எடுத்து, அதிபத்த நாயனார் பார்த்தார். இரத்தினங்கள் பதிக்கப்பட்ட அம்மீன் அவரது கண்களைப் பறித்தது. விலை மதிக்க முடியாத அம்மீனைக் கண்டு அதிசயித்த அதிபத்த நாயனார்.; "இது நான் வணங்கும் பரமசிவனுக்கே உரியது" என்று நினைத்து, பரமசிவனைத் தியானித்து, பஞ்சாட்சர மந்திரத்தை ஓதி, அம்மீனைக் கடலில் விட்டார். அப்பொழுது பரமசிவன் பார்வதியாருடன் இடப வாகனத்தில் தோன்றினார். அதிபத்த நாயனார் மனம்மகிழ்ந்து வணங்கினார். பரமசிவன் அவரைத் தனது திருவடியிலே சேர்த்துக் கொண்டார்.

## திருச்சிற்றம்பலம்

### கலிக்கம்ப நாயனார்

திருப்பெண்ணாகத்திலே, கலிக்கம்ப நாயனார் என்றொரு சிவபக்தர் வாழ்ந்து வந்தார். அவர் சிவத்தலங்கள் தோறும் சென்று, இறைவனை வணங்கித் தொண்டுகள் பலவும் செய்து வந்தார்.; "சிவனடியார்களை உபசரிக்காது, சிவனைத் தொழுவதால் பயனில்லை என்று கூறிக் கலிக்கம்ப நாயனார் சிவனடியார்களை உபசரித்து, உணவளித்து, அவர்களுக்கு வேண்டிய திரவியங்களைக் கொடுத்து வந்தார்".

ஒரு நாள், தனது வீட்டிற்கு வந்த சிவனடியார்களை, அழைத்துச் சென்று ஆசனத்தில் இருத்தினார். பின்பு மனைவியை அழைத்து குடத்தில் நீர் கொண்டு வருமாறு கூறினார். அவரது மனைவியார் குடத்தில் நீர்





கொண்டு வந்து அடியவர்களின் கால்களுக்கு ஊற்ற, நாயனார் அவர்களின் கால்களைக் கழுவினார்.

சிவனடியார் கூட்டத்தில் இருந்த ஒருசிவனடியார், முன்பு கலிக்கம்ப நாயனாரின் வீட்டில் தொண்டுகள் செய்தவன் எனக் கண்டு கொண்ட கலிக்கம்ப நாயனாரின் மனைவி அவருக்கு நீர் ஊற்றாது; "சுவாமி இவர் முன்பு எமது வீட்டில் கூலிவேலை செய்தவர்" என்று சொன்னாள்.

சிவனடியார்களைச் சிவன் என்று எண்ணாது அவரது முன்னைய நிலையைக் கூறியதால் கோபம் கொண்ட கலிக்கம்ப நாயனார், உடைவாளை எடுத்து நீருற்றாது விட்ட தனது மனைவியின் கைகளைத் துண்டித்தார். பின்பு குடத்தில் நீர் கொண்டு வந்து, அச்சிவனடியாரின் கால்களைக் கழுவி; "அடியவரே, எனது மனைவி செய்த பெரும் குற்றத்தைப் பொறுத்தருளல் வேண்டும்". என்று இரந்து கேட்டார். தகுதி பாராது சிவனடியார்களை உபசரித்த கலிக்கம்ப நாயனார் சில காலத்தின் பின் சிவனடி சேர்ந்தார்.

## திருச்சிற்றம்பலம்

### கலிய நாயனார்

தொண்டை நாட்டிலே, திருவொற்றியூரிலே, கலியநாயனார் என்றொரு செல்வந்தச் சிவனடியார் இருந்தார். அவர் செல்வம் நிலையற்றது என்று உணர்ந்து, தன்னிடம் உள்ள செல்வம் அனைத்தையும் சிவ காரியங்களுக்குச் செலவு செய்து வந்தார். திருவொற்றியூரில் உள்ள திருக்கோயிலில் உள்ளும் புறமும் இரவும் பகலும் எண்ணிக்கையற்ற திருவிளக்குகளை ஏற்றி இறைவனை வழிபாடு செய்து வந்தார்.

நெடுங்காலமாக இத்திருத்தொண்டைச் செய்து வரும் கலியநாயனாரின் பக்திவலிமையை உலகிற்கு எடுத்துக் காட்ட விரும்பிய பரமசிவன், கலிய நாயனாரின் செல்வத்தை இல்லாது ஒழித்தார். கலியநாயனார் வறுமையுற்ற போதும் தனது இனத்தவர்கள் கொடுக்கும் எண்ணெயை வாங்கிச் சென்று திருவிளக்கு ஏற்றி வந்தார்.

காலப் போக்கில் இனத்தவர்களும் எண்ணெய் கொடுக்காமல் விட, எண்ணெய் ஆட்டும் இடத்திற்குச் சென்று அங்கு வேலை செய்து, கூலியாக எண்ணெயைப் பெற்றுச் சென்று ஆலயத்தில் திருவிளக்கேற்றி வந்தார். எண்ணெய் ஆலையில் தொழிலாளர்கள் அதிகமாக இருந்தமையால், எண்ணெய் ஆலையின் உரிமையாளர் கலியநாயனாரை வேலையில் இருந்து நீக்கினார். அதனால் கவலை அடைந்த கலிய நாயனார் தனது மனைவியை விற்பதற்காக அவளை அழைத்துக் கொண்டு அந்நகரில் உள்ள வீதிகள் எங்கும் சென்றார். அவரது மனைவியாரை எவரும் வாங்கவில்லை. அதனால் மனம்வருந்திய கலியநாயனார் கோயிலுக்கு வந்து. எண்ணெய்க்குப் பதிலாக தனது இரத்தத்தை விடும்பொருட்டுத் தனது கழுத்தை கூரிய் ஆயுதத்தால் அறுத்தார். அப்பொழுது சிவபெருமானும் உமாதேவியாரும் இடப வாகனத்தில் எழுந்தருளினார்கள். சிவபெருமான், கழுத்தை அறுக்கும் கலியநாயனாரின் கையைப் பிடித்தார். கலியநாயனார் மெய்சிலிர்த்து இறைவனை வணங்கி, அவரின் திருவடி நிழலை அடைந்தார்.

## திருச்சிற்றம்பலம்

### சத்தி நாயனார்

சோழ நாட்டிலே, வருஞ்சியூரிலே, சத்திநாயனார் என்றொரு சிவனடியார் இருந்தார். அவர் பரமசிவனது திருவடிகளை மறவாது, எவ்வேளையிலும் பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருப்பார்.சிவத்தலங்கள்தோறும் சென்று திருத்தொண்டுகள் பலவும் செய்வார். சிவனடியார்களில் பேரன்பு பூண்ட சத்திநாயனார், சிவனடியார்களைச் சிவனாகக்கருதி வணங்குவார். அவர், யாராவது ஒருவர் சிவனடியாரை இகழ்ந்து பேசினால், அவரின் நாக்கை கத்தியால் அரிந்து விடுவார். பல காலம் விருப்புடன் சிவத்தொண்டு செய்து, சிவபதம் அடைந்தார்.

## திருச்சிற்றம்பலம்

### ஐயடிகள் காடவர் கோன் நாயனார்

தொண்டை மண்டலத்திலே, காஞ்சிபுரத்திலே, பல்லவர் குலத்திலே, சைவத் திருநெறிப்படி அரசாளும் ஐயடிகள் காடவர் கோன் நாயனார் என்று ஓர் அரசர் இருந்தார். பெரும்வீரரான அவர், எல்லா உயிர்களும் பரமசிவனின் திருவருளைப் பெறுதல் வேண்டும் என்ற விருப்பத்தால், அயல் நாடுகளையும் கைப்பற்றி சைவ நெறிகளுக்கிணங்க ஆட்சிபுரிந்து வந்தார். சில காலம் சென்ற பின்பு அரசாட்சி துன்பம் எனக்கருதி தனது புத்திரனுக்கு முடிசூட்டிவிட்டுச் சிவத்தலங்களுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து வந்தார். தான் தரிசிக்கும் சிவத்தலங்களில் திருப்பணிகள் செய்து, பதிகம் பாடி, இறைவனைத் தொழுது, சிவபதம் அடைந்தார்.

## திருச்சிற்றம்பலம்

### கணம்புல்ல நாயனார்

இருக்கு வேளூரிலே, சிவபக்தியில் சிறந்த செல்வந்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சிவாலயத்துள்ளே திருவிளக்கேற்றி, தோத்திரங்கள் பாடி, இறைவனை வணங்குவார். நெடுங்காலமாகத் திருவிளக்கேற்றியமையால் அவரது செல்வம் கரைந்தது. வறுமையடைந்த அவர் தம்முடைய வீட்டில் உள்ள பொருட்களை விற்று, அங்குள்ள திருப்புலீச்சரம் என்னும் ஆலயத்திலே திருவிளக்கேற்றி வந்தார்.

வீட்டுப்பொருட்கள் யாவும் விற்றுமுடிந்த பின்பு அவர் கணம்புற்களை அரிந்து கொண்டு வந்து விற்று நெய்வாங்கி திருவிளக்கெரித்தார். அதனால் அவருக்குக் கணம்புல்ல நாயனார் என்ற பெயர் உண்டாயிற்று. ஒரு நாள் அவர் அரிந்து கொண்டு வந்த புற்கள் விற்பனை செய்யப்படவில்லை. அதனால் அன்று திருவிளக்கு எரிக்கமுடியாமல் போய்விடுமே என்று நினைத்து, தான் அரிந்து கொண்டு வந்த புற்களை எரித்தார். விடியும் வரை எரிப்பதற்குப் புற்கள் போதாமையால் தனது தலைமுடியை பிடுங்கி விளக்கில் வைத்து எரித்தார். அப்பொழுது பரமசிவன் பார்வதி தேவியாருடன் இடப வாகனத்தில் தோன்றி அவரையும் அழைத்துக் கொண்டு திருக்கைலாய மலையை அடைந்தார்.

## திருச்சிற்றம்பலம்

### காரி நாயனார்

திருக்கடவூரிலே, தமிழ் மொழியிலே மிகவும் பாண்டித்தியம் பெற்ற காரி நாயனார் என்னும் பெயரையுடைய சிவனடியார் ஒருவர் இருந்தார். அவர்; "தமிழ்க்கோவை" என்னும் நூலைப் பாடி சேர சோழ பாண்டிய மன்னரிடஞ் சென்று அதற்குப் பொருள் கூறி, மன்னர்களை மகிழ்வித்து, திரவியங்களைப் பெற்று வந்து சிவாலயங்கள் பலவற்றைக் கட்டினார். அத்துடன் சிவனடியார்களுக்கு உணவளித்து, வேண்டிய பொருட்களைக் கொடுத்து, உபசரித்தார். அதனால் மகிழ்ந்த சிவபெருமான் அவரைத் தன்னுடன் அழைத்துச் சென்று திருக்கைலாய மலையில் இருத்தினார்.

## திருச்சிற்றம்பலம்

### நெடு மாற நாயனார்

பாண்டிய மன்னனான கூன் பாண்டியன் சமணரது துர்ப்போதனைகளைக் கேட்டு, அதை நம்பி மெய்ச்சமயமான சைவசமயத்தை விட்டு நீங்கிச், சமண சமயத்தைத் தழுவினான். சைவ சிகாமணியான அவனது மனைவியாரினதும் சைவக்காப்பாளரான குலச்சிறை நாயனாரினதும் விருப்பத்திற்கு இணங்கத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வந்து நெடு மாற நாயனாருக்குத் திருநீறு கொடுத்து விட்டு அவரின் உடல்





எங்கும் பூசினார். உடனே அவனைப் பீடித்திருந்த சூலைநோய் மாறியது. கூனும்நிமிர்ந்தது. நெடுமாற நாயனார் எனப் பெயர் பெற்றார். பின் சிவதொண்டுகள் பல செய்து, சிவபதம் அடைந்தார்.

## திருச்சிற்றம்பலம்

### வாயிலார் நாயனார்

தொண்டை நாட்டிலே திருமயிலாப்பூரிலே வாயிலார் நாயனார் என்றொரு சிவபக்தர் வாழ்ந்தார். அவர் பரமசிவனை ஒரு போதும் மறவாது இருக்க, மனதிலே கோயில் கட்டி, அங்கு பரமசிவனை இருத்தி ஞானமாகிய திருவிளக்கை ஏற்றி ஆனந்தமாகிய திருமஞ்சனம் ஆட்டி, அன்பான திருவமுதைப் படைத்து, நெடுங்காலமாகப் பூசை செய்து சிவபதத்தை அடைந்தார்.

## திருச்சிற்றம்பலம்

### முனையடுவார் நாயனார்

சோழ நாட்டிலே, திருநீடூரிலே, சிவனடியார்கள் மீது அளவற்ற பக்தி கொண்ட போர்வீரர் ஒருவர் இருந்தார். அவர் எல்லாவிதமான யுத்தப் பயிற்சிகளையும் பெற்றிருந்தார். அரசர்கள், போர்முனையில் தோற்றால், அவரிடம் வந்து கூலிபேசி அவரை அழைத்துச் சென்று, தமது எதிரியுடன் போரிட வைப்பர். அவர் அவர்களுடன் போர் செய்து வென்று அதிலிருந்து பெறும் வருமானத்தைச் சிவனடியார்களுக்குக் கொடுப்பார்.; திருக்கோயில்களைக் கட்டுவிப்பார். அதனால் அவருக்கு முனையடுவார் நாயனார் என்ற பெயர் உண்டாயிற்று அவர் நெடுங்காலம் கூலிக்குச் சண்டை செய்து, அதில் இருந்து கிடைக்கும் பொருட்களை அடியவர்களுக்கு உணவளித்துச் சிவபதம் அடைந்தார்.

## திருச்சிற்றம்பலம்

### கழற்சிங்க நாயனார்

கழற்சிங்க நாயனார் என்றோர் அரசர் சோழநாட்டை ஆட்சி செய்து வந்தார். அவர் பரமசிவனது திருவருளின் வலிமையால் அயலில் உள்ள நாடுகளைப் போரில் வென்று அங்கெல்லாம் சைவசமயம் சிறந்தோங்கும்படி நல்லாட்சி செய்து வந்தார்.

அவர், ஒருநாள் மனைவியுடன் திருவாரூரை அடைந்து திருக்கோயிலினுள் புகுந்து சுவாமி தரிசனம் செய்து கொண்டிருந்தார். அவரது மனைவியார் கோயிலின் உள்வீதியை வலம் வந்து கொண்டிருந்தார். சுவாமிக்கு மாலை கட்டும் மண்டபத்திற்கு வெளியே உள்ள நிலத்தில் அழகானதொரு பூ விழுந்து கிடந்தது. அதில் இருந்து வீசிய நறுமணம் அவரின் மூக்கைத் துளைத்தது. ஆவலுடன் ஓடிச்சென்ற கழற்சிங்க நாயனாரின் மனைவி, அப்பூவை எடுத்து முகர்ந்து பார்த்தாள்.

சுவாமியைத் தரிசித்து விட்டு, வீதியை வலம் வந்த செருத்துணை நாயனார், கழற்சிங்க நாயனாரின் மனைவி சுவாமிக்கு மாலை கட்ட வைத்திருந்த பூவையே எடுத்து முகர்ந்து பார்க்கிறார். என நினைத்துக், கடும்கோபம் கொண்டு உடைவாளை எடுத்து அவளது மூக்கை அரிந்தார்.

அப்போது அவ்விடத்திற்கு வந்த கழற்சிங்க நாயனார் வாளை உருவி "யார் இந்தக் கொடுஞ் செயலைச் செய்தது?" என்று கர்ச்சித்தார்.

அதற்கு செருத்துணை நாயனார்; "சுவாமிக்கு மாலை கட்டவென வைத்திருந்த பூவை எடுத்து முகர்ந்ததமையால் நானே மூக்கை அரிந்தேன்" என்றார்.

அப்போது கழற்சிங்க நாயனார் கோபம் கொண்டு; "பூவை எடுத்தகையைத் தான் முதலில் வெட்டியிருக்க வேண்டும்". என்று சொல்லி உடைவாளால் தனது மனைவியின் கையை வெட்டினார். தேவர்கள் அவரின் பக்தியை மெய்சிப் பூமழை பொழிந்தனர். மேலும் பல காலம் சிவத்தொண்டு புரிந்த கழற்சிங்க நாயனார், பரமசிவனின் திருவடி நிழலை அடைந்தார்.

## திருச்சிற்றம்பலம்

### இடங்கழி நாயனார்

சேர நாட்டிலுள்ள கொடும்பாளுரை இடங்கழி நாயனார் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவர் கனகசபையின் முகட்டைச் செம் பொன்னிலால் வேய்ந்த அரச பரம்பரையைச் சேர்ந்தவர். அவர் சைவநெறி தழைப்பதற்காக அரும்பாடு படும் சிவனடியார்கள் மேல் அதிக விருப்புக் கொண்டு அவர்களுக்கு வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்து வந்தார். திருக்கோயில்களைப் புனருத்தாரணம் செய்து அங்கு நித்திய நைமித்திய பூசைகளைச் சிவாகம முறைப்படி செய்வித்து வந்தார்.

ஒரு நாள் சேரநாட்டின் நெற்களஞ்சியத்தில் ஒரு சிவனடியார் புகுந்து நெல்லை எடுக்கும் போது காவலர்கள் அவரைப்பிடித்து வந்து இடங்கழி நாயனார் முன்நிறுத்தினர். இடங்கழி நாயனார் அச்சிவனடியாரைப் பார்த்து; "சிவவேடம் தரித்த நீர் களவாக நெற்களஞ்சியத்தில் புகுந்து நெல்லைக் கவர்ந்ததன் நோக்கம் என்ன...?" என்று கேட்டார்.

"அரசே, என்னை நாடி வரும் சிவனடியார்களுக்கு உணவு கொடுக்காமல் நான் ஒரு போதும் விட்டதில்லை. இன்று எனது வீட்டிற்கு வந்த சிவனடியாருக்குக் கொடுக்க உணவுஇல்லாததால் தங்கள் நெற்களஞ்சியத்துட் புகுந்து திருடினேன்" என்றார் அச்சிவனடியார்.

அதைக்கேட்ட இடங்கழி நாயனார் மிகவும் வருந்தித் தனது நெற்களஞ்சியத்தில் உள்ள நெல் முழுவதையும் அச் சிவனடியாருக்குக் கொடுத்தார். அத்துடன் ஏராளமான திரவியங்களையும் கொடுத்தார். பின் நெடுங்காலம் சைவ நெறி தழைக்க அருந் தொண்டாற்றிச் சிவனடி சேர்ந்தார்.

## திருச்சிற்றம்பலம்

### செருத் துணை நாயனார்

சோழ நாட்டில் உள்ள தஞ்சாவூரிலே சைவ சமயத்தில் அதீத பற்றுள்ள செருத்துணை நாயனார் என்றொரு சிவனடியார் இருந்தார். அவர் திருவாரூரில் வான்மீக நாதரைத் தரிசனம் செய்து கொண்டிருந்த போது அந்நாட்டு அரசரான கழற் சிங்க நாயனாரது துணைவியார் கோயிலில் பூமாலை கட்டும் மண்டபத்திற்கு முன்னால் இருந்த ஒரு பூவை எடுத்து முகர்ந்து பார்த்ததைக் கண்டு, சுவாமிக்கு மாலை கட்டுவதற்காக வைத்திருந்த பூவை எடுத்து முகர்ந்து பார்த்ததாக நினைத்து அரசியாரின் மூக்கை உடைவாளினாலே அறுத்தார். பின் பல காலம் திருத் தொண்டு செய்து, சிவனின் திருவடியை அடைந்தார்.

## திருச்சிற்றம்பலம்

### புகழ்த்துணை நாயனார்

செருவிபுத்தூரிலே ஆதி சைவரான புகழ்த்துணை நாயனார் என்றொரு சிவபக்தர் இருந்தார். அவர் மிக்க அன்போடு பரமசிவனை அர்ச்சனை செய்து வந்தார். மழைஇன்மையால் அவ்வூரில் பஞ்சம் ஏற்பட்டது. அதனால் அவர் பசியோடு தினமும் அர்ச்சனை செய்து வந்தார். ஒரு நாள் அவர் பரமசிவனுக்கு குடத்தினால் பால் ஊற்றி அபிசேகம் செய்யும் பொழுது பசிக் களைப்பினால் கை சோர்ந்து குடம் பரமசிவனது தலையிலே





விழுந்தது. நாயனார் மயங்கி பரமசிவனது காலடியில் வீழ்ந்தார். அப்பொழுது பரமசிவன் அங்கு தோன்றிப் "பஞ்சம் நீங்கும் வரைக்கும் உனக்கு இங்கே ஒரு காசு வைப்போம்" என்று அருளி மறைந்தார். புகழ்த்துணை நாயனார் மயக்கம் தீர்ந்து எழுந்து பீடத்தின் கீழே பரமசிவனால் வைக்கப்பட்ட காசை எடுத்தார். பஞ்சம் நீங்கிய பின்பும் பரமசிவன் பீடத்தில் காசு வைத்துக் கொண்டே இருந்தார். இப்படி நெடுங் காலம் சிவனை அர்ச்சித்துப் பரமசிவனது திருவடி நிழலை அடைந்தார்.

## திருச்சிற்றம்பலம்

### கோட்புலி நாயனார்

சோழ நாட்டின் சேனாதிபதியாகக் கடமை புரிந்த கோட்புலி நாயனார், தனது தொழில் மூலம் வரும் வருமானம் முழுவதையும் பரமசிவனுக்கு அமுது செய்வதற்காக நெல்லு வாங்கிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

இப்படி இருக்கும் நாளிலே அரசனின் ஆணைப்படி அயல்நாட்டு அரசனோடு யுத்தம் செய்யக் கோட்புலி நாயனார் புறப்பட்டார். அதற்கு முன் தான் திரும்பி வரும் வரை சுவாமிக்கு அமுது படைக்க வேண்டிய அளவு நெல்லைக் கொள்வனவு செய்து தனது சுற்றத்தவர்களிடம் கொடுத்து; " தினமும் சுவாமிக்கு வேண்டியஅளவு நெல்லைக் கொடுங்கள். எக்காரணம் கொண்டும் நீங்கள் ஒரு மணி நெல்லைக்கூட எடுத்து உண்ணக்கூடாது" என்று கட்டளையிட்டுவிட்டுச் சென்றார்.

அவர் போருக்குச் சென்றபின்பு நாட்டில் பெரும் பஞ்சம் உண்டானது. அவரது உறவினர்கள், சுவாமிக்கெனக் கோட்புலி நாயனார் கொடுத்த நெல்லை எடுத்துச் சோறாக்கி உண்டனர். போருக்குச் சென்ற கோட்புலி நாயனார் பகை அரசனை வென்று, அவனது திரவியங்கள் யாவற்றையும் கவர்ந்து கொண்டு நாடு திரும்பினார்.

அவர் வீட்டுக்கு வந்தபோது, சுவாமிக்கு அமுது படைக்கவென கொடுத்து விட்டுச் சென்ற நெல்லைத் தமது சுற்றத்தவர் உண்டதை அறிந்து, கடும் கோபம் கொண்டு, அவர்கள் எல்லோரையும் அழைத்தார். அவர்கள் தப்பிச் செல்லாது காவலாளர்கள் காத்து நின்றனர். கோட்புலி நாயனார் நெல்லை எடுத்து உண்ட தனது தாய், தந்தை உடன் பிறந்தோர், அவர்களது மனைவி பிள்ளைகள் அனைவரையும் உடைவாளை உருவி வெட்டிக் கொன்றார். ஒரு கைக்குழந்தை மட்டும் தப்பியது. அதைக் கண்ட காவலாளன்; "இக்குழந்தை அவ்அன்னத்தை உண்டிராது. இக்குடி வளர இக் குழந்தையைக் கொல்லாது இருத்தல் வேண்டும்" என்று பணிவுடன் சொன்னான்.

"இது கைக்குழந்தையானாலும் சுவாமிக்கு அமுது செய்யவென வைத்த நெல்லை உண்ட தாயின் முலைப்பாலைக் குடித்தது" என்று கூறி அக்குழந்தையையும் வாளால் வெட்டிக் கொன்றார்.

அப்பொழுது சிவபெருமான் கோட்புலி நாயனார் முன் தோன்றி; "அன்பனே, உன்வாளினால் வெட்டப்பட்டவர்கள் பாவத்தில் இருந்து நீங்கி சுவர்க்கத்தை அடைவார்கள். நீ என்னுடன் வா" என்று அவரை அழைத்துச் சென்றார்.

## திருச்சிற்றம்பலம்

### பூசலார் நாயனார்

தொண்டை நாட்டிலே, பூசலார் என்றொரு சிவபக்தர் இருந்தார். அவர் சிவனடியார்களுக்கு வேண்டியவற்றை எப்படியும் தேடிக்கொடுத்து விடுவார். அவரது மனதில் நெடுநாளாகப் பரமசிவனுக்கு ஒரு கோயில் கட்டவேண்டும் என்ற ஆசை இருந்தது. அதற்காகப் பொருள் தேடினார். போதியளவு பொருள் கிடைக்காமையால் தனது மனத்தில் கோயிலைக் கட்டத் தொடங்கினார்.

மனதினால் கோயில் கட்டுவதற்குரிய பொருட்களையும் வேலையாட்களையும் தேடி, சுபதினத்திலே அத்திபாரம் இட்டு பல நாட்கள் கண்விழித்திருந்து கோயிலைக் கட்டிமுடித்தார்.

அந்நாட்டு அரசனான காடவராஜன், காஞ்சிபுரத்திலே மிகப்பெரியதொரு சிவாலயத்தைக் கட்டினான். அதிலே பரமசிவனைப் பிரதிட்டை செய்ய நாள் குறித்தான். பூசலார் நாயனாரது பக்தியின் வலிமையை உலகிற்கு எடுத்துக் காட்ட விரும்பிய பரமசிவன் அவன் பிரதிட்டை செய்யம் நாளிற்கு முதல் நாள் இரவு கனவில் தோன்றி; ''சிவபக்தனே, உனது நாட்டில் வாழும் பூசலார் என்பவன் எனக்கு ஒரு கோயில் கட்டியிருக்கிறான். அதில் நாளை என்னைப் பிரதிட்டை செய்யவுள்ளான். உனது கோயில் பிரதிட்டையை இன்னொரு தினம் செய்'' என்று அருளி மறைந்தார்.

காடவராஜன் நித்திரைவிட்டெழுந்து, பூசலார் நாயனாரைத் தரிசிக்க விரும்பி, திருநின்றவூரை அடைந்து; ''பூசலார் நாயனார் கட்டிய கோயில் எங்கு உள்ளது?'' என்று அங்குள்ளவர்களை விசாரித்தான்.

அவர்கள் சிரித்துவிட்டு; ''இங்கே அப்படி யாரும் கோயில் கட்டவில்லை'' என்றனர். பின் அரசன் அவ்வூர்ச் சிவத் தலத்திற்குச் சென்று அங்குள்ள பிராமணர்களை அழைத்து ''இவ்வூரிற் பூசலார் என்பவர் யார்....?'' என்று கேட்டான்.

''அவர்ஒரு பிராமணர். இச்சிவாலயத்தின் அருகே இருக்கிறார். நாம் சென்று அவரை அழைத்து வருகிறோம்'' என்றனர்.

புறப்பட்ட பிராமணர்களைத் தடுத்த அரசன், தானே அவ்விடஞ் சென்று பூசலாரைக் கண்டு, அவரை வணங்கி; ''சுவாமி தாங்கள் பெரியதொரு சிவாலயம் கட்டி இன்று பிரதிட்டை செய்வதாகப் பரமசிவன் சொன்னார். அதை அடியேன் கண்குளிரப் பார்த்தல் வேண்டும்'' என்று சொன்னான்.

பூசலார் அதைக்கேட்டு வியப்படைந்தார். பின் பரமசிவன் தன்னை மதித்து, அரசனை அங்கு அனுப்பியதை நினைத்து மகிழ்ந்தார். பின் தன்மனதில் கோயில் கட்டிய வரலாற்றை எடுத்துச் சொன்னார்.

அதைக்கேட்ட காடவராஜன் மகிழ்ந்து அவரது காலடியில் வீழ்ந்து வணங்கி விட்டு, தனது நாட்டிற்குச் சென்றான். பூசலார் நாயனார் தன் மனதில் கட்டிய திருக்கோயிலிலே பரமசிவனைப் பிரதிட்டை செய்து நெடுங்காலம் பூசை செய்து சிவபதம் அடைந்தார்.

## திருச்சிற்றம்பலம்

## மங்கையற்கரசியார்

மதுரையை ஆண்ட நெடுமாற நாயனாரின் பட்டத்தரசியான மங்கையற்கரசியார், சைவசமயத்தின் மீது அதீத பற்றுள்ளவர். தனது கணவர் சமண சமயத்திற்கு மாறியமையால் துன்பப்பட்டுப் பெருமுயற்சி எடுத்து மீண்டும் தனது கணவனைச் சைவ சமயத்திற்கு மாற்றினார்.. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரால் புகழ்ந்து பதிகம் பாடப் பெற்றவர். தனது கணவனுடன் சேர்ந்து பாண்டிய நாடெங்கும் சிவாலயங்கள் அமைத்துச் சிவத்தொண்டு புரிந்தவர். சிவனடியார்களைச் சிவன் என மதித்துத் தொழுது வாழ்ந்த அவர், கணவனுடன் சிவனின் பாதத்தை அடைந்தார்.





## திருச்சிற்றம்பலம்

## நேச நாயனார்

காம்பிலி நாட்டிலே நேச நாயனார் என்றொரு சிவனடியார் இருந்தார். அவர் பரமசிவனைத் தனது மனதில் இருத்தி எந்நேரமும் பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு சிவனடியார்களுக்குப் பணிவிடை செய்வார். சிவனடியார்களுக்கு வேட்டியும் கோவணமும் நெய்து கொடுப்பார். சிவனடியார்களை வணங்கித் துதித்துக் கொண்டிருந்து நேச நாயனார் சிவபதம் அடைந்தார்.

## திருச்சிற்றம்பலம்

## கோச் செங்கட் சோழ நாயனார்

சோழ நாட்டிலே சந்திர தீர்த்தத்தின் பக்கத்திலே பெரியதொரு காடு இருந்தது. அக்காட்டிலே நின்ற நாவல் மரத்தின் கீழே ஒரு சிவலிங்கம் தோன்றியது. அதைக் கண்ட வெள்ளை யானை ஒன்று தினமும் நீராடித் தனது தும்பிக்கைக்குள் கங்கை நீரை உறிஞ்சிவந்து அச்சிவலிங்கத்திற்கு அபிசேகம் செய்தது. பின் காட்டு மலர்களை பறித்துக் கொண்டு வந்து சிவலிங்கத்தின் மீது தூவி வணங்கியது. இப்படித்தினமும் அது வணங்கி வந்தது. அதனால் அத்தலத்தை ''திருவானைக்கா'' என்று மக்கள் அழைத்தனர்.

சிவலிங்கத்தின் மேல் இலைகள் பழுத்துச் சொரிவதைக் கண்ட சிலந்தி ஒன்று, சிவலிங்கத்தின் மீது இலைகள் விழாவண்ணம் சிவலிங்கத்திற்கு மேலே வலை ஒன்றை அமைத்தது. அதைக்கண்ட யானை அவ்வலையை அறுத்துச் சுத்தப்படுத்தியது. யானை தனது வலையை அறுத்ததனால் கவலை கொண்ட சிலந்தி, தினமும் வலையைப் பின்னியது.

யானை சிவலிங்கத்தின் மேல் அசுத்தம் இருப்பதாக நினைத்து அதை அறுத்துத் துப்புரவு செய்து வந்தது. இதனால் கோபமுற்ற சிலந்தி யானை விழுந்து சிவலிங்கத்தை வணங்கும்போது அதன்தும்பிக்கையுள் நுழைந்து கடித்தது. வேதனையைத் தாங்க முடியாத யானை, மரங்களின் மீதும் கற்பாறைகள் மீதும் தனது தலையை மோதியதால் இறந்தது. தும்பிக்கையுள் இருந்த சிலந்தியும் இறந்து போனது. இறந்த யானை திருக்கைலாய மலையை அடைந்து சிவனுக்குத் திருத்தொண்டுகள் செய்து வந்தது.

சிலந்தி சோழ அரசனின் மனைவியான கமலவதியின் வயிற்றில் மகவாய் வந்து அடைந்தது. கமலவதிக்கு பிரசவ வேதனை வந்தபோது சோதிடர் ஒருவர்; ''அரசனின் பிள்ளை ஒரு நாளிகை கழித்துப் பிறந்தால் மூவுலகையும் அரசாளும்'' என்று சொன்னான். அதைக் கேட்ட கமலவதி; '' இப்போது இப்பிள்ளை பிறவாது ஒரு நாளிகை கழித்துப் பிறப்பதற்காக என்னைத் தலைகீழாகக் கட்டித் தொங்க விடுங்கள்'' என்றாள். அதன்படி சேவகர்கள் கமலவதியைத் தலை கீழாகக் கட்டித் தொங்கவிட்டனர். சோதிடர் குறித்த நேரத்தில் கமலவதிக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அதைத்தூக்கி உச்சி மோர்ந்த கமலவதி அக்குழந்தையின் கண்கள் சிவப்பாக இருந்தமையினால்; ''என் கோச் செங்கண்ணானோ'' என்று அழைத்து உயிர் துறந்தார். கோச் செங்கணாச்னை சோழ மன்னன் அன்புடன் வளர்த்தான். உரிய பருவம் வந்ததும் முடிசூட்டி விட்டு அரசை அவனிடம் கையளித்து விட்டு, காட்டுக்குத் தவம் செய்யப் போனான்.

கோச் செங்கட்சோழ நாயனார் பரமசிவனது திருவருளினாலே சைவ நெறியை மேலோங்கச் செய்தார். பல திருத்தலங்களைக் கட்டுவித்தார். திருவானைக் காவிலே, நாவல் மரத்தின் கீழ் இருந்த பரமசிவனுக்குப் பெரிய தொரு ஆலயம் அமைத்தார். சோழ நாட்டின் சிற்றூர்கள் தோறும் சிவாலயங்கள் அமைத்தார். சிதம்பரத்தில் வாழ்கின்ற தில்லை வாழ் அந்தணர்களுக்குத் தனித்தனி வீடுகள் கட்டிக் கொடுத்தார். பின்னும் பல திருத்தொண்டுகளைச் செய்து, சிவபதம் அடைந்தார்.

## திருச்சிற்றம்பலம்

### திருநீல கண்ட யாழ்ப்பாண நாயனார்

திரு வெருக்கத்தம்புலியூரிலே திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் என்றொரு சிவனடியார் இருந்தார். அவர் திருத்தலங்கள் தோறும் சென்று, பரமசிவனது திருப்புகழை யாழில் இட்டுப் பாடுவார். அவர் பாண்டிய நாட்டிற்குச் சென்று மதுரையில் கோயில் கொண்டிருந்த சொக்கநாத சுவாமியின் திருக்கோயிலை அடைந்து பரமசிவனின் திருப்புகழை யாழில் இட்டு வாசித்தார். அவரின் யாழ் இசையில் மயங்கிய சொக்கநாதர் அன்றிரவு அடியார்களின் கனவிற்தோன்றித் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரை அழைத்து வந்து தனக்கருகில் இருந்து யாழ் வாசிக்கும் படி பணித்தார். மறு நாள் அடியார்கள் வந்து திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரை அழைத்துச் சென்று சுவாமியின் திருவுருவின் முன் இருத்தி யாழை வாசிக்கும் படி சொன்னார்கள்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர், சுவாமியின் திருவுருவின் முன் அமர்ந்து யாழை வாசித்தார். அப்பொழுது; ''பாணர் அன்போடு வாசிக்கின்ற யாழ் பூமியிலே உள்ள ஈரம் காரணமாகப் பழுதடைந்து விடும். ஆதலால் இவருக்குப் பொற்பலகை இடுங்கள்''என்று ஆகாயத்தில் இருந்து ஓர் அசரீரி எழுந்தது. அடியார்கள் பொற்பலகை இட்டனர். பாணர் அதில் ஏறிஇருந்து யாழ் வாசித்தார். பின்பு பல தலங்களையும் வணங்கிக் கொண்டு திருவாரூர் சென்ற திருநீல கண்ட யாழ்ப்பாணர் பரமசிவனை வணங்கி அவனின் புகழை யாழிலிட்டு வாசித்தார். பரமசிவன் வட திசையில் ஒரு வாசல் அமைத்து அதனூடாக உள்ளே வரும்படி அவரை அழைத்தார். உள்ளே சென்ற திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் வான்மீக நாதரை வணங்கினார். அதன்பின் சீாகாழிக்குச் சென்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரை வணங்கி, அவருடன் திருத்தலங்கள் தோறும் சென்று அவர் பதிகம் பாட, அதை யாழில் இட்டு வாசித்தார். பின் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் திருமணச்சடங்கில் கலந்து, அங்கு தோன்றிய சோதியிற் கலந்து, சிவனடி சேர்ந்தார்.

## திருச்சிற்றம்பலம்

### சடைய நாயனார்

திரு நாவலூரிலே, ஆதிசைவர் குலத்திலே, சடைய நாயனார் என்றொரு சிவனடியார் இருந்தார். அவர் சிவனடியார்களிடத்துப் பெரும் அன்புபூண்டு, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வந்தார். சிவபெருமான் மேல் கொண்ட பக்தியின் வலிமையால் உலகம் புகழும் சுந்தரமூர்த்தி நாயனாரைத் தனது புத்திரனாகப் பெற்றார்.



## திருச்சிற்றம்பலம்

### இசை ஞானியார்

சடையனார் நாயனாரின் மனைவியார் இசைஞானியார். தம்பிரான் தோழரான சுந்தரமூர்த்தி நாயனாரின் தாயார். சிவபக்தியும் கணவன் மீது அன்புங் கொண்ட இசைஞானியார் சிவனடியார்களைச் சிவனெனப் போற்றி வாழ்ந்து சிவபதம் அடைந்தார்.

## திருச்சிற்றம்பலம்

பதிகம்

திருச்சிற்றம்பலம்

என்று மின்பம் பெருகு மியல்பினா
லொன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்

திருச்சிற்றம்பலம்

### குருபூசைத் தினங்கள்

#### தை

| | |
|---|---|
| மிருகசீரிடம் | கண்ணப்பநாயனார் |
| திருவாதிரை | அரிவாட்டாயநாயனார் |
| உத்திரம் | சண்டேசுரநாயனார் |
| விசாகம் | திருநீலகண்டநாயனார் |
| சதயம் | அப்பூதியடிகநாயனார் |
| ரேவதி | கலிக்கம்பநாயனார் |

#### மாசி

| | |
|---|---|
| அத்தம் | எறிபத்தநாயனார் |
| பூராடம் | காரிநாயனார் |

# குருபூசைத் தினங்கள்

## தை

| | |
|---|---|
| மிருகசீரிடம் | கண்ணப்பநாயனார் |
| திருவாதிரை | அரிவாட்டாயநாயனார் |
| உத்திரம் | சண்டேசுரநாயனார் |
| விசாகம் | திருநீலகண்டநாயனார் |
| சதயம் | அப்பூதியடிகநாயனார் |
| ரேவதி | கலிக்கம்பநாயனார் |

## மாசி

| | |
|---|---|
| அத்தம் | எறிபத்தநாயனார் |
| பூராடம் | காரிநாயனார் |
| சதயம் | கோச்செங்கட்சோழநாயனார் |

## பங்குனி

| | |
|---|---|
| ரோகிணி | நேசநாயனார் |
| திருவாதிரை | கணநாதநாயனார் |
| பூசம் | முனையடுவநாயனார் |
| சுவாதி | காரைக்காலம்மையார் |
| சதயம் | தண்டியடிகநாயனார் |

## சித்திரை

| | |
|---|---|
| பரணி | சிறுத்தொண்டநாயனார் |
| ரோகிணி | மங்கையர்க்கரசியார் |
| திருவாதிரை | விறண்மிண்டநாயனார் |
| அத்தம் | உமாபதிசிவாச்சாரியார் |
| சித்திரை | இசைஞானியார் |
| சுவாதி | திருக்குறிப்புத்தொண்டநாயனார் |
| சதயம் | திருநாவுக்கரசுநாயனார் |





## வைகாசி

| | |
|---|---|
| பரணி | கழற்சிங்கநாயனார் |
| பூசம் | நமிநந்தியடிகநாயனார் |
| பூசம் | சேக்கிழார்நாயனார் |
| ஆயிலியம் | சோமாசிமாறநாயனார் |
| மூலம் | திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் |

## ஆனி

| | |
|---|---|
| மகம் | மாணிக்கவாசகசுவாமிகள் |
| பூரம் | அமர்நீதிநாயனார் |
| ரேவதி | கலிக்காமநாயனார் |

## ஆடி

| | |
|---|---|
| கார்த்திகை | மூர்த்திநாயனார் |
| கார்த்திகை | புகழ்ச்சோழநாயனார் |
| திருவாதிரை | கூற்றுவநாயனார் |
| சித்திரை | பெருமிழலைக்குறும்பநாயனார் |
| சுவாதி | சுந்தரமூர்த்திநாயனார் |
| சுவாதி | சேரமான்பெருமான்நாயனார் |
| கேட்டை | கலியநாயனார் |
| கேட்டை | கோட்புலிநாயனார் |

## ஆவணி

| | |
|---|---|
| பூசம் | செருத்துணைநாயனார் |
| ஆயிலியம | புகழ்த்துணைநாயனார் |
| ஆயிலியம் | அதிபத்தநாயனார் |
| மகம் | இளையான்குடிமாறநாயனார் |
| உத்திரம் | மறைஞானசம்பந்தசிவாச்சாரியார் |
| அனுசம் | குலச்சிறைநாயனார் |
| மூலம் | குங்கிலியக்கலயநாயனார் |

## புரட்டாதி

| | |
|---|---|
| அச்சுவினி | உருத்திரபசுபதிநாயனார் |
| ரோகிணி | திருநாளைப்போவார்நாயனார் |
| பூரம் | அருணந்திசிவாச்சாரியார் |
| சதயம் | நரசிங்கமுனையரையநாயனார் |
| உத்தராடம் | ஏனாதிநாதநாயனார் |

## ஐப்பசி

| | |
|---|---|
| அச்சுவினி | திருமூலநாயனார் |
| பரணி | நெடுமாறநாயனார் |
| கார்த்திகை | இடங்கழிநாயனார் |
| பூசம் | சத்திநாயனார் |
| சுவாதி | மெய்கண்டதேவர் |
| அனுசம் | பூசலார்நாயனார் |
| மூலம் | ஐயடிகள்காடவர்கோன்நாயனார் |

## கார்த்திகை

| | |
|---|---|
| கார்த்திகை | கணம்புல்லநாயனார் |
| உத்திரம் | மெய்ப்பொருள்நாயனார் |
| அத்தம் | ஆனாயநாயனார் |
| மூலம் | மூர்க்கநாயனார் |
| பூராடம் | சிறப்புலிநாயனார் |
| மகம் | ஆறுமுகநாவலர். |

## மார்கழி

| | |
|---|---|
| திருவாதிரை | சடையநாயனார் |
| உத்திரம் | இயற்பகைநாயனார் |
| சுவாதி | மானக்கஞ்சாறநாயனார் |
| பூராடம் | சாக்கியநாயனார் |
| ரேவதி | வாயிலார்நாயனார் |